# திருமறைத்தீபம்



**BIBLE LAMP**
**திருமறைத்தீபம்**


**Issue No: 1 of 2003**
**ISBN 1173-7255**



இக்காலாண்டுப் பத்திரிகை யில் வெளிவரும் பெயர் குறிப்பிடப்படாத ஆக்கங்கள் அனைத்தும் ஆசிரியரால் எழுதப்பட்டவை. ஆசிரியரின் எழுத்துமூல அனுமதியின்றி பத்திரிகையின் எப்பகுதியை யும் எவ்விதத்திலும் பிரசுரிக் கக்கூடாது.



ஆசிரியர்: ஆர். பாலா

**Editor**: R. Bala
**Publisher**: Sovereign Grace Publications
**Address**: P O Box 62 159
Sylvia Park, Auckland 1006
New Zealand
**Telephone**: 64 9 272 8061
**Fax**: 64 9 272 8032
**email**: bala@ihug.co.nz
**Web site**: www.biblelamp.org


"கொள்கைகளையும் கோட்பாடுகளையும் புறக்கணித்து, சத்தியத்தை வெளிப்படையாக எடுத்துக் கூறாத ஒரு பத்திரிகையை இலக்கியத்தடங்கல் என்றுதான் கூறவேண்டும்."

சி. எச். ஸ்பர்ஜன்
1834-1892

*தமிழ்நாட்டில் முதல்வர் ஜெயலலிதாவின் அரசு கடந்த வருடம் அக்டோபர் மாதத்தில் மதமாற்றத்தடைச்சட்டத்தைக் கொண்டு வந்துள்ளது. இது எவரும் எதிர்பார்க்காத ஒன்றாகும். இந்தியாவிலேயே சமுதாய சீர்திருத்தங்களில் முன்னணி இடத்தை வகித்தது தமிழ்நாடு. மூடநம்பிக்கைகளுக்கு எதிரான பகுத்தறிவுக் கொள்கைகள் தீப்பொறிகளாகசுடர்விட்டுத் தெரித்ததும் தமிழ்நாட்டில்தான். கண்மூடித்தனமான மத நம்பிக்கைகளை சாடிய பெரியாரை வளர்த்ததும் தமிழ்நாடுதான். இத்தனை சீர்திருத்தங்களுக்கும் பெயர்போன மாநிலம் மத ஒருமைப்பாட்டுக்கு வேட்டுவைக்கும் மதமாற்றத்தடைச்சட்டத்தையும் அறிமுகப்படுத்தியுள்ளது. பா. ஜ. க ஆட்சி செய்யும் பகுதிகளில் இச்சட்டம் கொண்டுவரப்பட்டிருந்தால் அதில் ஆச்சரியம் இருந்திருக்காது. இந்துத்துவாக்களுக்கு சோறூட்டி வளர்க்கும் கட்சி அது. இன்று திராவிட கட்சிகளில் ஒன்று இந்துத்துவக்கோட்பாட்டைக் கையில் எடுத்துக்கொண்டுள்ளது. இது இந்தியாவுக்கும், தமிழ்நாட்டுக்கும் நல்லதல்ல.*

*மதவாதத்தின் அடிப்படையில் அரசியல் நடத்துவது மிகவும் பிற்போக்கான ஒரு செயலாகும். மதவாதம் அது வளரும் நாட்டின் சமாதானத்திற்கும், உலக சமாதானத்திற்கும் ஆபத்து விளைவிக்கும் என்பதை தெலிபான் ஆப்கானிஸ்தானில் தெளிவுபடுத்தியிருக்கிறது. மதவாதம் எங்கும், எந்த மதத்தின் அடிப்படையில் எழுந்தாலும் ஆபத்துதான்.*

*தாழ்த்தப்பட்ட மக்களை மதம்மாற்றிக் கொச்சைப்படுத்தும் சக்திகளிடமிருந்து அவர்களைக் காப்பதற்காகவே இந்தச் சட்டம் என்று தமிழக அரசு காரணம் கூறுகிறது. தலித் மக்கள் சாதிப்பித்தர்களாலும், உயர்சாதி இந்துக்களாலும் மிதிக்கப்படுபவர்களாக இருக்கலாம். ஆனால், அவர்கள் சிந்திக்கத்தெரியாத தொட்டில் குழந்தைகளல்ல. உயர்சாதி இந்துக்களின் கொடுமைகளில் இருந்து தப்பி சுயமரியாதையுடன் தாம் பிறந்த மண்ணில் வாழ வேண்டும் என்ற அடிப்படைத்தேவையை நிறைவேற்றிக் கொள்வதற்காக அவர்கள் தாங்களாகவே வேறு மதங்களை நாடிப்போகிறார்கள். இது ஒரு நூறாண்டுகளுக்கு மேலாக இந்தியாவில் நடந்து வந்திருக்கின்றது. தலித்துக்களை மற்ற மதத்தார் வற்புறுத்தி மதம்மாற்றுவதாக சொல்லுவது சரியல்ல. இச்சட்டம் உயர்சாதி இந்துக்கள் தலித்துக்களைத் தொடர்ந்து மிதிக்க வழி வகுக்கிறது. அதுமட்டுமல்லாமல் இந்துத்துவத்தை தமிழகத்தில் பலவந்தமாகத் திணிக்கும் முயற்சியின் ஆரம்ப கட்டம் இது. இதனால் இந்துக்களல்லாதவர்களும், சிறுபான்மை மக்களும் ஓரங்கட்டப்பட்டு பாதிப்புக்குள்ளாவார்கள். - ஆர்.*

# ஏன் பிரசங்கம்?



*ஏன் பிரசங்கம்? என்ற கேள்வி உங்களுக்கு ஆச்சரியத்தைத் தரலாம். இன்று பிரசங்கத்தில் அநேகருக்கு ஆர்வம் குன்றி-யிருக்கிறது. கிறிஸ்தவ சபைகளில் பிரசங்கத்திற்கு அதிக மதிப்புக் கொடுத்து ஆர்வத்துடன் உழைத்து பிரசங்கத்தைத் தயாரிக்கும் போதகர்களை விரல்விட்டு எண்ணிவிடலாம். இன்று பிரசங்கி-கள் பிரசங்கிப்பதைவிட ஜெபக்கூட்டங்களையும், சுகமளிப்புக் கூட்டங்களையும், மனித உணர்வுகளுக்குத் தீனிபோடும் இன்னிசைக்கச்-சேரிகளையுமே அதிகமாக நடத்தி வருகிறார்கள். அத்தோடு பிரசங்கம் என்ற பெயரில் உளரிக்கொட்டிக்கொண்டிருப்பவர்களே தமிழ் சபைகளில் அதிகம். இதனால் பிரசங்கத்தைக் கேட்டுவளர வேண்டும் என்ற ஆர்வத்தோடு பிரசங்கத்தைக் கேட்கத்துடிக்கும் ஆத்துமாக்களுடைய தொகையும் குறைந்து வருகின்றது. இதற்குப் பல காரணங்கள் இருந்தாலும் முக்கியமாக பிரசங்-கத்தைப்பற்றிய வேதபூர்வமான சிந்தனைகள் இல்லாததும், அதன் காரணமாக ஏற்பட்டுள்ள பிரசங்கத்தைக்குறித்த அவநம்பிக்கையுமே முக்கிய காரணங்கள் என்று கூற வேண்டும். அநேக காலத்துக்கு முன்பு வாழ்ந்த ஒரு பழம் போதகர் வேதபூர்வமான பிரசங்கிகளின் அவசியத்தைப் பற்றிப்பேசும்போது, "பரலோகத்தின் அனுபவத்தைத் தன்னோடு பிரசங்க மேடைக்குக் கொண்டு-வந்து, இன்னொரு உலகத்தின் எல்லைக் கோட்டுக்குள் இருந்து பேசுகிறவனைப்-போன்ற தேவ மனிதர்களே இன்று நமக்குத் தேவை" என்று கூறியிருக்கிறார். ஆத்துமாக்களின் இருதயத்தைப் பிளந்து அவர்களைக் கர்த்தரின் சந்நிதானத்-திற்குக் கொண்டுவரக்கூடிய வல்லமை வாய்ந்த வேதபூர்வமான பிரசங்கத்தைப் பற்றி இந்த ஆக்கத்திலே பார்ப்போம்.*

## பிரசங்கம் கர்த்தரால் தெரிவுசெய்யப்பட்ட தெய்வீக வழிமுறை (Divine method)

*பிரசங்கம் கர்த்தரால் தெரிவு செய்யப்பட்ட தெய்வீக வழி முறையாகும். அதனால்தான் வேறு எதையும்விட பிரசங்கத்திற்கு நாம் அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். இதை வேதமே தெளிவாக விளக்குகிறது. பழைய ஏற்பாட்டில் ஈநோக்கைப் பாருங்கள் (யூதா 1:14). அவன் கர்த்தருடைய செய்தியை முன்னறிவித்தான். அதாவது தீர்க்கதரிசனமாக பிரசங்கித்தான். இதேபோல்தான் நோவாவும் 2 பேதுரு 2:5) நீதியின் பிரசங்கியாக இருந்தான். ஆபிரகாமை நாம் மறக்க முடியுமா? (ஆதி. 18:19), கர்த்தர் தன்னுடைய மக்களை வழிநடத்தும்படியாக அவனைத் தெரிந்து கொண்டார். ஆபிரகாம் கர்த்தருடைய வார்த்தையைப் பிரசங்கித்து ஆத்துமாக்களை வழிநடத்தினான். மோசே நாம் பார்க்கும் அடுத்த பிரசங்கி. அவனுடைய பிரசங்கங்களை நாம் பழைய ஏற்பாட்டில் வாசிக்கிறோம். கர்த்தரிடமிருந்து நீதிச்சட்டங்களைப் பெற்று இஸ்ரவேலர் மத்தியில பிரசங்கித்தான் மோசே. பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் அனைவரும் பிரசங்கிகளாகவே இருந்திருக்கிறார்கள். ஏசாயா, எரேமியா, எசேக்கியேல், யோனா, ஆமோஸ், ஆகாய், மல்கியா எப்லோருமே கர்த்தருடைய செய்தியை அவருடைய மக்கள் மத்தியிலும், ஏனைய நாடுகளிலும் பிரசங்கித்திருக்கிறார்கள். கர்த்தருடைய சித்தத்தை பிரசங்கத்தின்*

மூலமாகவே தீர்க்கதரிசிகள் இஸ்ரவேலர்களுக்கு அறிவித்திருக்கிறார்கள்.

புதிய ஏற்பாட்டிலும் நாம் இதைத்தான் பார்க்கிறோம். மனந்திரும்பி ஞானஸ்நானத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள் என்று யோவான் ஸ்நானன் தன் வாழ்நாள் முழுவதும் பிரசங்கித்தான். அவனை ஒரு பிரசங்கியாகவே புதிய ஏற்பாட்டில் பார்க்கிறோம். இயேசு கிறிஸ்து தன்னுடைய பிதாவின் கட்டளைகளை இவ்வுலகில் நிறைவேற்ற வந்தபோது பிரசங்கிகளிலெல்லாம் சிறந்த பிரசங்கியாகவே வந்தார். போதிப்பதும், பிரசங்கிப்பதும் அவருடைய வாழ்நாளில் முக்கிய பணிகளாக இருந்தன. பெந்தகொஸ்தே கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் இயேசு கிறிஸ்து செய்த அற்புதங்களையே பெரிதுபடுத்துவார்கள். அவர்கள் கிறிஸ்து தன் பிரசங்கத்தின் மூலமாகவும், போதனையின் மூலமாகவும் மட்டுமே ஆத்துமாக்களுக்கு இரட்சிப்பை அளித்தார் என்ற உண்மையை வேதத்தில் பார்க்க மறுக்கிறார்கள். இயேசு கிறிஸ்துவின் பிரசங்கத்தைக் கேட்டவர்கள், அந்த மனுஷன் பேசுகிறதுபோல் ஒருவரும் ஒருக்காலும் பேசினதில்லை (பிரசங்கித்ததில்லை) என்றார்கள் (யோவான் 7:47).

இயேசு கிறிஸ்து பயிற்சியளித்து, சபையை நிறுவுவதற்காக அனுப்பிய அப்போஸ்தலர்களும் சிறந்த பிரசங்கிகளாகவே இருந்தனர். இயேசு அப்போஸ்தலர்களை பிரசங்கம் பண்ணும்படியாக அனுப்பினார் என்று மாற்கு 3:14 சொல்லுகிறது. அப்போஸ்தலர் 2:14-ல் பேதுரு தன்னுடைய குரலை உயர்த்திப் பிரசங்கித்தான் என்று வாசிக்கிறோம். பரிசுத்த ஆவியின் வல்லமையுடன் அவன் பிரசங்கித்தபோது அன்று மூவாயிரம் பேர் கர்த்தரிடமிருந்து இரட்சிப்பைப் பெற்றுக்கொண்டார்கள் என்று அப்போஸ்தலர் நடபடிகள் சொல்லுகிறது. அப்போஸ்தலர்களுடைய பிரசங்கத்தால் சபை தொடர்ந்து வளர்ச்சியடைந்தது என்று அப்போஸ். 6:7ல் வாசிக்கிறோம். பவுல் எபேசிய சபை மூப்பர்களுக்கு பிரியாவிடை அளித்துப் பேசிய பிரசங்கத்தில் தன்னுடைய வாழ்நாள் முழுவதையும் பிரசங்கிப்பதிலும், போதிப்பதிலுமே செலவளித்திருப்பதாகக் கூறியிருப்பதைப் பார்க்கிறோம் (அப்போஸ்தலர். 20:18-21).

திருச்சபையின் வரலாற்றைப் பார்த்தாலும் பிரசங்கம் செய்வதே திருச்சபைத் தலைவர்களின் முதன்மையான பணியாக இருந்திருக்கின்றது. வல்லமையான பிரசங்கத்தின் மூலமாகவே திருச்சபையிலும், நாடுகளிலும் எழுப்புதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. இதற்கு உதாரணமாக வேல்ஸ் நாட்டில் டேனியல் ரோலன்ட் (Daniel Rowland), ஹொவல் ஹெரிஸ் (Howel Harris), வில்லியம் வில்லியம்ஸ் (William Williams), இங்கிலாந்தில் ஜோர்ஜ் விட்பீல்ட் (George Whitefield), அமெரிக்காவில் ஜொனத்தன் எட்வர்ட்ஸ் (Jonathan Edwards) ஆகியோரின் பிரசங்க ஊழியங்களைக் குறிப்பிடலாம். சபைகள் வளர்ச்சியடைந்து சீர்திருத்தவாதம் தலைதூக்கியிருந்த காலங்களிலெல்லாம் பிரசங்கம் உன்னதநிலையில் இருந்திருக்கின்றது. உலகின் தலைசிறந்த சபைத்தலைவர்களாக இருந்துள்ள மார்டின் லூதர் (Martin Luther), ஜோன் கல்வின் (John Calvin), சார்ள்ஸ் ஸ்பர்ஜன் (Charles Spurgeon), மார்டின் லொயிட் ஜோன்ஸ் (Martyn Lloyd Jones) போன்றோரெல்லாம் பிரசங்கத்திற்கே தங்களுடைய சபை ஊழியங்களில் அதிஉயர்ந்த இடத்தைக் கொடுத்துவந்திருக்கிறார்கள். இவர்கள் எல்லோருமே சிறந்த பிரசங்கிகள் என்பதை உலகம் அறிந்திருக்கின்றது. பிரசங்கத்திற்கு மதிப்பிருக்காத காலப்பகுதிகளிலெல்லாம் திருச்சபை வளர்ச்சியடையவில்லை, நல்ல பிரசங்கிகளையும் நாடறிந்திருக்கவில்லை.

*திருச்சபையை எழுப்பவும், அதை வளர்க்கவும் கர்த்தர் பிரசங்கத்திற்கே அதி உன்னத இடத்தை அளித்துள்ளார் என்பதை வேதமும், திருச்சபை வரலாறும் ஐயமற விளக்குகின்றன. கர்த்தரின் தெய்வீக வழிமுறையான பிரசங்கம் மறுபடியும் உயர் நிலை அடையும் போதே இன்றைய கிறிஸ்தவம் மறுமலர்ச்சியடையும்.*

## பிரசங்கம் மட்டுமே கர்த்தருடைய சித்தத்தை வெளிப்படுத்தப் பயன்படும் சிறந்த செய்திப்பரிமாற்றல்முறை (Communication channel).

*இந்த உண்மையை மிகத் தெளிவாக விளக்கும் வேத வசனம் ரோமர் 10:13-15. இந்த வசனங்களில் பவுல் பிரசங்கத்தின் முக்கியத்துவத்தைப் பற்றி விளக்குகிறார். கர்த்தரை ஆத்துமாக்கள் தொழுது கொள்ள வேண்டுமானால் அவர்கள் பிரசங்கத்தைக் கேட்டே கர்த்தரை விசுவாசிக்க வேண்டும் என்ற உண்மையை இப்பகுதி ஆணித்தரமாக விளக்குகிறது. பிரசங்கிக்கிறவன் இல்லாவிட்டால் எப்படிக் கேள்விப்படுவார்கள்? என்று பவுல் கேட்கிறார். அப்படிப் பிரசங்கிப்பதற்கு பிரசங்கிகள் அனுப்பப்பட வேண்டும் என்றும் பவுல் கூறுகிறார். ஆகவே நற்செய்தியை ஆத்துமாக்கள் கேட்பதற்கு கர்த்தர் ஏற்படுத்தி இருக்கும் செய்திப்பரிமாற்ற வழிமுறை பிரசங்கம் என்பதை இந்த வசனங்கள் விளக்குகின்றன. வேறு முறைகளைப் பயன்படுத்தக் கூடாது என்று வேதம் சொல்லவில்லையே என்று சிலர் இன்று வாதாடுகிறார்கள். சுவிசேஷத்தை விளக்குவதற்கு கர்த்தரே ஒரு செய்திப்பரிமாற்ற வழிமுறையைத் தெரிவு செய்து அதை வேதத்தின் மூலம் விளக்கியிருக்கிறபோது வேறு வழிகளில் என்ன தவறு? என்று கேட்கிறவர்களின் சிந்தனையில் நிச்சயம் கோளாறுதான். வேறு வழிகள் சிறப்பான வழிகளாக இருந்திருந்தால் கர்த்தர் பிரசங்கத்தை மட்டும் தெரிவு செய்து குறிப்பிட்டு பவுல் மூலம் பேசி இருக்க மாட்டார். கர்த்தரைப் பொறுத்தவரையில் பிரசங்கமே சுவிசேஷத்தை விளக்குவதற்கான சிறப்பான வழி முறை. இப்பகுதியில் பயன்படுத்தப்பட்டுள்ள பிரசங்கம் என்ற வார்த்தை (kerusso), அதிகாரத்துடன் தேவ செய்தியை தேவ மனிதன் பிரசங்கிப்பதை விளக்குவதாக இருக்கிறது. ஏனைய எல்லா செய்திப்பரிமாற்றல் முறைகளில் இருந்தும் பிரசங்கத்தைப் பிரித்துக்காட்ட கிரேக்க மொழியில் இருந்து ஒரு சிறப்பான வார்த்தையை வேதம் இங்கு பயன்படுத்தியுள்ளது.*

*பவுல் 1 கொரிந்தியர் 1:21ல் பைத்தியமாகத்தோன்றுகின்ற பிரசங்கத்தினாலே விசுவாசிகளை இரட்சிக்கத் தேவனுக்குப்பிரியமாயிற்றே என்று கூறுகிறார் . 17ம் வசனத்தில், "சுவிசேஷத்தை பிரசங்கிக்கவே (கர்த்தர்) என்னை அனுப்பி-னார் . . சாதுரிய ஞானமில்லாமல் பிரசங்கிக்கவே என்னை அனுப்பினார்" என்கிறார் பவுல். 23ம் வசனத்தில் "நாங்களோ சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவை பிரசங்கிக்கிறோம்" என்று சொல்கிறார். இங்கே பிரசங்கம் என்ற வார்த்தையே எல்லா இடங்களிலும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. சுவிசேஷ ஊழியத்திற்கு வேறு சாதனங்கள் அவசியமாக இருக்குமானால் ஆணித்தரமாக பிரசங்கத்தைக் குறித்து வேதம் இந்தவகையில் பேசாது. இதே பவுல், போதக-னான தீமோத்தேயுவுக்கு எழுதிய நிருபத்தில், சமயம் வாய்த்தாலும் வாய்க்கா-விட்டாலும் ஜாக்கிரதையாய் திருவசனத்தைப் பிரசங்கம் பண்ணு என்று சொல்லுகிறார் (2 தீமோத்தேயு 4:2). இந்தளவுக்கு சுவிசேஷம் சொல்லவும், போதிக்கவும் கர்த்தர் தெரிந்து கொண்டிருக்கிற செய்திப்பரிமாற்றல் முறையாக பிரசங்கம் இருக்கிறபோது அதை உதாசீனம் செய்துவிட்டு வேறு முறைகளைப்*

பயன்படுத்துவது சபை வளர்ச்சிக்கு உதவாது.

மனிதனுடைய இருதயம் கேட்பதைக் கொடுப்பதையே அடிப்படையாகக்கொண்டு ஊழியம் செய்து வருகிறவர்கள் இன்று பிரசங்கத்தை அகற்றிவிட்டு, இசை, வில்லுப்பாட்டு, நாடகம், நடனம், சினிமாப்படம் என்றெல்லாம் சமுதாயத்தில் காணப்படும் வேறு செய்திப்பரிமாற்றல் முறைகளைப் பயன்படுத்தி வருகிறார்கள். ஒரு மணி நேரத்துக்கு அமைதியாக இருந்து யாரால் பிரசங்கத்தைக் கேட்க முடியும்? மனிதனால் அத்தனை நேரம் பொறுமையாக இருக்க முடியாது என்று இவர்கள் அங்கலாய்க்கிறார்கள். அதிகாரத்தோடு இருக்கும் பேச்செல்லாம் இன்றைய சமூதாயத்துக்கு ஒத்துப்போகாது, ஆத்துமாக்களுடைய இருதயத்தை அமைதிப்படுத்தும் வழிமுறைகளே பயன்தரும் என்கிறார்கள். ஆக மொத்தத்தில், மனிதனுடைய இருதயத்தை வேதபிரசங்கத்தின் மூலம் தொட்டு, அவனை சிந்திக்க வைப்பதில் இவர்களுக்கு அக்கறையில்லை, அவன் சந்தோஷப்படும்படி எதையாவது செய்வதை மட்டுமே இவர்கள் நோக்கமாகக் கொண்டிருக்கிறார்கள். இப்படிச் சிந்திப்பவர்கள் மனிதநலவாதிகள் (Humanists). இவர்களுக்கு கர்த்தருடைய வழிமுறைகளில் நம்பிக்கையில்லை. மனிதனுக்கு எது பிடிக்கிறது? என்பதை வைத்தே இவர்களுடைய ஊழியங்கள் அமைகின்றன. இதிலிருந்து பிரசங்கத்திற்கு இன்று முக்கியத்துவம் இல்லாமல் போயிருப்பதற்கான காரணத்தை நம்மால் புரிந்து கொள்ள முடிகிறதல்லவா?

## வேதவசனங்களை விளக்கிப் போதிப்பதற்கு பிரசங்கத்தைப்போல வேறு எதுவும் பயன்படாது

கர்த்தர் தன்னுடைய சித்தத்தை மனிதனுக்கு வெளிப்படுத்த பிரசங்கத்தைத் தெரிவு செய்ததற்கு தத்துவ ரீதியான (Logical) முக்கியமான காரணமொன்றுண்டு. அந்தக் காரணத்தை நாம் இப்போது விளக்கமாக பார்ப்பது அவசியம். கர்த்தர் தம்முடைய சித்தத்தை நாம் அறிந்து கொள்ளும்படியாக எழுத்தில் விளக்கமாகக் கொடுத்திருக்கிறார். எழுத்தில் இருக்கும் வேதத்தை பரிசுத்த ஆவியின் துணையோடு மட்டுமே எவரும் விளங்கிக் கொள்ள முடியும். எல்லா விசுவாசிகளும் வேதத்தைத் தங்களுடைய சொந்த மொழியில் வாசித்து அதன் பொதுவான செய்தியை விளங்கிக்கொள்ள முடிந்தாலும், அது போதிக்கும் இறையியல் பற்றிய மேலான அறிவைப்பெற்றுக்கொள்ள வேதத்தை ஆராய்ந்து படித்து, அதில் அதிக அறிவைப்பெற்றுக் கொண்டிருப்பவர்களின் உதவியையும் நாட வேண்டியிருக்கிறது. அதற்காகவே கர்த்தர் திருச்சபையில் போதகர்களை நியமித்திருக்கிறார். போதகர்கள் வேதத்தை நல்ல முறையில் படித்து "ஜாக்கிரதையாய்" பிரசங்கம் பண்ண வேண்டிய பொறுப்பைக் கொண்டிருக்கிறார்கள் (2 தீமோத்தேயு 4). வேதத்தின் மூலமொழிகளான எபிரேயம், கிரேக்கம் ஆகிய மொழிகளைப் பயன்படுத்தி, வேத வசனங்களை நித்தமும் ஆராய்ந்து அதில் காணப்படும் பல்வேறு இறையியல் போதனைகளையும் தகுந்த முறையில், தங்களுடைய சொந்த மொழியில் ஆத்துமாக்களுக்குப் புரியும்படியாக விளக்கிச்சொல்ல போதகர்களுக்கு உதவக்கூடிய ஒரே முறை, தகுந்த முறை பிரசங்கம் மட்டுமே. வேறு எதனாலும் அதைச் செய்ய முடியாது.

வேதத்தின் ஒவ்வொரு நூலையும் வசனப்பிரகாரமாக வாராவாரம் சபையில் விளக்கிச் சொல்லி, கர்த்தர் ஆத்துமாக்களிடம் எதை எதிர்பார்க்கிறார் என்று அறிவிப்பது போதகனின் கடமை. கர்த்தரின் சித்தத்தை மக்கள் அறிந்து கொள்ள வேண்டுமானால் முதலில் வசனம் இலக்கண, இலக்கிய, வரலாற்றுப்-

பிரகாரமாக விளக்கப்பட வேண்டும். இதைப் பிரசங்கத்தைத் தவிர வேறு எந்த கருவியின் மூலமாகவும் செய்ய முடியாது. நாடகம், இசை, பாட்டு, கூத்து, சினிமா எதுவுமே இதற்கு உதவாது. லூயிஸ் டெப்னி (Lewis Dabney) எனும் இறையியல் அறிஞர், "இசை, நாடகம் போன்றவை நமக்கு சுவையூட்டுவதையே பிரதான நோக்கமாகக் கொண்டிருக்கின்றன. நம்முடைய ஆவியின் உணர்ச்சிகளைத் தட்டி எழுப்புவதே அவற்றின் உடனடி இலட்சியமாக இருக்கின்றது. ஆனால், நடைமுறை வாழ்க்கையில் ஆத்துமாக்கள் பலனுள்ள செயல்களைச் செய்யும்படிச் செய்வதே பிரசங்கத்தின் உடனடி நோக்கமாக இருக்கின்றது" என்று சொல்லியிருக்கிறார். இதிலிருந்து பிரசங்கத்திற்கும் ஏனைய செய்திப்பரிமாற்றல் முறைகளுக்குமுள்ள தொடர்பை விளங்கிக் கொள்ளலாம். வசனத்தை ஆராய்ந்து, அது போதிக்கும் உண்மையைத் தெளிவாக கேட்பவர்களுக்கு உள்ளதை உள்ளதுபோல் விளக்கிப்போதிக்க கர்த்தர் பிரசங்கத்தைத் தெரிந்தெடுத்திருக்கிறார். "வேத வசனங்களை ஆராய்ந்து இலக்கணபூர்வமாக விளக்கிப் பிரசங்கிப்பதை பிரசங்கிகளிடம் இன்று காணமுடியாதிருக்கின்றது. அநேக இறையியல் கல்லூரிகள் மூல மொழிகளில் போதிப்பதை விட்டுவிட்டன. மூல மொழிகளில் வேத வசனங்கள் எந்த முறையில் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தொடர்ந்து ஆராய்ந்து படிக்கும் போதகர்கள் இன்று குறைவு. இது மிகவும் கொடுமை!" என்று கூறும் போதகர் அல்பர்ட் என். மார்டின் (Albert. N. Martin) மார்டின் லூதர் (Martin Luther) சொன்னதை நினைவுபடுத்துகிறார்: "மொழிகளை ஆராய்ந்து படிப்பதைத் தொடருங்கள், ஆவியின் பட்டயமான வேதம் இலக்கணமாகிய உறையிலேயே தங்கியிருக்கின்றது."

இலக்கண, வரலாற்று, இலக்கிய அடிப்படையில் வேதத்தை ஆராய்ந்து விளக்கிப் போதிக்கும் கலையை இறையியல் கல்லூரிகள் இறையியல் மாணவர்களுக்கு இன்று கற்றுக்கொடுப்பதில்லை. இன்று இறையியல் கல்லூரிகளுக்குப் போய் வருபவர்கள் நல்ல பிரசங்கிகளாக இல்லாமலிருப்பதற்கு இது ஒரு முக்கிய காரணம். வேத விளக்க விதிகளின் அடிப்படையில் வேதநூல்கள் ஒவ்வொன்றும் இக்கல்லூரிகளில் ஆராய்ந்து விளக்கப்படுவதில்லை. இக்கல்லூரிகளில் இருந்து வெளிவந்து போதகர்களாக சபைகளில் இருப்பவர்களுக்கு வேத நூல்களுக்கு தகுந்த விளக்கம் கொடுக்க முடிவதில்லை. பிரசங்கம் செய்வதற்கு வேதஞானம் தேவை. அது இல்லாததால் போதகர்கள் இன்று வேறு வழிமுறைகளை நாடி ஆத்துமாக்களை ஏமாற்றிக்கொண்டிருக்கிறார்கள். பெஞ்சமின் வோர்பீல்டின் (Benjamin Warfield) பின்வரும் வார்த்தைகள் ஒவ்வொரு போதகனின் படிப்பறையிலும் பொறித்து வைக்கப்பட்டிருக்க வேண்டும்: "இன்று நம்முடைய பிரசங்க மேடைகளில் இருக்க வேண்டியவர்கள் பிரசங்கிகளாக உருவாகியுள்ள அறிஞர்களான விசுவாசிகளே."

வேதவசனங்களை விசுவாசத்துடன் பிரசங்கிப்பதற்கு போதகர்கள் இறையியல் வல்லுனர்களாக இருக்க வேண்டும். அவர்கள் முறைப்படுத்தப்பட்ட இறையியலில் (Systematic Theology) தேர்ந்த அறிவைக் கொண்டிருக்க வேண்டும். வேதத்தைப் பற்றிய பொதுவான அறிவை மட்டும் கொண்டிருந்தால் போதாது. போதகர்கள் கொடுக்கும் ஒவ்வொரு பிரசங்கமும் வேதபோதனைகள் அனைத்தையும் அரவணைத்து வேதபூர்வமான இறையியல் (Biblical Theology), முறைப்படுத்தப்பட்ட இறையியல் (Systematic Theology), வரலாற்று இறையியல் (Historical Theology) ஆகிய அனைத்தையும் ஒருங்கிணைத்து அவற்-

றோடு ஒத்துப்போவதாக இருக்க வேண்டும். தமிழ் கிறிஸ்தவ சபைகள் பரிசுத்த ஆவியின் வல்லமையோடு வரும் பிரசங்கப்பஞ்சத்தால் இன்று வாடி நிற்கின்றன. இன்று நம்மத்தியில் இருக்கும் பிரசங்கப் பஞ்சத்திற்கு வேதபூர்வ-மான வியாக்கியானப் பிரசங்கம் (Biblical Expository Preaching) செய்யக்கூடிய, உடலை வருத்தி பிரசங்கங்களைத் தயாரித்துப் பிரசங்கிக்கும் நல்ல பிரசங்கி-களான போதகர்கள் திருச்சபைகளில் இல்லாமலிருப்பதே முக்கிய காரணம்.

## போதக ஊழியத்துக்கு பிரசங்கத்தைப்போல உதவக்கூடியது வேறு எதுவுமேயில்லை

ஆத்துமாக்களை பரிசுத்தவான்களாக தயார்செய்வது ஒவ்வொரு போதக-னதும் கடமை (எபேசியர் 4:12). சபை பக்திவிருத்தி அடைவதற்கு போதகன் உழைக்க வேண்டியவனாக இருக்கிறான். அதற்காகவே போதகர்களை (மேய்ப்-பர்களை) கர்த்தர் சபைக்குக் கொடுத்திருக்கிறார். (எபேசியர் 4:13). போதகன் என்ற வார்த்தைக்குப் "போதிக்கிறவன்" என்று பொருள். மேய்ப்பனின் முழுநேர ஊழியமே போதிப்பதுதான். போதக சமர்த்தனாக இருந்து வேதத்தைப் போதிப்-பதன் மூலம்தான் போதகன் ஆத்துமாக்களைப் பரிசுத்தவான்களாக வளரும்-படிச் செய்கிறான். இந்தப்போதக ஊழியத்தைப் போதகன் பிரசங்கிப்பதன் மூலம் சபையில் நடத்திச் செல்கிறான். ஒய்வு நாளிலும், வேதப்பாடங்கள் நடக்கும் நாட்களிலும், இறையியல் போதனைகளை விசேடமாக தன் மக்க-ளுக்கு அளிக்கும் காலங்களிலும், கன்வென்சன்களிலும், பிரசங்கத்தின் மூலமாக போதகன் ஆத்துமாக்கள் பக்திவிருத்தி அடைய உழைக்கிறான். பிரசங்கத்தை நிராகரித்துவிட்டு அவன் வேறுவழிகளை நாடினால் ஆத்துமாக்களின் பக்தி-விருத்திக்கு அவனால் ஒன்றுமே செய்ய முடியாது. ஆத்துமாக்களுக்குப் பிடித்த-மான எத்தனையோ வழிகள் இருக்கின்றன. ஆனால், அந்த வழிகளின் மூலம் ஒரு நல்ல போதகனால் போதிக்க முடியாது. அவனுக்கு உதவக்கூடிய கர்த்த-ரளித்திருக்கும் நல்ல வல்லமையுள்ள கருவி பிரசங்கம் மட்டுமே.

போதக ஊழியத்துக்கு பிரசங்கம் மட்டுமே உதவக்கூடிய கருவியாக இருப்பதால்தான் போதகர்கள் படிப்பதில் நேரத்தைச் செலவிட வேண்டியிருக்-கிறது. தொடர்ந்து படித்துப் பிரசங்கிக்காத மனிதனால் போதக ஊழியத்தை விசுவாசத்தோடு செய்ய முடியாது. வேதத்தை மட்டுமல்லாமல் அவன் சகலவிதமான நல்ல ஆத்மீக விருத்தி தரும் நூல்களையும் வாசிப்பது அவசியம். வாசிக்கும் கலை இன்று தமிழ் கிறிஸ்தவர்களிடமும், போதகர்களிடமும் இல்லாமலிருக்கிறது. இந்தப் பஞ்சமும் போக வேண்டும். தொமஸ் மர்பி (Thomas Murphy) என்ற போதகர் சொல்லுகிறார்: "போதகர்களே! படியுங்கள், படியுங்கள், படியுங்கள். படிக்காவிட்டால் நீங்கள் கிறிஸ்துவில் வளர முடியாது, வாழவும் முடியாது. படிப்பதைப் பலர் கைவிட்டுவிட்டதே இன்று நாம் ஊழி-யத்தில் பார்க்கும் பல தலைவலிகளுக்கும் காரணம்." போதக ஊழியத்துக்கு வந்த பல இளைஞர்கள் பின்பு அதில் தொடர்ந்திருக்க முடியாமலும், கர்த்தருடைய ஆசீர்வாதத்தை இழந்து போனதற்கும் காரணமாக இருந்திருப்பது அவர்கள் தொடர்ந்து படிக்காமல் இருந்ததுதான் என்று மர்பி எழுதுகிறார்.

வாசிப்பது போதக ஊழியத்தின் ஒரு பகுதி என்பதை உணர்ந்து போதகர்கள் நல்ல நூல்களை வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். ஆங்கிலத்தில் உள்ள நல்ல நூல்களை வாசிப்பதற்காக ஆங்கில அறிவைப் பெற்றுக்கொள்ள முயற்சி எடுப்பது பயன்தரும். வேதத்தில் நல்லறிவு பெற்று, நாம் செய்யும் பிரசங்கம் நல்ல முறையில் அமைவதற்காக இத்தனையையும்

செய்வது அவசியம். வாசிக்காதவர்களின் சிந்தனை, வளர்ச்சி அடைய முடியாது. வாசிக்காதவன் ஒரு குழந்தையின் சிந்தனையைக்கொண்டிருந்து குழந்தைத்தனத்தோடு நடந்து கொள்வான். வாசிக்காதவர்களுக்கு உலக நடப்-பும் தெரியாது. ஆகவே, ஆத்துமாக்களின் பிரச்சினைகளை உணர்ந்து, அவற்றில் இருந்து அவர்களை விடுவிக்கும் சமர்த்துடன் வேதப்பிரசங்கம் செய்ய போதகர்களுக்கு வாசிப்பு அவசியம். ஆத்துமாக்கள் பக்திவிருத்தி அடைய, வாசித்துப் படித்துத் தயாரித்த போதகப் பிரசங்கங்களே உதவ முடியும். சார்ள்ஸ் ஸ்பர்ஜன் (Charles Spurgeon) *2 தீமோத்தேயு 4:13* ஐக்குறித்து விளக்கும்போது பின்வருமாறு சொல்லுகிறார்: “படிக்காதவர்களை பவுல் எவ்வளவு தூரம் இந்த வசனத்தில் மூலம் கண்டிக்கிறார் பாருங்கள். பவுல் கர்த்தரிடம் இருந்து நேரடியாக வெளிப்படுத்தலைப் பெற்றுக்கொண்டவன், இருந்தாலும் அவன் புத்தகங்களை நாடி ஓடுகிறான். நாற்பது வருடங்களுக்கு மேலாக போதக ஊழியம் செய்திருக்கிறான், இருந்தாலும் இன்னும் புத்தகங்களை நாடி ஓடுகிறான். அவன் ஆண்டவரை நேரடியாக சந்தித்திருக்கிறான், இருந்தாலும் அவனுக்கு இன்னும் புத்தகங்கள் வேண்டியிருக்கிறது. நம்மெல்லோரையும்விட அதிக அனுபவங்களை வாழ்க்கையில் பெற்றிருக்கிறான், இருந்தாலும் அவனுக்கு இன்னும் புத்தகங்கள் தேவைப்படுகின்றது. புதிய ஏற்பாட்டில் பல நூல்களைப் பவுல் எழுதியிருக்கிறான், இருந்தாலும் இன்னும் புத்தகங்களை நாடி ஓடுகிறான். ஒவ்வொரு பிரசங்கியையும் பார்த்துப் பவுல் சொல்கிறான், வாசிப்புக்கு உங்களை ஒப்புக்கொடுங்கள்.”

போதகர்களை வேதம் ஆடு மேய்க்கும் இடையர்களுக்கு ஒப்பிடுகிறது. மேய்ப்பவன் மந்தைகளின் தேவைகளை அறிந்திருப்பான். அவர்களுடைய தேவைகளை சந்திக்கிறவனாக இருப்பான். மந்தைகளின் தேவைகளை சந்திக்கத்தெரியாத மேய்ப்பன் இருக்க முடியாது. மந்தைகளின் வளர்ச்சி மேய்ப்-பன் அக்கறையோடு செய்யும் செயல்களில் தங்கியிருக்கிறது. அதைப்போலத்-தான் சபைப்போதகனும். அவன் ஆத்துமாக்களை அக்கறையோடு வழி-நடத்துகிறவனாக இருக்க வேண்டும். ஆத்துமாக்களின் தேவைகளைப் போதகப் பிரசங்கங்களின் மூலம் சந்திக்கிறவனாக இருக்க வேண்டும். அவனுடைய பிரசங்கங்கள் அனைத்தும் வேதபூர்வமாக இருப்பது மட்டுமல்லாமல், ஆத்துமாக்கள் ஆர்வத்தோடு கேட்டுப் பயன்படுத்திக் கொள்ளக்கூடியவிதத்தில் நல்ல பல இறையியல் போதனைகளை உதாரணங்களுடன் விளக்குவனவாக-வும், நடைமுறைக்கு ஏற்றவையாகவும் இருக்க வேண்டும். நம்முடைய பிரசங்கத்தைக் கேட்கும் ஆத்துமாக்கள் பிரசங்கத்தில் எதுவும் இல்லை என்று தெரிந்தால் ஆர்வத்தை இழந்து பிரசங்கம் கேட்பதைக் குறைத்துக் கொள்-வார்கள். பிரசங்கத்தைப் பயன்படுத்திக் கொள்ளாவிட்டால் அவர்களால் பக்திவிருத்திக்குரிய வாழ்க்கையை வாழமுடியாது. சத்தான பிரசங்கத்தையும், பிரசங்கத்தைப் படித்துத் தயாரித்துப் போதிக்கும் போதகர்களையும் சபைகளில் காணமுடியாததால்தான் இன்று திருச்சபைகள் பக்திவிருத்தி குறைந்து காணப்படுகின்றன.

## பரிசுத்த ஆவியின் கிரியை பிரசங்கத்தின் மூலம் வெளிப்படுவதுபோல் வேறு எதன் மூலமும் வெளிப்படுவதில்லை

இயேசு தான் உயரெடுத்துக்கொள்ளப்படுவதற்கு முன்பாக அப்போஸ்தலர்-களைப் பார்த்துத் தான் போனபின்பு பரிசுத்த ஆவியை அனுப்பப்போவதாக வாக்குக் கொடுத்தார். அவ்வாறு வரப்போகும் ஆவியானவர் இந்த உலகத்து

மக்களுடைய பாவங்களைக் கண்டித்து உணர்த்துவார் என்றும் இயேசு கூறினார். பரிசுத்த ஆவியானவர் அதை எப்படிச் செய்யப்போகிறார் என்பதை அநேகர் சிந்தித்துப் பார்ப்பதில்லை. பெந்தகொஸ்தே கூட்டத்தார் முக்கியமாக இந்த உண்மையை ஆராய்ந்து பார்ப்பதில்லை. பரிசுத்த ஆவியானவர் பிரசங்கத்தின் மூலமாகவே இந்த உலகத்து மக்களுடைய பாவங்களை உணர்த்தப் போகிறார் என்று வேதம் போதிக்கிறது. எங்கெங்கு வேதபூர்வமான பிரசங்கங்கள் கொடுக்கப்படுகிறதோ அங்கெல்லாம் பரிசுத்த ஆவியானவர் வல்லமையாக செயல்படுவார் என்பதை நாம் நிச்சயமாக எதிர்பார்க்கலாம். ஏனெனில், வேதம் அதை உறுதிப்படுத்துகிறது. இன்று பிரசங்கத்தை நிராகரித்து-விட்டு இசைக்கும், பாட்டுக்கும், ஆட்டங்களுக்கும், நடனத்துக்கும், படக்காட்சி-களுக்கும் முக்கியத்துவம் கொடுப்பவர்கள், பரிசுத்த ஆவி வல்லமையோடு கிரியை செய்வதைப் பார்க்க முடியாது. கர்த்தருடைய வழியை மீறி அவருடைய ஆவியானவர் செயல்படுவார் என்று எதிர்பார்ப்பது எத்தனை முட்டாள்தனம்.

பிரசங்கிகள் ஆவியின் வல்லமையை பிரசங்கிக்கும்போது அனுபவிப்பார்கள் என்று வேதம் சொல்லுகிறது. போதகர்கள் பிரசங்கத்தை தேவ பயத்தோடு உழைத்துத் தயாரித்து விசுவாசத்தோடு பிரசங்கிக்கும்போது அந்த அனுபவ-த்தைக் கர்த்தர் அவர்களுக்கு அளிக்கிறார். இதை சபையாரும் அறிந்து கொள்ள முடியும். இந்த அனுபவத்தைத்தான் பவுல், "எங்கள் சுவிசேஷம் உங்களிடத்தில் வசனத்தோடே மாத்திரமல்ல, வல்லமையோடும், பரிசுத்த ஆவியோடும், முழு நிச்சயத்தோடும் வந்தது; . . ." என்று கூறுகிறார் (1 தெசலோனிக்கேயர் 1:5). இந்த அனுபவத்தைப் பற்றிப் பேசியுள்ள சீர்திருத்தவாத பிரசங்கிகள் தாங்கள் பிரசங்கம் செய்கிற போது பலதடவைகள் பரிசுத்த ஆவியினால் உந்தப்பட்டு வழிநடத்தப்பட்டதாகக் கூறியிருக்கிறார்கள். பிரசங்கிகள் பிரசங்கிக்கின்றபோது அவர்களுடைய பேச்சோடு சம்பந்தப்பட்டதாக மட்டுமே இந்த அனுபவம் இருக்கும். அதாவது அவர்கள் பிரசங்கிக்கிறபோது எந்தவிதத் தடங்கலும் இல்லாமல் பேசவும், வசனங்களை சுலபமாக நினைவுகூறவும், வேதத்தை விளக்குகிறபோது தெளிவாக விளக்கக்கூடியதாகவும் இருப்பதுதான் இந்த அனுபவம். பெந்தகொஸ்தேகாரர்கள் விளக்குகிற முறையில் நாம் தவறாக இந்த ஆவியானவரின் அனுபவத்தை விளங்கிக் கொள்ளக்கூடாது. பிரசங்கம் மாத்திரமே ஆவியானவரின் இந்த ஆசீர்வாதத்தைக் கொண்டிருக்கிற, தேவனால் தெரிவு செய்யப்பட்ட, செய்திப்பரிமாற்றல் முறையாக இருக்கிறது. வேறு எந்த முறையும் அவை உலகத்து மக்களைக் கவரக்கூடியவனாக இருந்த-போதும் இந்த அனுபவத்தை வெளிப்படுத்த முடியாதவையாக இருக்கின்றன.

## வேதபூர்வமான பிரசங்கம் ஆத்துமாக்களை ஆதாயப்படுத்தி திருச்சபையை வளர்க்கிறது

வேதபூர்வமான பிரசங்கங்களினால் சபை மக்கள் ஆத்மீக வாழ்க்கையில் வளர்ச்சி அடைகிறார்கள். தேவனை அறியாதவர்கள் பிரசங்கத்தைக் கேட்டு கர்த்தரை விசுவாசிக்கிறார்கள். ஆதி சபை பிரசங்கத்தின் மூலமாகவே வளர்ந்த-தாக அப்போஸ்தலர் நடபடிகளில் வாசிக்கிறோம். அப்போஸ்தலர்கள் தங்க-ளுக்கு சுவிசேஷத்தை வல்லமையோடு பேசும் ஆசீர்வாதத்தை அளிக்கும்படி-யாகவே கர்த்தரை நோக்கி எப்போதும் ஜெபித்திருக்கிறார்கள். வேதபூர்வமாக பிரசங்கிக்கப்படும் பிரசங்கங்கள் ஆத்துமாக்களை ஆதாயப்படுத்துகிறபடியால்-தான் பவுல், திமோத்தேயுவுக்கு எழுதிய நிருபத்தில் பிரசங்கம் செய்வதில் அதிக கவனத்தைச் செலுத்தும்படி எழுதினார். ஜாக்கிரதையாகப் பிரசங்கம்

செய்யும்படி வற்புறுத்தி எழுதினார். போதக ஊழியத்தைப் பற்றி அதிகமாகப் பேசுகின்ற 1 தீமோத்தேயு, 2 தீமோத்தேயு, தீத்து ஆகிய நிருபங்கள் சபைகளில் பிரசங்கத்திற்கு கொடுக்கப்பட வேண்டிய முக்கிய இடத்தைப் பற்றியே வலியுறுத்திப் பேசுகின்றன. அதற்குக் காரணம் சபை வளர்ச்சிக்கு பிரசங்கம் மட்டுமே போதகர்களுக்கு உதவுவதாக இருக்கின்றது. அதுவே கர்த்தருடைய வழியாகவும் இருக்கின்றது.

ஆத்துமாக்களுடைய கவனத்தை ஈர்த்து, அவர்களை நம்வழியில் திருப்புவதற்கு மனிதனால் ஆகக்கூடிய வழிகள் உலகில் எத்தனையோ இருக்கின்றன. ஆனால், அந்த வழிகள் மனிதனின் வழிகளாகத் தான் இருக்கும். மனிதன் உலகப்பிரகாரமான, சரீரத்துக்குரிய வழிகளைப்பயன்படுத்தும்போது அதில் அவனுடைய கிரியைகளையே பார்க்க முடியும். இசையின் மூலமாகவும், பாடல்கள் மூலமாகவும், நடிப்பின் மூலமாகவும் தமிழ் சமுதாயத்தையே இன்று சினிமா உலகம் ஆண்டு வருவது நமக்குத்தெரியாததல்ல. அதற்கும் ஆத்துமாக்-களின் ஆத்மீக வளர்ச்சிக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. மனிதர்களை சினிமாவும், பாட்டும், நடிப்பும் ஈர்க்கிறது என்பதற்காக அவற்றை ஆத்மீகக் காரியங்களுக்காக நாம் ஒருபோதும் பயன்படுத்த முடியாது. அவற்றால் ஆத்துமாக்கள் ஆத்மீக வளர்ச்சியையும் அடைய முடியாது. ஆத்மீக வளர்ச்சி அடைய கர்த்தரின் வழிகளையே நாம் பின்பற்ற வேண்டும். அதற்குக் கர்த்தர் நமக்குக்கொடுத்திருக்கும் ஆசீர்வாதமே பிரசங்கமாகும்.

## வேதபூர்வமான பிரசங்கம் கர்த்தரை மகிமைப்படுத்துகிறது

பிரசங்கம் வேதபூர்வமானதாக இருக்கும்போது அது கர்த்தரை மகிமைப்படுத்துகிறது. நாம் செய்கின்ற அனைத்தும் கர்த்தரை எப்போதும் மகிமைப்படுத்துபவையாக இருக்க வேண்டும். ஆத்துமாக்களை ஆதாயப்படுத்து-வதையும், சபை வளர்ச்சியையும் மட்டும் பிரதான நோக்கமாகக்கொண்டு போதகர்கள் பிரசங்க ஊழியத்தில் ஈடுபடக்கூடாது. அவர்களுடைய முதல் நோக்கம் கர்த்தர் தங்கள் ஊழியத்தின் மூலம் மகிமை அடைய வேண்டும் என்பதாகத்தான் இருக்க வேண்டும். ஒவ்வொரு போதகரும் அதை மனதில் வைத்தே ஒவ்வொரு பிரசங்கத்தையும் தயாரிக்க வேண்டும், பிரசங்கிக்க வேண்டும். கர்த்தரின் மகிமையை நாடாத பிரசங்கத்தை அவர் ஆசீர்வதிக்க மாட்டார்.

## முடிவாக

பிரசங்கம் ஏன்? என்று ஆராய்ந்திருக்கிறோம். பிரசங்கத்தின் மகிமையை இனியாவது வாசகர்கள் உணர்ந்து அதற்குக் கொடுக்க வேண்டிய இடத்தை உங்கள் வாழ்க்கையில் கொடுக்க முன்வருவீர்களா? வேத அடிப்படையிலான பிரசங்கத்தைச் செய்யும் பிரசங்கிகளைக் கொண்டிருக்கும் சபைகளை மட்டும் ஆதரிக்க முன்முன்வருவீர்களா? போலிகளை இனங்கண்டு அவர்களுடைய போலித்தனங்களுக்கு இனியும் இடங்கொடுக்காது உங்களைக் காத்துக் கொள்வீர்களா? இதை வாசிக்கும் போதகர்களே! உங்கள் போதக ஊழியத்தில் பிரசங்கம் அதி உயர்ந்த இடத்தை வகிக்கும்படியாக இனிப்பார்த்துக் கொள்ளுங்கள். கர்த்தருடைய வழிகளை மீறாமல் நீங்கள் ஊழியம் செய்யும்-போது வேத அடிப்படையிலான ஆத்மீக சீர்திருத்தம் ஆத்துமாக்கள் மத்தியில் தானாகவே ஏற்படும். மெய்ப்பிரசங்க வரட்சியினால் வாடிப்போயிருக்கும் தமிழ் கிறிஸ்த உலகில் பிரசங்க மழை பொழியும் நாள் எப்போது வரும்?

# சிந்திக்க வேண்டிய நேரம் இது!

முதல்வர் ஜெயலலிதா தமிழகத்தில் கட்டாய மதமாற்றத் தடைச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவந்து கிறிஸ்தவர்களை சிந்திக்கும்படிச் செய்திருக்கிறார். தமிழ்நாட்டுக் கிறிஸ்தவர்கள் சிந்திப்பதை எப்போதோ ஆற்றில் கைகழுவிவிட்டது பழைய கதை. அதற்கு இப்போது நேரம் வந்திருக்கிறது. அப்படி நாம் சிந்திக்கும்படியாக முதல்வர் என்ன செய்திருக்கிறார்? என்று கேட்கிறீர்களா. ஆம்! முதல்வர் ஒருவிதத்தில் நமக்கு நன்மையே செய்திருக்கிறார் என்று நான் நம்புகிறேன். இதை விளக்குவது அவசியம்.

தமிழகத்தில் சுதந்திரம் பெற்ற காலத்தில் இருந்தே கிறிஸ்தவம் தன்னிச்சையாக செயல்பட்டு வந்திருக்கின்றது. அங்கும் இங்கும் எதிர்ப்புகள் இருந்து வந்திருந்தபோதும், பெரியளவுக்கு யாரும் கிறிஸ்தவத்தை எதிர்த்ததில்லை. இந்து சமயத்தில் கிறிஸ்துவைக் காணலாம் என்றெல்லாம் சாது செல்லப்பா, தெய்வநாயகம் போன்றோர் பொய்ச்செய்தி பரப்பி வந்தபோது அவர்கள் மேல் யாரும் கல்லெறிந்ததில்லை. இந்துக்கள் அமைதியாகத்தான் இருந்திருக்கிறார்கள். பெந்தகொஸ்தே கூட்டத்தைச் சேர்ந்தவர்களில் சிலர் மூளையை வீட்டில் வைத்துவிட்டு அக்கிரகாரங்களுக்குப்போய் பேய் விரட்டும் வேலையில் ஈடுபட்டபோதும் (இதை ஒரு பெந்தகொஸ்தே போதகர் சின்னத்திரையில் சொன்னதை நான் கேட்டிருக்கிறேன்) ரொம்பவும் அமைதியாகத்தான் இருந்திருக்கிறார்கள். பெரிய கூட்டங்களை நடத்தி பிணி தீர்க்கிறோம் என்ற பெயரில் சமுதாயத்தில் வசதிகுறைந்த அநேகரைப் பலர் ஏமாற்றி வந்தபோதும் அமைதியாக இருந்திருக்கிறார்கள். வடதேசங்களில் கிறிஸ்தவர்களுக்கு பல தொல்லைகள் ஏற்பட்டபோதும் தமிழகம் அமைதி காத்தது. ஆனால், இன்று அந்த அமைதி போய்விட்டது. இதுவரை நான் சொன்ன காரியங்களை கிறிஸ்தவர்கள் என்ற பெயரில் செய்து வந்தவர்கள் உண்மையிலேயே கிறிஸ்தவர்கள்தானா? என்ற கேள்வியை நானே கேட்கவேண்டியிருக்கிறது. பொறுத்துப்பொறுத்துப் பார்த்தவர்கள் ஒருநாளைக்கு பொறுமையிழந்துதான் போவார்கள். இதற்காக முதல்வர் ஜெயலலிதாவின் அரசு செய்திருப்பதை நான் வரவேற்பதாக எவரும் நினைத்துவிடக்கூடாது. இந்த சட்டம் கொண்டுவரப்பட்டதற்கு அரசியல் உள்நோக்கம் இல்லை என்றும் கூறிவிட முடியாது. ஆனால், கிறிஸ்தவன் என்ற முறையில் நான் இங்கு அரசியல் பேச வரவில்லை. கிறிஸ்தவர்கள் நடந்து கொண்டிருக்கிற முறையை ஆராயும்படித்தான் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழகத்தில் அரைநூற்றாண்டு காலமாக நடந்துவரும் கிறிஸ்தவ ஊழியங்களை எண்ணிப்பாருங்கள். இந்த ஊழியங்களின் மூலமாக கிறிஸ்தவம் எந்தளவுக்கு வளர்ந்திருக்கிறது? நாம் ஆனந்தப்படும்படியாக வேதபூர்வமான திருச்சபைகள் எத்தனை உருவாகியிருக்கின்றன? கர்த்தரின் வேதத்திற்கு மட்டும் மதிப்புத்தந்து போதிக்கும் இறையியல் கல்லூரிகள் எத்தனை உருவாகி இருக்கின்றன? வேதஅறிவிலும், பரிசுத்தத்திலும் வளர்ந்து கிறிஸ்துவை மகிமைப்படுத்தும்படி வாழ்ந்துவரும் பிரசங்கிகள், கிறிஸ்தவர்கள் எத்தனை

பேர் என்று கேட்டுப்பார்த்தால் முழிக்க வேண்டியிருக்கிறது. உண்மையில் இந்தக் கேள்விகளுக்கான பதில்கள் நம்மை ஆனந்தப்படுத்தாது. நெஞ்சில் வலியைத்தான் ஏற்படுத்தும். அரைநூற்றாண்டுகளாக சுவிசேஷத்தை வைத்துக்கொண்டு எதைஎதையோ செய்து வந்தவர்கள்தான் தமிழகத்தில் அதிகமே தவிர மார்டின் லூதரைப்போலவும், ஜோன் கல்வினைப்போலவும், ஜோன் நொக்ஸைப்போலவும், ஜோன் பனியனைப்போலவும், சார்ள்ஸ் ஸ்பர்ஜனைப்போலவும் கிறிஸ்துவுக்காக மட்டும் உழைத்து நேர்மையாகப் பிரசங்கம் செய்து சபை வளர்த்தவர்கள் தொகை மிகவும் குறைவானது. வேதத்தை சத்தியமாகப் போதிக்க வேண்டியது அதைக் கையிலெடுத்துக் கொள்கிறவர்களின் வேலை. அதைத் தவறாகப் பயன்படுத்தினால் கர்த்தரையே கலங்கப்படுத்துவது போலாகும். இந்த வேலையைத்தான் தமிழகத்தில் உள்ள இறையியல் கல்லூரிகளின் பெரும்பாலானவை அரைநூற்றாண்டுகளாக செய்து வந்திருக்கின்றன. இக்கல்லூரிகளின் பெயர்களை நான் சொல்லத் தேவையில்லை, உங்களுக்கே தெரியும். தனி ஊழியம், சொந்த ஊழியம் என்று ஊழியங்களை ஆரம்பித்துக் கொண்டு கூட்டங்களைக்கூட்டி அற்புதங்கள் செய்வதாக மக்களை ஏமாற்றிப் பணம் சேர்த்து வசதியாக வாழ்ந்து வரும் சுவிசேஷப் பிரசங்கிகள் நிறைந்த நாடுகளில் தமிழகத்திற்கு முதலிடம் கொடுக்கலாம். இவர்கள் அரைநூற்றாண்டுகளாக மக்களை ஏமாற்றி வந்திருப்பதோடு தங்களுடைய சீடப்பிள்ளைகளையும் உருவாக்கி-விட்டிருக்கிறார்கள். இந்த இன்டஸ்ட்ரி தமிழகத்தில் இன்று பெரிய இன்டஸ்ட்ரியாக இருக்கிறது. இனி இவர்களுடைய பாடு என்னவாகப் போகிறது? இதையெல்லாம் எவராவது மறுக்க முடியுமா? கிறிஸ்தவர்கள் அல்லாத மக்கள் பார்த்துப் பேசியும், சிரிக்கும்படியும் நடந்து கொண்டு பணத்தாசையால் போலீஸ் கையில் அகப்பட்டு சிறைக்குப்போன போலிப்-பிரசங்கிகளைப்பற்றி நாம் பத்திரிகைகளில் வாசிக்கவில்லையா? அரை-நூற்றாண்டுகளாக தமிழகத்தில் இந்தவகையில்தான் ஊழியங்கள் பிரமாதமாக நடந்து வந்திருக்கின்றன.

கர்த்தரை அறியாத தமிழக மக்கள் மத்தியில்தான் லஞ்சமும், சாதிவெறியும், பணத்தாசையும், பக்கத்தில் இருப்பவனைத் தன்னுடைய சுயநலத்துக்காக பயன்படுத்திக் கொள்ளும் மனப்பான்மையும் இருக்கிறது என்பது நமக்குத் தெரியும். ஆனால், பணத்திற்காக சபையைப்பிரித்துக் கொள்ளுகிறவர்களையும், ஊழியத்தைப் பயன்படுத்தி உல்லாசமாக வாழும் ஊழியக்காரர்களையும், கிறிஸ்தவ சபைகள் என்ற பெயரில் கிறிஸ்தவ நாடார்கள், கிறிஸ்தவ உடையார்-கள், கிறிஸ்தவ வெள்ளாளர்கள் என்று சாதிப் பெயரில் சபை நடத்தி வருபவர்களையும் கிறிஸ்தவர்கள் மத்தியில் எப்படிப்பார்க்க முடிகிறது? ஆக மொத்தத்தில் தமிழ்நாட்டில் கிறிஸ்தவர்கள் தொகை அப்படியொன்றும் மதமாற்றத்தால் வளர்ந்துவிடவில்லை என்று சிலர் புள்ளி விபரங்களைத் தந்திருப்பதை நாம் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். ஏனெனில், கிறிஸ்தவர்கள் அல்லாதவர்கள் மத்தியில் இருக்கும் அத்தனைப் பாவங்களும் கிறிஸ்தவர்கள் என்று அழைத்துக் கொள்கிறவர்கள் மத்தியில் இருந்தால் கிறிஸ்தவம் உண்மையில் எப்படி வளர முடியும்?

கட்டாய மதமாற்றத் தடைச்சட்டம் நல்லதில்லைதான். எந்தவொரு அரசும், நாடும் அத்தகைய சட்டங்களைக் கொண்டுவந்து தனி மனிதனின் சுதந்திரத்துக்கு தடைபோட்டுவிடக்கூடாது. ஆனால், மெய்க்கிறிஸ்தவத்தின் பெயரில் இன்று நடந்து வரும் ஊழல்களை இந்தச் சட்டம் அகற்றிவிடுமானால்

அது நல்லதுதானே? இன்று கிறிஸ்தவர்கள் மத்தியில் நடந்து கொண்டிருக்கும் காரியங்கள் கர்த்தருக்கே பொறுக்காத காரியங்களாக இருக்கும்போது அவை மேலும் தொடர்ந்து நடக்க வேண்டும் என்று நாம் ஆசைப்படலாமா? முதல்வர் ஜெயலலிதாவின் அரசு இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்திருப்பதாகத்தான் எல்லோரும் பேசிக்கொள்கிறார்கள். அது உண்மைதான். ஆனால் இன்னுமொரு பெரிய உண்மையை நாம் மறந்துவிடக்கூடாது. இந்தச் சட்டம் வருவதற்கு அனுமதித்திருக்கும் நம்முடைய கர்த்தர் தமிழகத்தில் நடக்கும் காரியங்களைப் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார். கர்த்தருக்குத் தெரியாமலும், அவருடைய அனுமதி இல்லாமலும் எதுவும் எப்போதும் நடந்துவிட முடியாது. இந்த மதமாற்றத் தடைச்சட்டம் தமிழகத்தில் எப்போதும் தொடர்ந்து இருந்துவிடும் என்று சொல்ல முடியாது. அரசு மாறலாம். இன்னொரு அரசு ஆட்சிக்குவந்து அந்தச் சட்டத்தை நீக்கி விடலாம். அனைத்தையும் ஆளுகின்ற நம்முடைய கர்த்தருடைய சித்தப்படியே எல்லாம் எப்போதும் நடக்கும். கொஞ்சக்காலத்துக்கு இந்த சட்டம் இருக்கத்தான் போகிறது. சில தொல்லைகளை மெய்க்கிறிஸ்தவர்கள் சந்தித்துத்தான் ஆக வேண்டும். ஆனால், போலி ஊழியங்கள் தொடர்ந்து நடக்கலாமா? அரசியலில் ஒரு காலையும், சபையில் ஒரு காலையும் வைத்துக் கொண்டு இரண்டையும் குழப்பிக் கொண்டிருக்கும் பிசப்புக்களுடைய செயல்கள் தொடரலாமா? இறையியல் கல்லூரிகளில் இறையியல் படிக்கப்போய் இறைவனையே இழந்துபோன இறையியல் மாணவர்களின் தொகை இனியும் வளரலாமா? அத்தகைய இறையியல் கல்லூரிகள் தொடர்ந்தும் செயல்படலாமா? அற்புதம் செய்வதாக சொல்லி மனித உணர்ச்சிகளுக்கு தூபம்போட்டு மோசடி செய்துவருபவர்கள் தொடர்ந்தும் இருக்கலாமா? கூடாது! கட்டாய மதமாற்றத் தடைச்சட்டம் இவர்களுடைய எண்ணிக்கையைக் குறைக்குமானால் அதில் எனக்கு கொள்ளை சந்தோஷம்தான்.

நண்பர்களே! இன்றுமொரு உண்மையை எண்ணிப் பாருங்கள். எங்கெங்கெல்லாம் மெய்க்கிறிஸ்தவத்திற்கு ஆபத்தேற்பட்டிருக்கிறதோ அங்கெல்லாம் அது வளர்ந்து வந்திருக்கின்றது. சீனாவிலும், ரஷ்யாவிலும் வேறு பல நாடுகளிலும் போலிக்கிறிஸ்தவர்கள்தான் தொல்லைகளுக்கு அஞ்சி விலகிப்போயிருக்கிறார்கள். மெய்க்கிறிஸ்தவர்கள் ஒருபோதும் பயந்ததில்லை. விலகி ஓடியதில்லை. தங்களுடைய பணிகளைக்குறைத்துக்கொண்டதில்லை. அவர்களுடைய வாழ்க்கை நெறியையும், நெஞ்சுரத்தையும், கடவுள் பக்தியையும் கண்ட கடவுளை அறியாத மக்கள் கடவுளிடம் ஈர்க்கப்பட்டிருக்கிறார்கள். அதை அரசாலோ, எந்த மனிதனாலுமோ தடுக்க முடியவில்லை. இந்த வகையில்தான் 16ம் நூற்றாண்டுக்கு முன் கத்தோலிக்க மதத்தைப் பின்பற்றிய அரசுகளால் ஐரோப்பாவில் கிறிஸ்தவர்கள் பல துன்பங்களை அனுபவிக்க நேர்ந்தது. அவர்கள் சிறையிலிடப்பட்டார்கள். உயிரோடு எரிக்கப்பட்டார்கள்.இருந்தாலும் அவர்களுடைய விசுவாசத்தை ஒருவராலும் எடுத்துப்போட முடியவில்லை. இதுதான் மெய்விசுவாசம், மெய்க்கிறிஸ்தவம். இதே நிலமைதான் முதலாம் நூற்றாண்டில் ரோமராஜ்யத்தின் கீழ் வாழ்ந்த கிறிஸ்தவர்களுக்கு ஏற்பட்டது. ஆனால், கிறிஸ்தவர்கள் தொகை தொடர்ந்து வளரத்தான் செய்தது. ரோம ராஜ்யத்தாலும், 16ம் நூற்றாண்டுக்கு முன்பிருந்த ஐரோப்பிய கத்தோலிக்க மத அரசுகளாலும் கிறிஸ்தவத்தை அழிக்க முடியாதபோது கட்டாய மதமாற்றத் தடைச்சட்டத்தால் அதை இல்லாமல் செய்துவிட முடியுமா? அப்படி நாம் நினைப்பது தவறு. இச்சட்டத்தால் மெய்க்கிறிஸ்தவர்கள் மேலும் துணிவுடன்

ஊழியத்தில் ஈடுபடுவார்கள். அவர்கள் தொகை வளரும். அவர்களுடைய விசுவாசம் மேலும் உறுதி அடையும். இதுவரை வேதப்புத்தகத்தை ஒரளவுக்கு அலட்சியமாக வாசித்தவர்கள்கூட இனி மேலும் ஊக்கத்துடன் அதை வாசிப்பார்கள். துன்பங்கள் மெய்க்கிறிஸ்தவத்தை வளரச் செய்கின்றன. அதே-நேரம் போலிகளின் குட்டு வெளிப்பட்டு விடும். அவர்கள் சுயநலத்துக்காக கூட்டம்கூடி மக்களை ஏமாற்றி வந்தார்கள். இனி அப்படி செய்பவர்களுக்கு ஆபத்து. புத்தியில்லாமல் அக்கிரகாரத்துக்குள் நுழைந்து பேய்விரட்டும் புத்தி அவர்களுக்கு இனி வராது. மோசடிக்காரர்களும், மாயக்காரர்களும் இதில் இனி பணம் வராது என்று அறிந்து விலகி ஓடி விடுவார்கள். அவர்களுக்கு சிறைக்குப்போவதும், துன்பத்தை அனுபவிப்பதும் பிடிக்காது. ஆக, மொத்தத்தில் முதல்வர் ஜெயலலிதா ஒருவிதத்தில் நமக்கு நன்மைதான் செய்திருக்கிறார்.

மெய்க்கிறிஸ்தவ நண்பர்களே! நீங்கள் இனி செய்ய வேண்டியது என்ன தெரியுமா? சிந்தித்து புத்தியோடு செயல்பட வேண்டும். முதலில் நாம் மனந்-திரும்ப வேண்டும். அரை நூற்றாண்டுகளாக நமக்குக் கொடுக்கப்பட்டிருந்த சுதந்திரத்தை நாடு வீணடித்ததில் நமக்கும் பங்குண்டு. கிறிஸ்தவர்கள், பிரசங்கிகள், சுவிசேஷகர்கள் என்ற பெயரில் புல்லுருவிகள் நம்மத்தியில் உலவியதற்கு நாமும் பொறுப்பாளிகள். நெகேமியாவும், தானியேலும் தங்க-ளுடைய மக்களுடைய பாவங்களுக்காக கர்த்தரிடம் மன்றாடி ஜெபித்ததுபோல் நாமும் மனமாற்றத்துடன் ஜெபிக்க வேண்டும். இத்தகைய போலிக்கூட்டங்-களுக்கு இனி இடம் கொடுக்க மாட்டோம், கர்ததரின் வழியை மீறி நடக்க மாட்டோம் என்று நாம் ஜெபிக்க வேண்டும். சபைகள் இதை இன்று செய்ய வேண்டியது அவசியம். யார் எப்படி இருந்தால் என்ன? என்ற மனநிலையோடு நாம் வாழ்ந்ததால்தான் நம்மத்தியில் போலிகள் உருவாக நேர்ந்தது. நாமும், நமது மக்களும் மனம்மாறி ஜெபித்தால் கர்த்தர் ஜெபம் கேட்பார்.

சுவிசேஷ ஊழியத்திலும் மாற்றம் ஏற்பட வேண்டிய நேரமிது. சுவிசேஷ ஊழியத்தில் ஈடுபடும்போது கிறிஸ்து யார்? அவர் கொடுக்கும் வாழ்க்கை எத்தகையது என்பதை விளக்குவதோடு நிறுத்திக் கொள்ள வேண்டும். இதைச் சரிவர செய்ய வேண்டுமானால் நீங்கள் வேதத்தைப் படித்து சுவிசேஷ செய்தியை வேதபூர்வமாக சொல்வதெப்படி என்பதை விளங்கிக்கொள்ள வேண்டும். நீங்கள் தவறானவிதத்தில், சுவிசேஷம் சொல்கிறோம் என்ற பெயரில் கர்த்தருக்கு போலித்தனமாக ஆள் சேர்க்கும் வேலையில் ஈடுபடக்கூடாது. உங்களுடைய பேச்சைக்கேட்டு மனமுறுகி யாராவது கிறிஸ்துவை ஏற்றுக்-கொள்ளுகிறேன் என்று சொல்லிவிட்டு பின்பு மனம் மாறிவிட்டால் உங்கள் பாடு ஆபத்துத்தான். எவருடைய மனத்தையும் நம்மால் மாற்ற முடியாது. அப்படி மாற்றும் முயற்சியிலும் நாம் ஒருபோதும் ஈடுபடக்கூடாது. சுவிசே-ஷத்தை சொல்லுவது மட்டுமே நம்முடைய பணியாக இருக்க வேண்டும். மெய்யாக கிறிஸ்துவை அறிந்து கொண்டவர்கள் உலகமறிய திருமுழுக்கு பெற்றுக்கொள்ள ஒருபோதும் தயங்க மாட்டார்கள்.

திருவிழாபோல் பெருங்கூட்டம் போட்டு எல்லோருக்கும் தெரிய திருமுழுக்கு கொடுப்பதையும் நிறுத்திக் கொள்ள வேண்டும். முக்கியமாக சுவிசேஷக்-கூட்டங்களில் அதைச் செய்யக்கூடாது. சுவிசேஷம் சொன்ன விநாடியே கர்த்தரிடம் யாரும் வந்துவிடுவார்கள் என்று வேதம் போதிக்கவில்லை. சுவிசே-ஷத்தைக் கேட்டவர்கள் உண்மையிலேயே இயேசுவை விசுவாசித்திருக்-கிறார்களா என்று அறிந்துகொள்ள அவர்களை நாம் சோதித்துப்பார்ப்பது

அவசியம். இன்று அநேகர் இதைச் செய்வதில்லை. சுவிசேஷம் கேட்பவர்கள் கூட்டம் முடிவதற்கு முன்பாக கர்த்தரிடம் வந்துவிட வேண்டும் என்ற ஆவலில் அவர்களைக் கையுயர்த்த வைக்கும் செயல் வேதத்தில் நாம் பார்க்காத ஒரு முறை. இந்த முறைக்கு முடிவு கட்ட வேண்டும். இனி இதைச் செய்பவர்களுக்கு கட்டாய மதமாற்றத் தடுப்புச் சட்டத்தாலும் ஆபத்து காத்திருக்கிறது.

இது சபையைக் கட்டி வளர்க்க வேண்டிய காலம். போலிகள் இனியும் சபைகளில் தொடர்ந்தும் இருக்க மாட்டார்கள். போலிகள் சபைகளை நாடி வரவும் மாட்டார்கள். அது நல்லதே. நல்ல போதகர்கள் இனி மெய்யான விசுவாசிகளை வேதத்தைப் பயன்படுத்திக் கட்டி எழுப்ப வேண்டும். அவர்களை வேதத்தால் பெலப்படுத்த வேண்டும். அவர்களில் இருந்து சபைக்குத் தேவையான நல்ல ஊழியக்காரர்களை தயார் செய்ய வேண்டும். எதிர்காலத்திற்கு நாம் இப்போதே திட்டமிட வேண்டும். ஒவ்வொரு மெய்ச்சபையும் இறையியல் கல்லூரியாக மாற வேண்டும். ஒவ்வொரு மெய்ப்போதகரும் வேதத்தில் அதிக கவனம் செலுத்திப் படித்து ஆத்துமாக்களை அந்த அறிவில் வளரச் செய்ய வேண்டும். ஆவியின் வல்லமையும், வேத ஞானமும், பரிசுத்தமும், கட்டுக்கோப்பும் கொண்ட நல்ல திருச்சபைகள் நாட்டுக்குத் தேவை. கிறிஸ்தவர்கள் துன்பங்களை சந்திக்க வேண்டிய காலங்களில் அத்தகைய சபைகளே அவர்களுக்குக் கைகொடுக்கும்.

இது கிறிஸ்தவ இலக்கிய வளர்ச்சியிலும் ஈடுபட வேண்டிய காலம். நாம் போகமுடியாத இடங்களுக்கு இலக்கியம் போக முடியும். அதற்கும் கூட ஒரு காலத்தில் தடை வந்துவிடலாம். இன்று நல்ல பிரசங்கத்திற்கான பஞ்சம் எங்கும் இருப்பதுபோல் நல்ல நூல்களுக்கும் பஞ்சம் ஏற்பட்டிருக்கின்றது. தமிழில் உப்புச்சப்பில்லாத பெந்தகொஸ்தே போதனைகளைக்கொண்ட நூல்கள் குப்பைகளாக மலிந்திருக்கும் இக்காலத்தில் இருக்கும் நல்ல நூல்களை வாங்கி வாசித்து மற்றவர்களையும் வாசிக்கச் செய்ய வேண்டும். வாசிப்பு சிந்தனையை வளர்க்கும். சிந்திக்காதவனும், சிந்திக்க மறுப்பவனும் மனநோயாளியைப் போன்றவர்கள். அவர்களால் யாருக்கும் எந்தப்பயனும் இல்லை. அதிகம் உணர்ச்சிவசப்படும் நம்மக்கள் சிந்திப்பதில்லை. இது சிந்தித்து செயல்பட வேண்டிய நேரம்.

இது தைரியத்தோடு தொடர்ந்து சுவிசேஷத்தை சொல்ல வேண்டிய காலம். அரசாங்கமோ, நாடோ நாம் கர்த்தருக்கு அடிபணிவதைத் தடை செய்ய முடியாது. சுவிசேஷத்தைச் சொல்லுவது மதமாற்றச் செய்கையில்லை. அதன் மூலம் மக்களுடைய மனமாற்றத்தையே கிறிஸ்தவம் நாடுகிறது. சுவிசேஷத்தை நம்மால் சொல்லாமல் இருக்க முடியாது (அப்போஸ்தலர் 4). பரிசுத்த ஆவியின் வல்லமையோடும், புத்தியோடும், ஜெபத்தோடும் நாம் சுவிசேஷ ஊழியத்தைத் தொடர வேண்டும். அதைத்தான் முதலாம் நூற்றாண்டில் அப்போஸ்தலர்கள் செய்தார்கள். நமது பெருமைக்காகவும், நம்மை வளர்த்துக்கொள்வதற்காகவும் நாம் சுவிசேஷம் சொல்லவில்லை. அது நம்முடைய இரத்தத்தில் ஊறியிருக்கும் பணி. பரிசுத்த ஆவியின் வல்லமைக்காக நாம் இன்று ஜெபிக்க வேண்டும். ஜெபமில்லாமலும், ஆவியானவரின் துணை இல்லாமலும் ஊழியம் செய்ய முடியாது. ஆவியின் வல்லமையும், மெய்யான பரிசுத்தமும், தேவபயமும் நம்மத்தியில் இருந்திருந்தால் கிறிஸ்துவின் பெயர் நம்நாட்டில் கெட்டிருக்காது. இருக்கும் நிலமை மாறவேண்டும். மெய்க்கிறிஸ்தவத்தையும், மெய்ச்சபைகளையும் நாடறிந்து கொள்ளும்படி நாம் சிந்தித்து செயல்படவேண்டிய காலமிது.

# பவுலின் வார்த்தைகள் பரிசுத்த ஆவியின் வார்த்தைகளா?

வேதத்தின் அதிகாரத்தையும், அதன் போதுமான தன்மையும் குறித்து நமது பத்திரிகையில் அடிக்கடி எழுதி வந்திருக்கிறோம். அதற்குக் காரணம் வேதம் பற்றிய பெருந்தவறான எண்ணங்கள் தமிழ் கிறிஸ்தவர்கள் மத்தியில் இருப்பதால்தான். கிறிஸ்தவத்தின் பெயரில் மனித சிந்தனைகளும், பாரம்பரியமும் கிறிஸ்தவ சமுதாயத்தை ஆண்டு வருகின்றனவே தவிர கர்த்தரின் வேதத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப்படுவ-தில்லை. லிபரலிசமும் (Liberalism), புதிய சுவிசேஷக்கோட்பாடும் (New Evan-gelicalism) திருச்சபைகளையும், இறையியல் கல்லூரிகளையும் இன்று ஆட்டிப்-படைத்து வருகின்றன. இன்று வேதத்தின் அதிகாரம் முற்றாக நிராகரிக்கப்-பட்டிருக்கிறது. தனிமனிதனின் உணர்ச்சிகளுக்கும், எண்ணங்களுக்கும் ஏற்றவகையில் பெரும்பாலானோர் வேதத்திற்கு விளக்கம் கொடுக்கும் அவல நிலையை தமிழ் கிறிஸ்தவ சமுதாயத்தில் இன்று பார்க்கிறோம். இதுவும் சரிதான், அதுவும் சரிதான், என்று சிந்திக்கும்போக்கை வளர்த்துக்கொண்டுள்ள, வேதத்தின் அதிகாரம் பற்றிய அறிவுபூர்வமான சிந்தனையே இல்லாத கூட்டம் கிறிஸ்தவர்கள் என்ற பெயரில் தமிழினத்தில் பெருகி வருகின்றது. கர்த்தரின் வேதத்தின் அதிகாரத்தைத் தொடர்ந்து அழிக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கும் பிசாசு தமிழர்கள் மத்தியில் வேதத்தின் அதிகாரத்தைக்குறித்து பரப்பி வரும் ஒரு கருத்தை இந்த ஆக்கத்தில் பார்க்கவிருக்கிறோம். அதாவது, புதிய ஏற்பாட்டில் அப்போஸ்தலர்களால் கொடுக்கப்பட்டிருக்கும் அத்தனை போதனைகளும் கர்த்தரின் அதிகாரமுள்ள வார்த்தைகள் இல்லை என்பதுதான் அந்தக்கருத்து. புதிய ஏற்பாட்டில் உள்ள அப்போஸ்தலர்களின் சொந்தக் கருத்துக்களை நாம் ஏற்றுக்கொள்ளத் தேவையில்லை என்று இந்தக் கருத்தைக் கொண்டிருப்பவர்கள் விளக்குகிறார்கள். முக்கியமாக பவுலின் போதனைகளில் அநேகமானவை பவுலின் சொந்தக் கருத்துக்கள் என்றும் அவற்றை கர்த்தரின் சித்தமாக ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் இவர்கள் நிராகரிக்கிறார்கள். இது சரியா? தவறா? என்று ஆராய வேண்டியது அவசியம். வேதத்தின் அதிகாரத்திற்கு ஊறு விளைவிக்க முயலும் இந்தக் கருத்தை ஆராய்வதன் மூலம் நாம் வேதத்தின் அதிகாரத்தைப்பற்றி மேலும் விளக்கங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

அப்போஸ்தலர்களின் போதனைகள் எல்லாவற்றையும் நாம் ஏற்றுக்கொள்ள வேண்டிய அவசியமில்லை என்று சொல்லுகிறவர்கள் உதாரணத்திற்கு எடுத்துக் காட்டும் ஒரு வேதப்பகுதி 1 கொரிந்தியர் 7 ஆகும். இந்தப் பகுதியில் பவுல் அப்போஸ்தலன் சில இடங்களில் "நானல்ல, கர்த்தர் சொல்லுகிறதாவது" என்றும், "கர்த்தரல்ல நான் சொல்லுகிறதாவது" என்றும் எழுதியுள்ளார். இதைவைத்துக்கொண்டு சிலர் இந்தப்பகுதியில் கர்த்தரின் வார்த்தைகளும், பவுலின் சொந்தக்கருத்துகளும் சேர்ந்து காணப்படுகின்றன. ஆகவே, பவுலின் கருத்துக்களை விலக்கி நாம் கர்த்தரின் வார்த்தைகளை மட்டும் பின்பற்ற வேண்டும் என்று சொல்லுகிறார்கள்.

*முதலில் வேதத்தை விளங்கிக்கொள்ள வேண்டிய வழிமுறையில் இவர்கள் விடுகின்ற தவறை நாம் அறிந்து கொள்வது அவசியம். இவர்கள் ஒரு சில வசனத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டு ஒரு தவறான தீர்மானத்திற்கு உடனடியாக வந்துவிடுகிறார்கள். இந்த வேதப்பகுதியை இவர்கள் முழுமையாக ஆராயவில்லை, அத்தோடு இந்தப்பகுதியை ஏனைய பகுதிகளோடு ஒப்பிட்டுப்படிக்கவும் இல்லை. இதனாலேயே இவர்கள் தவறான ஒரு முடிவுக்கு வர நேரிடுகிறது. 1 கொரிந்தியர் 7 தரும் போதனையை முதலில் ஆராய்வோம்.*

## கொரிந்தியர் பவுலிடம் கேட்ட கேள்வி

*இந்த வேதப்பகுதியில் பவுல் கொரிந்து சபையில் காணப்பட்ட ஒரு சிக்கலைத் தீர்ப்பதற்கு தகுந்த ஆலோசனைகளைக் கொடுக்கிறார். அந்தச் சிக்கல் என்ன என்பதை முதலாவது வசனம் விளக்குகிறது. ஸ்திரீயைத் தொடாமலிருப்பது மனிதனுக்கு நல்லதா? என்பது அந்தக் கேள்வி. "தொடாமலிருப்பது" என்ற கிரேக்க பதத்தை இப்பகுதியில் திருமணம் செய்து கொள்வது என்ற பொருளில் விளங்கிக் கொள்ள வேண்டும். கொரிந்து சபையில் இருந்த சிலர் பவுலிடம் தாங்கள் வாழ்கிற சமுதாய சூழலில் தனிமையில் இருப்பது நல்லதா? அல்லது திருமண வாழ்க்கை நடத்துவது நல்லதா? என்று விளக்கம் கேட்டிருந்தார்கள். அந்தக் கேள்விக்கே பவுல் இங்கு விளக்கம் தருகிறார். அவர்கள் அப்படிக்கேட்டதற்குக் காரணம் அவர்கள் வாழ்ந்த சமுதாயத்தில் ஒழுக்கம் குறைவாக இருந்தது. இதனால் தனிமையில் வாழ்வது சிலருக்கு ஆபத்தாக இருந்தது. அடுத்ததாக அன்று கிறிஸ்தவர்கள் அதிக துன்பத்துக்குள்ளாகி மரணத்தையும் சந்திக்க நேர்ந்தது. பல கிறிஸ்தவ குடும்பங்கள் தலைவனை இழந்து பாதிக்கப்பட்டன. இத்தகைய நிலமையில் என்ன செய்ய வேண்டும் என்பதே கொரிந்தியர்கள் சிலரின் கேள்வி. அந்தக்கேள்விக்கு முழு சபையும் அறிந்து கொள்ளும்படியாக இந்தப்பகுதியில் விளக்கம் கொடுக்கிறார் பவுல்.*

## பவுலின் விளக்கம்

*முதல் வசனத்தில் பவுல் பொதுவான ஒரு பதிலை அளிக்கிறார். ஒரு மனிதன் திருமணம் செய்து கொள்ளாமல் வாழ்வதில் கேடில்லை என்பது அந்தப் பதில். ஆனால், இந்தப் பதிலை மட்டும் கொடுத்துவிட்டால் சிக்கல் தீர்ந்து விடாது என்பதால் பவுல் மேலும் சில விளக்கங்களைத் தொடர்ந்து அளிக்கிறார். அடுத்ததாக பவுல், இருந்தாலும், சமுதாயத்தில் காணப்படும் பாலியல் ஒழுக்கக்குறைவின் காரணமாக ஒவ்வொரு மனிதனும், ஒவ்வொரு பெண்ணும் திருமணம் செய்து கொள்வது நல்லது என்று 3ம் வசனத்தில் கூறுகிறார். முதலில் இந்த இருவசனங்களிலும் பவுல் கூறுவதை சரியாக விளங்கிக்கொள்ள வேண்டும். பவுல் திருமணம் செய்து கொள்ளாமல் வாழ்வதில் கேடில்லை என்று கூறுகிறபோது தன்னுடைய சொந்தக் கருத்தைக் கொடுக்கவில்லை. ஏனெனில், படைப்பில் திருமணத்தைக் கர்த்தர் ஏற்படுத்தியிருந்தபோதும் நிச்சயமாக ஒவ்வொரு ஆணும், பெண்ணும் திருமணம் செய்யாமல் வாழக்கூடாது என்று அவர் கட்டளையிடவில்லை. திருமணம் மனிதனின் நன்மைக்காக ஏற்படுத்தப்பட்டது. அதில் ஈடுபடுவதும் ஈடுபடாததும் ஒவ்வொரு மனிதனின் சூழ்நிலையையும், சுதந்திரத்தையும், ஈவையும் பொறுத்தது. ஆகவே, பவுல் முதலாவது வசனத்தில் சொல்லியிருப்பது படைப்பில் கர்த்தர் ஏற்படுத்திய சமூக உறவுக்கு எதிரானதல்ல. வேதத்தோடு பொருந்திப்போகும் போதனையே. இதன் மூலம் ஆதியாகமத்தில் தரப்பட்டுள்ள*

திருமணம் பற்றிய போதனைக்கான மேலதிக விளக்கத்தை பவுலிடம் இருந்து பெற்றுக்கொள்கிறோம் அவ்வளவே. அடுத்தகாக பவுல், ஒருவருடைய சூழ்நிலை திருமணம் செய்து கொள்ளுவதை வற்புறுத்துமானால் நன்றாக செய்து கொள்ளுங்கள் என்று கூறுகிறார் (வச. 2). இது படைப்பில் கர்த்தர் ஏற்கனவே திருமணத்தை ஏற்படுத்தியிருப்பதை நமக்கு நினைவூட்டுகிறது..

தொடர்ந்து பவுல் கணவனுக்கும் மனைவிக்குமிடையில் இருக்க வேண்டிய உறவுமுறையைப்பற்றி விளக்கி அந்த உறவு முறையும், ஆத்மீக வாழ்க்கையும் பாதிக்கப்படாமல் இருப்பதற்கான சில ஆலோசனகளைத்தருகிறார். அந்த ஆலோசனைகளில் ஒன்று ஜெபத்திற்கும், உபவாசத்திற்கும் வசதியாக கணவன் மனைவி இருவரும் சில காலத்துக்கு உடலுறவு கொள்ளாமலிருப்பது நல்லது என்பதாகும் (வ. 5). 6ம் வசனத்தில் பவுல், “நான் இதைக் கட்டளையாகச் சொல்லாமல் யோசனையாகச் சொல்லுகிறேன்” என்கிறார். இதை வைத்துக் கொண்டு சிலர், பவுல் இங்கே சொல்லியிருப்பது அவருடைய சொந்தக் கருத்து என்றும், அதற்கும் வேதத்திற்கும் சம்பந்தமில்லை என்றும் கூறுகிறார்கள். இங்கே பவுல் சொல்லியிருப்பதை இவர்கள் விளங்கிக் கொள்ளவில்லை. பவுல் இதுவரை திருமணத்தைப்பற்றி கர்த்தர் ஆதியாகமத்திலும், மத்தேயு 19:1-12 லும் போதித்துள்ள காரியங்களுக்கு எதிரான விளக்கங்களைக் கொடுக்கவில்லை. அவற்றை மறுபடியும் நினைவுபடுத்தி அவற்றின் அடிப்படையில்தான் விளக்கம் கொடுத்திருக்கிறார். திருமண வாழ்க்கையில் ஏற்கனவே ஈடுபட்டிருப்பவர்களின் உடலுறவுத் தொடர்புபற்றி அவர் சொல்லியிருப்பது நல்ல ஆலோசனை. அதை தங்கள் வசதிக்கேற்ப ஒவ்வொருவரும் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அதைப் பவுல் கட்டளையாகக் கொடுக்க முடியாது. கணவனும், மனைவியும் சில காலம் உடலுறவு கொள்ளாமல் இருக்கத்தான் வேண்டும் என்று பவுல் கட்டளையிட்டுச் சொல்லியிருந்தால் அது பரிசேயர்கள் போதித்தது போலாகி-விடும். இது பத்துக்கட்டளைகளைப் போன்ற போதனையல்ல. ஆகவேதான், வாசிப்பவர்கள் தன்னைத் தவறாகப் புரிந்து கொள்ளக்கூடாது என்பதற்காக இதை நான் நல்ல யோசனையாக சொன்னேன் என்கிறார் பவுல்.

இதற்குப் பிறகு 10-ம் வசனத்தில் பவுல், திருமணமானவர்களுக்கு ஆலோசனை சொல்லத்தொடங்குகிறபோது, இதை நானல்ல, கர்த்தரே கட்டளையிடுகிறார் என்று கூறுகிறார். இதனால் இதுவரை பவுல் சொன்னது அவருடைய சொந்தக்கருத்துக்கள், இனி சொல்லவருவது கர்த்தருடைய கட்டளை என்று தவறாக விளங்கிக் கொள்ளக்கூடாது. பவுலின் வார்த்தை-களுக்கும், கர்த்தரின் வார்த்தைகளுக்கும் வேறுபாடிருப்பதாக இந்தப்பகுதி சுட்டிக்காட்டவில்லை. இங்கே பவுல் இப்படி எழுதுவதற்குக் காரணம், திருமணத்தைப்பற்றியும், விவாகரத்தைப்பற்றியும் இயேசு மத்தேயு 19:1-10 வரையுள்ள வசனங்களில் கட்டளையாகத் தந்து ஏற்கனவே விளக்கியிருப்பதை நினைவுபடுத்தத்தான். இது பவுலின் விசேடமான சொல் நடை. மத்தேயு 19 விவாகரத்தைத் தவிர்க்கும்படிப் போதிக்கிறது. அதையே பவுலும் இங்கு விளக்குகிறார். ஆகவே, இயேசுவின் வார்த்தைகள் பவுலின் வார்த்தைகளைவிட அதிகாரமுள்ளவை என்ற முடிவுக்கு வருவது தகாது. பவுல் இங்கே தன்னுடைய வார்த்தைகள் கர்த்தரின் வார்த்தைகளைவிட தாழ்ந்தது என்ற பொருளில் எதையும் எழுதவில்லை. அது வேதம் தெரியாத சிலர் தவறாகக் கொடுக்கும் விளக்கம்.

இனி 12-ம் வசனத்திற்கு வந்தால் அங்கே பவுல் கிறிஸ்தவர்

அல்லாதவர்களோடு மணவாழ்க்கை வாழும் நிர்ப்பந்தம் ஏற்பட்டிருப்பவர்களுக்கு ஆலோசனை கொடுப்பதைப் பார்க்கலாம். இங்கே பவுல், கர்த்தரல்ல நானே சொல்லுகிறதாவது என்று கூறி ஆலோசனைகளைத் தருகிறார். இதற்குக் காரணம் என்ன? கர்த்தர் இந்த விஷயத்தைப்பற்றி இதுவரை குறிப்பிட்டு விளக்கியிராததாலேயே பவுல் இப்படி எழுத நேர்ந்தது. தன்னுடைய ஆலோசனையை வெறும் யோசனையாக மட்டும் வாசிப்பவர்கள் எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காக அல்ல. விவாகரத்து கூடாது என்று பழைய ஏற்பாட்டிலும், மத்தேயுவிலும் இயேசு போதித்திருப்பதை வாசிக்கிறோம். ஆனால், கிறிஸ்தவர்கள் கிறிஸ்தவரல்லாதவர்களோடு மணவாழ்க்கையில் ஈடுபடும் நிர்ப்பந்தம் ஏற்படுகிறபோது எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று இயேசு இதுவரை விளக்கமாகப் போதிக்கவில்லை என்பதையே பவுல் தன் வார்த்தைகள் மூலம் விளக்குகிறார். இங்கே என் வார்த்தைகள் என்று கூறி பவுல் கொடுக்கும் போதனைகள் பரிசுத்த ஆவியின் வார்த்தைகள். அவற்றை வேதமல்ல என்று சொல்லுவது அறிவீனம்.

இனி 25-ம் வசனத்தையும் இதே விதத்தில்தான் விளங்கிக் கொள்ள வேண்டும். அங்கே பவுல், கன்னிகைகளைக்குறித்து கர்த்தரால் எனக்குக் கட்டளையில்லை . . . . என் அபிப்பிராயத்தைத் தெரியப்படுத்துகிறேன் என்கிறார். இங்கே பவுல் திருமணமாகாதவர்கள் அப்படியே இருப்பது நல்லது என்று விளக்கி அதற்கான காரணங்களைத் தருகிறார். திருமணத்தைப் பற்றியும், விவாகரத்தைப்பற்றியும் குறிப்பிட்டு விளக்கிப் பேசியிருக்கும் கர்த்தர் இந்த விஷயத்தைப் பற்றிக் குறிப்பிட்டுப் பேசவில்லை என்பதை சுட்டிக்காட்டவே கர்த்தரால் எனக்குக் கட்டளையில்லை என்ற வார்த்தைகள் மூலம் தெரியப்படுத்துகிறார். இதை வாசிக்கும்போது இவை கர்த்தருடைய வார்த்தைகளல்ல என்ற பொருளில் வாசிக்கக்கூடாது. இங்கு பவுல் தரும் ஆலோசனைகள் பவுல் இயேசுவிடம் இருந்து பெற்றுக்கொண்டுள்ள ஆலோசனைகள். இவை இதுவரை இயேசு குறிப்பிட்டுப் விளக்கியிராத சத்தியங்கள். இவையும் பரிசுத்த ஆவியின் வெளிப்படுத்தல்களே.

பவுலினுடைய நிருபங்களை வாசிக்கும்போது அவருடைய சொல்நடையை நாம் கூர்ந்து கவனிக்க வேண்டும். மேலெழுந்தவாரியாக ஒரு சில வசனங்களை மட்டும் வாசித்துவிட்டு வேதம் போதிப்பதை சரியாக விளங்கிக்கொள்ளாமல் பவுலின் போதனைகளில் குறைகாணக்கூடாது. பவுலின் எழுத்துக்களில் சிலவேளை நகைச்சுவையையும், உயர்வுநவிற்சியையும்கூடப் பார்க்கலாம். அவற்றை நாம் தவறாகப்புரிந்து கொண்டு பவுலின் வார்த்தைகள் பரிசுத்த ஆவியின் வார்த்தைகள் அல்ல என்று சொல்வோமானால் நாம்தான் தவறிழைத்தவர்களாகிவிடுவோம். வேதத்தில் காணப்படும் பவுலின் போதனைகள் அனைத்தும் கர்த்தர் நமக்களித்துள்ள போதனைகள். இயேசு பரிசுத்த ஆவியின் மூலம் நமக்கு வெளிப்படுத்தியிருக்கும் கர்த்தரின் சித்தம். பவுலின் போதனைகளைக் குறைத்து மதிப்பிடுபவர்கள் வேதம் புரியாத அறிவீலிகள். புதிய ஏற்பாட்டை எழுதியவர்கள் பரிசுத்த ஆவியால் வழிநடத்தப்பட்டு கர்த்தரின் சித்தத்தை எழுத்தில் வடித்தார்கள்

இனி புதிய ஏற்பாட்டை எழுதியவர்கள் பரிசுத்த ஆவியின் வல்லமையால் அதை எழுதினார்கள் என்பதற்கும், அவர்களுடைய எழுத்துக்கள் அதிகாரம் கொண்ட கர்த்தருடைய கட்டளைகள் என்பதற்கும் வேதம் நம்முன் வைக்கும் ஆதாரங்களைப் பார்ப்போம். புதிய ஏற்பாடு அத்தகைய மூன்று சாட்சியங்களை

*நம் முன் வைக்கின்றது.*

## இயேசு கிறிஸ்துவின் போதனை

*கல்வாரி மரணத்தைச் சந்திப்பதற்கு முன் இயேசு தன்னுடைய சீடர்களுக்கு முக்கிய போதனைகளை அளித்தார். அந்த முக்கிய போதனைகளில் ஒன்றாக அவர் புதிய ஏற்பாட்டின் அதிகாரத்தை தன்னுடைய சீடர்களுக்கு வெளிப்படுத்தினார். அதை இரண்டு முக்கிய பகுதிகளில் வாசிக்கலாம். யோவான் 14:26; யோவான் 16:33 ஆகியவையே அந்த வேதப்பகுதிகள். அவற்றை இப்போது பார்ப்போம்.*

*யோவான் 14:26 - "என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப்போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்." யோவான் 16:13 - "சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்; அவர் தம்முடைய சுயமாய்ப்போசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்."*

*இந்த இரண்டு வேதப்பகுதிகளிலும் இயேசு பரிசுத்த ஆவியை அனுப்பப்போகிறேன் என்ற வாக்குத்தத்தத்தை சீடர்களுக்குத் தந்து, அப்படியாக வரப்போகிற ஆவியானவர் மூன்று முக்கிய காரியங்களைச் செய்யப்போகிறார் என்று தெரிவிக்கிறார்.*

*1. நான் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைவூட்டுவார் - கிறிஸ்துவுடைய வாழ்வோடும், மரணத்தோடும் தொடர்புடைய அத்தனைக்காரியங்களையும் பரிசுத்த ஆவியானவர் நினைவுபடுத்துவார். அவற்றைத்தான் இன்று நான்கு சுவிசேஷ நூல்களிலும் நம்மால் வாசிக்க முடிகின்றது.*

*2. உங்களுக்கு அறிவிப்பார் - வரலாற்று நிகழ்ச்சிகளை விளங்கிக்கொள்வதெப்படி என்பதை பரிசுத்த ஆவியானவர் போதிப்பார். அவற்றைத்தான் இன்று நாம் புதிய ஏற்பாட்டு நிருபங்களில் வாசித்து அறிந்து கொள்ளுகிறோம்.*

*3. வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார் - உலக முடிவோடு தொடர்புடையதாக இனி நடக்கப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார். இவற்றையே நாம் வெளிப்படுத்தல் விசேஷத்தில் வாசிக்கிறோம்.*

*இயேசு தான் மரித்து பரலோகத்திற்குப்போவதற்கு முன்பாக இந்த மூன்று உண்மைகளையும் வாக்குத்தத்தங்களாக தன்னுடைய சீடர்களுக்கு அறிவித்தார். பரிசுத்த ஆவியானவர், அவர்கள் அறிந்து எழுத்தில் வடிக்க வேண்டிய அனைத்தையும் அவர்களுக்கு விளக்கிப்போதிப்பார் என்று இயேசு உறுதியாக அவர்களுக்கு விளக்கியிருப்பதை இந்த வசனங்களில் வாசிக்கிறோம். ஆகவே, புதிய ஏற்பாட்டில் பவுலுடைய எழுத்துக்களில் மாம்ச சிந்தனையின் அடிப்படையிலான அவருடைய சொந்தக் கருத்துக்களும், வேத வார்த்தைகளோடு சேர்ந்து இருக்கின்றன என்று கூறுவது இயேசுவின் வார்த்தைகளை விளங்கிக்கொள்ளாமல் பேசுகின்ற பேச்சு. இயேசு தன்னுடைய வார்த்தைகளின் மூலம், பரிசுத்த ஆவியானவர் புதிய ஏற்பாட்டை எழுதியவர்களை வழிநடத்தி*

அவர்கள் எழுத்தில் வடிக்க வேண்டிய அனைத்தையும், எந்தவித மாம்ச சிந்தனையும் அவற்றில் புகுந்துவிடாதபடி மேற்பார்வை செய்து எழுத வைப்பார் என்று விளக்குகிறார். ஆகவே, பவுலின் போதனைகளில் மாம்ச சிந்தனைக்கு இடமேயில்லை. புதிய ஏற்பாட்டிலுள்ள அனைத்துப் போதனை-களும், விளக்கங்களும் ஒன்றுவிடாமல் கர்த்தரின் வார்த்தைகளாக இருக்கின்றன.

## பேதுருவின் போதனை

*2 பேதுரு 3:15-16 - "நமக்குப் பிரியமான சகோதரனாகிய பவுலும் தனக்கு அருளப்பட்ட ஞானத்தினாலே இப்படியே உங்களுக்கு எழுதியிருக்கிறான். எல்லா நிருபங்களிலும் இவற்றைக்குறித்துப்பேசியிருக்கிறான்; அவன் சொன்ன-வைகளில் சில காரியங்கள் அறிகிறதற்கு அரிதாயிருக்கிறது; கல்லாதவர்களும், உறுதியில்லாதவர்களும் மற்ற வேதவாக்கியங்களைப் புரட்டுகிறதுபோலத் தங்களுக்குக் கேடுவரத்தக்கதாக இவைகளையும் புரட்டுகிறார்கள்."*

அப்போஸ்தலனாகிய பேதுரு இந்த வாக்கியங்கள் மூலமாக கர்த்தரின் பொறுமைக்குணத்தையும், தன்மைகளையும் குறித்து விளக்குகிறார். அப்படி விளக்கும்போது அவற்றைப்பற்றி பவுலும் தன்னுடைய நூல்களில் விளக்கி-யிருப்பதாகக் கூறுவதைக் கவனியுங்கள். பேதுரு இங்கே, பவுல் அவற்றைத் தான் பெற்றுக்கொண்ட ஞானத்தினாலே எழுதியதாகக் கூறுவதைப் பாருங்கள். அதாவது பவுலின் வார்த்தைகள் பரிசுத்த ஆவியினால் கொடுக்கப்பட்ட வார்த்தைகள் என்று பேதுரு விளக்குகிறார். கல்லாதவர்களும், உறுதியற்றவர்-களும் அவற்றைப்புரிந்து கொள்ளமுடியாமல் குறைகூறலாம். ஆனால், பவுலின் வார்த்தைகள், கர்த்தருடைய வார்த்தைகள் என்பதை பேதுருவின் வார்த்தைகள் உறுதிப்படுத்துகின்றன. பேதுரு பவுலின் எழுத்துக்களை தன்னுடைய நூல்களுக்கும், ஏனைய புதிய ஏற்பாட்டு நிருபங்களுக்கும், பழைய ஏற்பாட்டு நூல்களுக்கும் சமமான இடத்தில் வைத்துப்பேசுவதைப் பார்க்கிறோம். ஆகவே, பவுலின் வார்த்தைகளில் மாம்ச சிந்தனை அடங்கியிருக்கிறது, அவை நம்முடைய கலாச்சாரத்துக்கும், காலத்துக்கும் பொருந்தாது என்று பேசுவது வேதத்தின் அதிகாரம் புரியாமல் பேசுகின்ற பேச்சு.

## பவுலின் போதனை

அப்போஸ்தலன் பவுல் தன்னுடைய நிருபங்களில், தான் பரிசுத்த ஆவியின் மூலமாகவே தன்னுடைய போதனைகளைப்பெற்றுக்கொண்டதாகவும், தனக்கு அப்போஸ்தல அதிகாரம் உண்டு என்பதையும் பலதடவைகள் கூறியிருப்பதை நாம் மறந்துவிடக்கூடாது. பவுல் இயேசு கிறிஸ்துவால் தெரிவு செய்யப்பட்ட ஒரு அப்போஸ்தலன். அப்போஸ்தலர்கள் அனைவரும் கர்த்தரிடமிருந்து நேரடியாக வெளிப்படுத்தலைப் பெற்றுக்கொண்டவர்கள். கர்த்தருடைய சித்தத்தை ஆத்துமாக்களுக்கு வெளிப்படுத்தி, சபைக்காரியங்களை கிரமமாக-வும், சீராகவும் செய்துவைக்கக்கூடிய அதிகாரம் அவர்களுக்கு இருந்தது. இவ்வாறாக அப்போஸ்தலர்களுக்கு அன்று கொடுக்கப்பட்டிருந்த அதிகாரம் இன்று ஒருவருக்கும் இல்லை. அதனால்தான் அப்போஸ்தலராக இன்று ஒருவரும் இருக்க முடியாது. கீழ்வரும் வசனங்கள் பவுல் தன்னுடைய நிருபங்-கள் மூலமாக வெளிப்படுத்தியவற்றை பரிசுத்த ஆவியிடமிருந்து நேரடியாகப் பெற்றுக்கொண்டார் என்பதற்கான சில உதாரணங்களாகும்.

*கலாத்தியர் 1:11, 12 - "மேலும் சகோதரரே, என்னால் பிரசங்கிக்கப்பட்ட*

*சுவிசேஷம் மனுஷருடைய யோசனையின்படியானதல்லவென்று உங்களுக்குத் தெரிவிக்கிறேன். நான் அதை ஒரு மனுஷனால் பெற்றதுமில்லை, மனுஷனால் கற்றதுமில்லை, இயேசு கிறிஸ்துவே அதை எனக்கு வெளிப்படுத்தினார்.'' இந்த வசனம் பவுல் சுவிசேஷத்தைக் கர்த்தரிடமிருந்து நேரடியாகப் பெற்றுக்கொண்டாரென்பதை ஆணித்தரமாக வெளிப்படுத்துகிறது. பாரம்பரியமோ அல்லது மனித ஞானமோ அதைப் பவுலுக்கு வெளிப்படுத்தவில்லை.*

*பவுல் தெசலோனிக்கேயரைப் பார்த்து பின்வருமாறு கூறுகிறார்: ''நீங்கள் தேவ வசனத்தை எங்களாலே கேள்விப்பட்டு ஏற்றுக்கொண்டபோது, அதை மனுஷர் வசனமாக ஏற்றுக்கொள்ளாமல், தேவ வசனமாகவே ஏற்றுக்கொண்டதினாலே நாங்கள் இடைவிடாமல் தேவனுக்கு ஸ்தோத்திரஞ் செலுத்துகிறோம்; அது மெய்யாகவே தேவ வசனந்தான், விசுவாசிக்கிற உங்களுக்குள்ளே அது பெலனும் செய்கிறது.'' இதிலிருந்து, சொந்த ஞானத்தினாலன்றி கர்த்தருடைய அதிகாரத்துடன் தான் பேசியிருந்ததை பவுல் உணர்ந்திருந்ததை அவருடைய வார்த்தைகள் விளக்குவதாக இருக்கின்றன. தான் பேசியது தேவனுடைய வசனமென்பதை பவுல் வலியுறுத்திக்கூறுகிறார்.*

*1 கொரிந்தியர் 14:37ல் பவுலின் இன்னுமொரு சாட்சியத்தைப் பார்க்கிறோம். அங்கே பவுல் கொரிந்தியர்களைப்பார்த்து, ''ஒருவன் தன்னைத் தீர்க்கதரிசியென்றாவது, ஆவியைப்பெற்றவனென்றாவது எண்ணினால், நான் உங்களுக்கு எழுதுகிறவைகள் கர்த்தருடைய கற்பனைகள் என்று அவன் ஒத்துக்கொள்ளக்கடவன்'' என்று அறிவிப்பதை வாசிக்கிறோம். இது தன்னுடைய அப்போஸ்தல அதிகாரத்தை வலியுறுத்த பவுல் எழுதிய வவசனங்களாகும். தன்னுடைய வார்த்தைகள் மனிதசிந்தனையில் இருந்து புறப்பட்டவையல்ல, அது தேவனிடத்திலிருந்து வந்தவை என்றும், அவற்றைத் தேவனுடைய கற்பனைகளாகக்கருதி கொரிந்தியர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் ஒரு அப்போஸ்தலனால் மட்டுமே சொல்ல முடியும். இந்த வசனங்கள் காணப்படும் பகுதியில்தான் பவுல் பெண்கள் சபையில் பேசுவது வெட்கக்கேடான காரியம் என்ற போதனையைத் தந்திருப்பதைப் பார்க்கிறோம். இதேபோல் 1 கொரிந்தியர் 11:23-ம், ''நான் உங்களுக்கு ஒப்புவித்ததைக் கர்த்தரிடமிருந்து பெற்றுக்கொண்டேன்'' என்று கூறுகிறார்.*

*சிந்தித்துப்பாருங்கள்! இயேசு கிறிஸ்து புதிய ஏற்பாட்டில் ஒரு நூலையும் தானே எழுதவில்லை. மத்தேயு, மார்க்கு, லூக்கா, யோவான் ஆகியோரும், அப்போஸ்தலர்களும் அவர்களுடைய உதவியாளர்களுமே எழுதியிருக்கிறார்கள். இவர்கள் இயேசுவின் போதனைகளை எப்படிப்பெற்று எழுதி வைத்தார்கள்? இயேசு கிறிஸ்துவிடம் இருந்து நேரடியாகத் தாம் கேட்டு அறிந்துகொண்டவற்றையும், மற்றவர்கள் தங்களுக்கு வெளிப்படுத்தியவற்றையும், பரிசுத்த ஆவியானவர் நேரடியாகத் தங்களுக்கு வெளிப்படுத்திய இயேசுவின் வார்த்தைகளையும் எழுதி வைத்தார்கள். கெத்சமனே தோட்டத்தில் இயேசு பேசியவற்றை அவர்கள் பரிசுத்த ஆவியானவர் நேரடியாக வெளிப்படுத்தியதன் மூலமாகவே அறிந்துகொண்டிருக்க முடியும். ஏனெனில் அன்று இயேசுவுக்குப் பக்கத்தில் ஒருவரும் இருக்கவில்லை. ஆகவே, பவுலின் வார்த்தைகளில் அவருடைய மாம்ச சிந்தனைகளும் அடங்கியிருக்கின்றன என்று பேசுவது 'லிபரல்' (Liberal) பேச்சாகும். மெய்க்கிறிஸ்தவன் புதிய ஏற்பாட்டைக் கர்த்தரின் வார்த்தையாக மட்டுமே பார்ப்பான்.*

# சீர்திருத்த பாப்திஸ்து

சீர்திருத்த பாப்திஸ்து யார்? என்ற கேள்விக்கு பதிலளிக்க வேண்டியது இன்று அவசியமாகிறது. உலகெங்கும் உருவாகி வளர்ந்துவரும் சீர்திருத்த பாப்திஸ்து சபைகள் இன்று தமிழுலகிலும் தீப்பொறிபோல் தோன்றி வளர்கின்றன. அவற்றின் ஆரம்பம் சிறிதாக இருந்தாலும் எதிர்காலம் நிச்சயம் பெரியதாகவே இருக்கும் என்பதில் எந்த சந்தேகமும் கிடையாது. "சீர்திருத்த பாப்திஸ்து" என்ற பெயரில் காணப்படும் இரு வார்த்தைகளில் இச்சபைகள் பற்றிய விளக்கம் அடங்கியுள்ளது. பெயரில் என்ன இருக்கின்றது? அது அவசியமில்லை என்று சிலர் கூறுவார்கள். ஆனால், நம் பெயர் நம்மை மற்றவர்களுக்கு இனங் காட்டுவது போல் "சீர்திருத்த பாப்திஸ்து" என்ற பெயர் அச்சபைகள் எதை விசுவாசிக்கின்றன என்பதை அனைவருக்கும் எந்தவிதத் தயக்கமும் இல்லாமல் நெஞ்சுயர்த்திப் பறைசாற்றுகின்றது. இவ் வார்த்தைகள் எதை விளக்குகின்றன என்று பார்ப்போம்.

## சீர்திருத்தம்

"சீர்திருத்தம்" என்ற வார்த்தை பதினாறாம் நூற்றாண்டில் உலகில் ஏற்பட்ட திருச்சபை சீர்திருத்தத்தையும், அத்திருச்சபை சீர்திருத்தத்தால் வெளிக்கொணரப்பட்ட சத்தியங்களையும் குறிக்கப் பயன்படுத்தப்படும் வார்த்தையாகும். பதினாறாம் நூற்றாண்டில் மார்டின் லூத்தர், ஜோன் கல்வின் போன்றோரைப் பயன்படுத்திக் கர்த்தர் கத்தோலிக்க அடக்குமுறையின் கீழிருந்த மக்களுக்கு கிறிஸ்துவின் மூலம் விடுதலை தந்து, மறுபடியும் அனைவரும் வேதத்தை வாசித்து அதன் போதனைகளைப் புரிந்து நடக்கக்கூடிய வாய்ப்பை ஏற்படுத்தித்தந்தார். ரோமன் கத்தோலிக்க மதத்தின் அடக்குமுறையால் மக்கள் வாசித்துப் பயன்பெறமுடியாதிருந்த வேதம் பல மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டு எங்கும் விநியோகிக்கப்பட்டது. இதனால் சத்தியத்தை அறிந்து மக்கள் ஆத்மீக விடுதலை அடைந்தனர். இதனையே "சீர்திருத்தக்காலப்பகுதி" என்று சபை வரலாறு வர்ணிக்கின்றது. இக்காலப்பகுதியில் மறைந்து போயிருந்த சத்தியங்கள் மறுபடியும் வெளிப்படையாக மக்கள் அறிந்து கொள்ளும்படிப் போதிக்கப்பட்டன. வேதம் மட்டுமே அதிகாரமுள்ளது; அனைத்திற்கும் போதுமானது, கிருபையினால் மட்டுமே கிறிஸ்துவுக்குள் விசுவாசம், விசுவாசத்தினால் மட்டுமே ஒருவன் நீதிமானாக்கப்படுகிறான் என்பது போன்ற அழியாத வேதசத்தியங்கள் வெளிப்படையாக மறுபடியும் இக்காலப்பகுதியில் போதிக்கப்பட்டன. இப்போதனைகளின் அடிப்படையில் ஐரோப்பா முழுவதும் திருச்சபைகளும் நிறுவப்பட்டன. இச்சபைகள் "சீர்திருத்த சபைகள்" என்ற பெயரையும் பெற்றன. லூத்தர், கல்வின், நொக்ஸ் போன்ற தலைசிறந்த சீர்திருத்தப் பிரசங்கிகளையும் இச்சபைகள் போதகர்களாகக் கொண்டிருந்தன.

இச்சபைச்சீர்திருத்தம் தொடர்ந்து நிலைத்திருந்து எதிர்கால சந்ததியும் பயன்பட வேண்டும் என்ற ஆர்வத்தில் பதினேழாம் நூற்றாண்டில் கர்த்தரால் எழுப்பப்பட்ட திருச்சபைத் தலைவர்கள் பெரிதும் உழைத்தனர். ஜோன் ஓவன், தொமஸ் குட்வின், ரிச்சட் பெக்ஸ்டர், சிப்ஸ், ஜோன் பனியன் போன்றோர் இவர்களில் சிலர். திருச்சபையின் போதனைகளும், மக்களின் வாழ்க்கையும்

தூய்மையானதாக இருக்க வேண்டும் என்று இவர்கள் வற்புறுத்தியதால் "பியூரிட்டன்" (Puritan) என்ற பெயர் இவர்களுக்குச் சூட்டப்பட்டது. இக்காலப்பகுதியிலேயே திருச்சபை வாழ்வுக்கும் வளத்துக்கும் அவசியமென்று கருதி இப்பெருமக்கள் விசுவாச அறிக்கைகளையும், வினாவிடைப் போதனைகளையும் எழுதித் தொகுத்து வெளியிட்டனர்.

இவர்களின் வழியில் பதினெட்டாம் நூற்றாண்டு காலப்பகுதியில் கர்த்தர் எழுப்பிப் பயன்படுத்திய போதகரும் பிரசங்கியும் சார்ள்ஸ் ஹெடன் ஸ்பர்ஜன் பெருமகன் ஆவார். இதே சத்தியங்களை விசுவாசித்து இந்தியா, பர்மா ஆகிய நாடுகளில் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து சபை நிறுவிய சான்றோர்களாக வில்லியம் கேரி, அடோனிராம் ஜட்சன், ஹென்ரி மார்டின் போன்றோர் இருந்தனர். இவர்கள் வழியில் வேதம் மட்டுமே, கிருபை மட்டுமே, விசுவாசம் மட்டுமே என்ற சீர்திருத்தக் கோட்பாடுகளின் அடிப்படையில் அமைந்து உலகின் பல நாடுகளிலும் இன்று வளர்ந்து வரும் சபைகளே சீர்திருத்த சபைகள் என்ற பொதுவான பெயரால் அழைக்கப்படுகின்றன.

## பாப்திஸ்து

பாப்திஸ்து என்ற பெயர் பொதுவாக ஒரு விசுவாசிக்கு விசுவாசத்தின் அடிப்படையில் முழுக்கு ஞானஸ்நானத்தை அளிக்கும் சபைகளைக் குறிக்கப் பயன்படுத்தப்படுகின்றது. ஆனால், பாப்திஸ்து என்ற பெயரில் உலவும் அனைத்து சபைகளும் இதை விசுவாசிக்கின்றன என்று கூறிவிட முடியாது. சார்ள்ஸ் பினியின் போதனையைப் பின்பற்றி அர்ப்பண அழைப்புக் கொடுத்து கிறிஸ்துவுக்காக தீர்மானம் எடுப்பவர்களுக்கு முழுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும் "பாப்திஸ்துகளும்" இருக்கிறார்கள். இவர்கள் மனிதனின் இரட்சிப்பு, அவன் கிறிஸ்துவுக்கு எடுக்கும் "தீர்மானத்தில்" தங்கியிருப்பதாக நம்புகிறார்கள். இந்த பாப்திஸ்துகளுக்கும் சீர்திருத்த பாப்திஸ்துகளுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. அத்தோடு, மனிதஞானத்தின்படி கர்த்தருக்கு முன் அந்நிய அக்கினியை ஆராதனையில் பயன்படுத்தும் பாப்திஸ்துகளும் இருக்கிறார்கள். ஆடலும், பாடலும், கூத்தும் இன்று இத்தகைய சபைகளில் ஆராதனையை அலங்கரிக்கிறன. பெண்கள் பிரசங்கிப்பதும், சபைக் கூட்டங்களை நடத்துவதும் இவர்கள் மத்தியில் சகஜம். ஆகவே, பாப்திஸ்து என்ற பெயரைக் கொண்ட எல்லோரும் வேதபூர்வமான சத்தியங்களை விசுவாசிக்கும் பாப்திஸ்துகள் என்று எண்ணிவிடக்கூடாது.

பதினேழாம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் சீர்திருத்த பாப்திஸ்துகள் Particular Baptist என்ற பெயரால் அழைக்கப்பட்டனர். இதற்குக் காரணம் இவர்கள் ஏனைய பொதுவான பாப்திஸ்துகளில் (General Baptist) இருந்து தம்மைப் பிரித்துக்காட்ட இப்பதங்களைப் பயன்படுத்தினர். பொதுவான பாப்திஸ்துகள் கிறிஸ்து எல்லோருக்குமாக மரித்தார் என்ற கோட்பாட்டை விசுவாசித்தனர். ஆனால், சீர்திருத்த பாப்திஸ்துகள் கிறிஸ்து குறிப்பிட்டவர்களுக்காக மட்டுமே மரித்தார் என்ற போதனையை விசுவாசித்தனர். "Paticular" என்ற பதம் இவ்விறையியல் போதனையை வலியுறுத்துவதற்காகவே பயன்படுத்தப்பட்டது. கிருபையின் போதனைகளில் ஒன்றான, கிறிஸ்து குறிப்பிட்ட மக்களுக்காக மரித்தார் என்பதையே இன்றைய சீர்திருத்த பாப்திஸ்துகளும் விசுவாசிக்கின்றனர். "சீர்திருத்தம்" என்ற பதம் சீர்திருத்தக் காலப்பகுதியையும், அக்காலத்தில் உயிர் கொடுக்கப்பட்ட கிருபையின் போதனைகளையும் குறிப்பதால் இன்று சீர்திருத்த பாப்திஸ்து என்ற பெயரே பொதுவாக வழக்கிலிருக்கிறது.

## சீர்திருத்த பாப்திஸ்துகள் விசுவாசிப்பதென்ன?

*சீர்திருத்த பாப்திஸ்துகள் பொதுவாக விசுவாசிக்கும் சத்தியங்கள் சுருக்கமாகக் கீழே தரப்பட்டுள்ளன. இவையே சீர்திருத்தப் பாப்திஸ்துகளின் ஊழியத்தின் சிறப்புமிக்க அம்சங்களாக இருக்கின்றன:*

### 1. வேதத்தின் அதிகாரம்

*வேதம் மட்டுமே சகல அதிகாரத்தையும் கொண்ட கர்த்தருடைய வெளிப்படுத்தல். இதைத்தவிர வேறு எதன் மூலமும் கர்த்தரின் சித்தத்தை மனிதன் அறிந்து கொள்ள முடியாது. ஆகவே, வேதம் மனிதனின் சகல ஆத்மீகத் தேவைகளையும் நிறைவேற்றப் போதுமானது. இதனால் வேதபூர்வமான பிரசங்கத்திற்கு எப்போதும் சபைகளில் முதலிடம் கொடுக்கப்பட வேண்டும். வேதப்பகுதிகளுக்குத் தகுந்தவிளக்கமளித்து அவற்றின் அடிப்படையில் மட்டுமே போதனைகள் அளிக்கப்பட வேண்டும். இதன் காரணமாகவே சீர்திருத்த பாப்திஸ்துகள் 1689-ல் வெளியிடப்பட்ட பாப்திஸ்து விசுவாச அறிக்கையை சபையாக ஏற்றுக் கொண்டுள்ளார்கள். இவ்வறிக்கை வேதசத்தியங்களைத் தொகுத்து முறைப்படுத்தி விளக்குகின்றது. இதை சபையார் படித்து வேத அறிவில் தம்மை வளர்த்துக் கொள்ள முடிகின்றது. போலிப்போதனைகளில் இருந்து தம்மைக்காத்துக் கொள்ள முடிகின்றது. அத்தோடு வினாவிடைப் போதனையையும் சபை முறையாக சிறார்களுக்கும், பெரியவர்களுக்கும் வழங்க வேண்டும். சபையின் திட்டங்கள், செயல்கள் அனைத்தும் வேதபூர்வமானதாக இருக்க வேண்டும்.*

### 2. கர்த்தரின் இறை ஆண்மை

*கர்த்தர் சர்வ வல்லமையுடையவராயும், அனைத்தையும் கொண்டு நடத்துகிறவராயுமிருக்கிறார். உலகத் தோற்றத்திற்குமுன்பே அவர் தனது சித்தத்தின்படி தனக்காக குறிப்பிட்ட தொகை மக்களை இரட்சிக்கும்படித் தெரிந்து கொண்டிருக்கிறார். இவர்களை வேதம் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் என்று அழைக்கின்றது. மனிதன் தனனுடைய பாவத்தால், அதிலிருந்து விடுபடும் வல்லமையற்று கர்த்தரை அறியாதிருக்கிறான். கர்த்தரின் சித்தத்தின்படி எதையும் செய்ய முடியாத நிலையில் உள்ளான். கர்த்தர் தனது சுவிஷேசத்தின் மூலம் தாம் தெரிந்து கொண்டவர்களை மனித குலத்தில் இருந்து அழைத்து, பரிசுத்த ஆவியின் மூலமாக அவர்களுடைய கண்களைத் திறந்து, கிறிஸ்துவை அவர் கள் விசுவாசத்தின் மூலம் அறிந்து கொள்ளும்படியாகச் செய்கிறார். கிறிஸ்து, தெரிந்து கொள்ளப்பட்டவர்களுக்கு நித்திய ஜீவனை அளிப்பதற்காகத் தன்னைச் சிலுவையில் பலியாகத்தந்து, மரித்து, பின்பு உயிர்த்தெழுந்தார். ஆகவே, இரட்சிப்பு மனிதன் கிரியைகளின் மூலம் அடையமுடியாதபடி இலவசமாகத் தேவனுடைய ஈவாக வழங்கப்படுகிறது. இரட்சிப்பைப்பற்றிய இப்போதனையைக் கிருபையின் போதனை என்று பொதுவாக அழைப்பார்கள்.*

### 3. வேதபூர்வமான ஆராதனை

*கர்த்தரை அவரது வார்த்தையின் அடிப்படையில் மட்டுமே ஆராதிக்க வேண்டும். அந்நிய அக்கினியை கர்த்தர் வெறுக்கிறார். வேதத்தில் இல்லாததையும், அது போதிக்காதவற்றையும் ஆராதனையில் நுழைக்கக்கூடாது. மனித உணர்ச்சிகளுக்குத் தூபமிடுவதாக ஆராதனை அமையக்கூடாது. மனித ஞானத்திற்கும், வேதம் கட்டளையிட்டுப் போதிக்காதவற்றிற்கும் ஆராதனையில் இடமில்லை; வேதம் கட்டளையிட்டுப் போதிப்பவற்றை மட்டுமே*

ஆராதனையில் பயன்படுத்த வேண்டும். இவ்வேத விதிகள் சிலவேளைகளில் The Regulative Principle of Worship என்று அழைக்கப்படுகின்றது. வேதபோதனை, ஜெபம், சங்கீதம் மற்றும் கீர்த்தனைகளைப் பாடுதல் என்பவற்றை உள்ளடக்கியதாக திருச்சபை ஆராதனையும், குடும்ப ஆராதனையும் அமைய வேண்டும். அது ஆவியோடும், உண்மையோடும் கூடியதாக இருக்க வேண்டும். கர்த்தரை மட்டுமே மகிமைப்படுத்துவதாகவும் இருக்க வேண்டும்.

## 4. வேதபூர்வமான திருச்சபை

திருச்சபைக்கு முக்கியத்துவமளிப்பதாகவே கர்த்தரின் திட்டங்கள் அனைத்தும் அமைந்திருக்கின்றன. திருமுழுக்குப் பெற்றுக்கொண்ட கிறிஸ்தவர்களைக் கொண்டு அமைந்ததே உள்ளூர் திருச்சபை. ஆகவே, கிறிஸ்தவர்கள் எந்நாட்டிலும் கூடுமானவரையில் திருச்சபை அங்கத்தவர்களாக இருப்பது அவசியம். திருச்சபை அங்கத்தவர்கள் வேத அடிப்படையில் திருச்சபைக்காரியங்களில் ஊக்கத்தோடு பங்குபற்றுபவர்களாக இருக்க வேண்டும். எந்த ஊழியத்தையும் கிறிஸ்தவர்கள் திருச்சபை மூலமாக செய்ய வேண்டும். தனி ஆள் ஊழியங்களையும், சபைக் கட்டுப்பாடற்ற நிறுவன ஊழியங்களையும் திருச்சபை அறியாது. திருச்சபைக்கே திருமுழுக்கையும், திருவிருந்தையும் அளிக்கும் உரிமை உண்டு. திருச்சபைகள் போதகர்கள் மூலம் வேதத்தை மட்டும் போதிப்பதோடு ஒழுங்கு நடவடிக்கைகளையும் மேற்கொண்டு சபை தூய்மையுள்ளதாக இருக்கும்படிப் பார்த்துக் கொள்ள வேண்டும். சுவிசேஷ ஊழியத்தில் ஈடுபட்டு சபை நிறுவுதலும் திருச்சபையின் பெரும் பொறுப்பு. இவ்வுலகில் திருச்சபைகள் ஒருபோதும் பூரணமானதாக இருக்க முடியாதபோதும், அவை தனது ஆத்மீகத்தை இழந்ததாக இருக்கக் கூடாது. (மத். 18:15-20; 1 தீமோ. 3:15; எபி. 13:17).

## சீர்திருத்த பாப்திஸ்து சபைகள் இன்று ஏன் அவசியம்?

பத்தொன்பதாம் நூற்றாண்டில் இருந்தே சுவிசேஷ சபைகள் (Evangelical Churches) பொதுவாக வேதத்தின் அடிப்படையில் போதிப்பதையும், திருச்சபைகளை நடத்துவதையும் கைவிட்டுவிட்டன. அநேகமானவை பெந்தகொஸ்தே இயக்கத்தினால் பாதிக்கப்பட்டு வேதத்தின் அதிகாரத்தில் தமது நம்பிக்கையை இழந்துவிட்டன. அந்நியபாஷை பேசுதல், சுகமளித்தல், தீர்க்கதரிசனம் கூறல், கூத்துக்கள், இசைவழி ஊழியம் என்று போய் மனித ஞானத்திற்கும், ஆற்றலுக்கும் மதிப்பளிக்கும் வகையில் அவற்றின் ஊழியங்களும் மாற்றி அமைக்கப்பட்டன. மெக்காவரனின் மனிதநல (Humanism) சபை வளர்ச்சிக் கோட்பாடுகளைப் (Church growth principles) பின்பற்றி அதன் ஊழியங்கள் அமையத் தொடங்கின. பெண்கள் பிரசங்கிப்பதும், போதிப்பதும் திருச்சபை ஊழியத்தில் வழமையாகி போதக ஊழியத்திற்கு மாசேற்படுத்தின. இத்தகைய ஆத்மீகக்குழப்பமுள்ள சூழ்நிலையில் வேதம் மட்டுமே அதிகாரமுள்ளது, அதன் வழியே சாலச்சிறந்தது என்ற உறுதியுடன் கர்த்தருடைய நாமத்தின் மகிமைக்காகப் பாடுபடும் சீர்திருத்த பாப்திஸ்து சபைகள் இன்று தமிழர் மத்தியில் தோன்றி வளர்வது அவசியம். பதினாறாம், பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்து சிறந்த நமது முன்னோர்களின் வழியில் நமது மக்களும் கிறிஸ்தவத்தின் சிறப்பறிந்து வாழ்வது அவசியம். இதற்குக் குறைந்த எதையும் நாம் ஏற்றுக்கொள்வது கர்த்தருக்கு மகிமையளிக்கும் செயலல்ல.

**(சீர்திருத்த பாப்திஸ்துகள் விசுவாசிக்கும் சத்தியங்களைப்பற்றி மேலும் அறிந்து கொள்ள 1689 விசுவாச அறிக்கையைப் பெற்று வாசியுங்கள்.)**

# துன்பமும், ஆறுதலும்

## (திருச்சபை வரலாறு - 4-ம் நூற்றாண்டு)

அலெக்சாண்டர் செவேரஸின் (Alexander Severus 222-235) காலத்திலும், அரேபியனாகிய பிலிப்பின் காலத்திலும் (Philip the Arabian 244-249) ரோமப் பேரரசு திருச்சபையிடம் நட்போடு நடந்து கொண்டது. இந்தக் காலப்பகுதியில் மனிதர்கள் எல்லா சமயங்களையும் ஆராய்ந்து பார்த்து அவற்றில் இருக்கும் ஒன்றுக்கொன்று ஒத்துப்போகக்கூடிய காரியங்களின் அடிப்படையில் எல்லோருக்கும் பொதுவான ஒரு சமயத்தை அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டார்கள். செவேரஸுடனும், பிலிப்புடனும் ஒரிகன் (Origan) நல்ல நட்புடன் கடிதத்தொடர்பை வைத்திருந்தார். 38 ஆண்டுகளுக்கு திருச்சபையால் அமைதியை அனுபவிக்க முடிந்தது. இதன் காரணமாக திருச்சபை வளர்ந்து அதன் அங்கத்தவர்களின் தொகை அதிகரித்து. சமுதாயத்தில் திருச்சபைக்கு அதிக மதிப்பும் இருந்தது. ஆனால், டேசியனாலும் (Decius), வெலேரியனாலும் (Valerain) திருச்சபைக்கு பெருந்துன்பம் ஏற்பட்டது. திருச்சபை இத்துன்பத்தை 250-ல் இருந்து 260 வரை அனுபவிக்க நேர்ந்தது.

இந்தக்காலப்பகுதியில் ரோம அரசுக்கு பெருங் கஷ்டம் ஏற்பட்டது. எல்லாப் பக்கங்களில் இருந்தும் ரோம அரசை எதிரிகள் சூழ்ந்து கொண்டனர். கோதியர்களின் (Goths) தாக்குதல் இவற்றில் மிகவும் தீவிரமானதாக இருந்தது. ரோமர்களின் பழங்கால வழக்கங்களுக்குத் திரும்பினால் மட்டுமே தங்களுக்கு பாதுகாப்பு இருக்கும் என்று நம்பிய டேசியஸ் (Decius 249-251) கிறிஸ்தவத்தை அடியோடு அழித்தொழிக்கக் கிளம்பினான். வெலேரியனின் (Valerian 254-260) காலத்தில் அரசியல் நிலமை மேலும் மோசமானது. மறுபடியும் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்த வேண்டும் என்று பலர் தூண்டியதால் வெலேரியன் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தத் தொடங்கினான். அது மிகவும் கொடூரமானதாக இருந்தது. இதனால் பல முக்கித்துவம் வாய்ந்த கிறிஸ்தவ தலைவர்கள் கொடுமையான துன்பங்களை ரோம அரசின் கீழ் அனுபவித்தனர். அவர்களில் கார்த்தேஜை சேர்ந்த சிப்ரியனும் (Cyprian), ரோமின் இரண்டு பிசப்புக்களாக இருந்த ஸ்டீபனும் (Stephen), இரண்டாவது சிக்டஸும் (Sixtus II) அடங்குவர்.

வெலேரியனின் கொடுமையான துன்புறுத்தலை அடுத்த நாற்பது வருடங்களுக்கு தொடர்ச்சியாக எந்தவிதமான துன்புறுத்தலையும் சந்திக்காமல் திருச்சபை சமாதானத்தை அனுபவித்தது. இந்த நூற்றாண்டு முடிவதற்குள் சமுதாயத்தின் அனைத்துப் பகுதிகளிலும் கிறிஸ்தவர்கள் இருந்தனர். 284-ல் ஆட்சிக்கு வந்த டயோகிளேசன் (Diocletion) தனது சாம்ராஜ்யம் விழுந்து விடக்கூடாது என்ற காரணத்தால் பதினெட்டு வருடங்களுக்கு திருச்சபையைத் துன்புறுத்தாமல் இருந்தான். ஆனால், கிழக்கில் இருந்த அவனுடைய நண்பனான களேரியஸின் (Galerius) விடாப்பிடியான தூண்டுதல்களால் திருச்சபையை அவன் மிகவும் கொடூரமாகத் துன்புறுத்தத் தொடங்கினான். 303-ம் ஆண்டில் இத்தகைய துன்புறுத்தல் ஆரம்பித்தது. கிறிஸ்தவர்களின் ஆராதனைத்தலங்கள் அனைத்தையும், ஆத்மீக நூல்கள் அனைத்தையும்

*முற்றாக அழிக்கும்படி அவன் உத்தரவிட்டான். அரசனின் படைகள் ரோம ராஜ்யத்தின் கிழக்குப் பகுதியின் தலைநகராக இருந்த நிக்கோமீடியாவுக்குள்* (Nicomedia)*நுழைந்து அங்கிருந்த மிக அழகிய திருச்சபையின் கட்டடத்திற்குள் போனபோது அங்கே எந்தவித உருவச்சிலைகளும் இல்லாதிருந்ததைப் பார்த்து பிரமித்துப்போனார்கள். அவர்கள் அங்கிருந்த வேதப்புத்தகங்களை ஒன்று மேல் ஒன்றாக அடுக்கி வைத்து சபைக்கட்டடத்தை தீவைத்துக் கொளுத்தினர்.*

*டயோகிளேசனின் சேவகனான களேரியஸ் நிர்வகித்த பகுதிகளில் இத்தகைய கொடுமைகள் அளவுக்கு அதிகமாக நடந்தன. அவன் கிறிஸ்தவர்களை இறப்பதற்கு முன்பாக சித்திரவதை செய்தான். மேற்குப் பகுதியின் அதிபதியாக இருந்த மெக்சிமியனும்* (Maximian) *இத்தாலி, ஆபிரிக்கா போன்ற பகுதிகளில் இத்தகைய கொடுமைகளைத் தீவிரமாகச் செய்தான். ஆனால் பிரான்ஸ், பிரித்தானியா, ஸ்பெயின் ஆகிய பகுதிகளை மெக்சிமியனுக்குக்கீழ் சீசராகப் பணிபுரிந்து நிர்வகித்த கொன்ஸ்டான்டியஸ்* (Constantius) *இத்தகைய கொடுமைகளைச் செய்ய மறுத்தான். ஏனெனில், கர்த்தரின் ஆலயமாகிய சரீரத்தை சித்திரவதை செய்வது சரியல்ல என்பது அவனுடைய வாதமாக இருந்தது. மெக்சிமியனுக்கும், டயோகிளேசனுக்கும் பிறகு தானும், களேரியஸுºம் ரோமப் பேரரசர்களாக 305-ல் பதவியேற்றபிறகும் இந்தக் கொள்கையை கொன்ஸ்டான்டியஸ் கடைப்பிடித்தான்.*

*கொன்ஸ்டான்டியஸ் 306-ல் இறந்தபிறகு அவனுடைய மகன் கொன்ஸ்டன்டைன்* (Constantine) *பதவியேற்றான். அவன் பல எதிரிகளை வென்று அரசைப் பலப்படுத்திக் கொண்டான். 312-ல் அக்டோபர் 27-ம் நாள் மெக்சென்டியஸை (*Mexentius) *மில்வியன் பாலத்தருகில்* (Milvian Bridge) *வெற்றி கொள்வதற்கு முன் அவன் ஒரு ஆத்மீக அனுபவத்தை அடைந்தான். அதாவது, அவன் வானத்தில் எரியும் ஒரு சிலுவையைப் பார்த்ததாகவும், அதற்குக்கீழ் "இந்த அடையாளத்தைக் கொண்டு நீ வெற்றி அடைவாய்" என்று கிரேக்க மொழியில் எழுதப்பட்டிருந்ததைப் பார்த்ததாகவும் கதை உலவுகின்றது. வரலாற்று ஆசிரியர்கள் இன்று வரை இதைப்பற்றி ஒரு முடிவு எடுக்க முடியாமல் இருக்கிறார்கள். கொன்ஸ்டன்டைன் கண்டது கனவு என்று கூறுவோரும் உண்டு. இல்லை, அது உண்மையில் அவனடைந்த ஆத்மீக அனுபவம் தான் என்று கூறுவோரும் உண்டு. எது எப்படியிருந்தபோதும், கொன்ஸ்டன்டைன் இதை நம்பி தன்னுடைய படைவீர்களின் கொடிகள், ஆயுதங்கள், கவசங்களில் எல்லாம் சிலுவைக்குறியைப் பதித்து தனது எதிரிகளுடன் போருக்குச் சென்றான். அவன் போரில் அற்புதமாக வெற்றி பெற்று மெக்சேன்டியசைக் கொன்றான்.*

*அதற்குப்பின் கொன்ஸ்டன்டைன் தன்னைக் கிறிஸ்தவனாக அறிவித்து கிறிஸ்தவத்திற்கு தனது ராஜ்யத்தில் உயர்ந்த இடத்தை அளித்தான். கொன்ஸ்டன்டைன் தனது வாழ்க்கையில் பல தவறுகளைச் செய்திருந்தபோதும் அவனுக்கு ஒருவிதத்தில் கிறிஸ்தவ அனுபவம் ஏற்பட்டிருந்திருக்கிறது. சிலைவழிபாட்டை அவன் கண்டித்து, கர்த்தரைத்துதித்து ஆராதித்திருக்கிறான். அவனுடைய சட்டங்களும், திட்டங்களும் கிறிஸ்தவ சத்தியத்தின் அடிப்படையில் அமைந்திருந்தன. அவன் தன் வாழ்நாளில் தொடர்ந்து ஆராதனைக்குப் போய் அமைதியாக பிரசங்கங்களைக் கேட்டு வந்திருக்கிறான். சுயநல நோக்கத்திற்காகவும், அரசியல் லாபத்திற்காகவும் அவன் இப்படி நடித்திருக்க வேண்டிய அவசியமில்லை என்று சில வரலாற்று ஆசிரியர்கள்*

கூறுகிறார்கள். அப்படி நடந்து அவன் எந்த லாபத்தையும் சம்பாதித்திருக்க முடியாது என்பது அவர்களுடைய வாதம். கொன்ஸ்டன்டைன் வெளிப்படையாகத் தன்னைக் கிறிஸ்தவனாக அறிவித்து கிறிஸ்தவனாக நடந்து கொள்ள முயன்றான். கொன்ஸ்டன்டைன் மெய்யாகவே ஒரு கிறிஸ்தவனா? என்ற கேள்வியை வரலாற்று அறிஞர்கள் தொடர்ந்து கேட்டுவருவார்கள்.

கொன்ஸ்டன்டைன் தன்னைக் கிறிஸ்தவனாக அறிவித்துக் கொண்டது திருச்சபைக்கு நன்மையும், அதேவேளை சில தீமைகளையும் விளைவித்தது. 312-ல் கொன்ஸ்டன்டைன் லைசீனியஸுடன் (Licinius) இணைந்து பேரரசர் பதவி வகித்தான். சில மாதங்களுக்குப் பிறகு மார்ச் 313-ல் அவர்கள் இருவரும் இணைந்து மிலானில் இருந்து ஒரு பகிரங்க அறிக்கையை வெளியிட்டனர். அந்த அறிக்கையின்படி கிறிஸ்தவம் அரசால் அங்கீகரிக்கப்பட்ட சமயமானது. அத்தோடு இதுவரை அரசால் பறித்தெடுக்கப்பட்ட திருச்சபைகள் அனைத்தும் திருப்பிக்கொடுக்கப்பட்டு, கிறிஸ்தவம் அடைந்திருந்த தொல்லைகள் துன்பங்களுக்கெல்லாம் ஈடு கட்டப்பட்டது. சில வருடங்களுக்கு முன்பு இவையெல்லாம் நடக்கும் என்று நினைத்துக்கூடப்பார்த்திருக்க முடியாது. இந்த அறிக்கை வெளியிடப்பட்ட நாள் வராற்றில் சிறப்பான ஒரு நாள். அந்த அறிக்கை மேலும், தனிமனிதனின் சுதந்திரத்தை அங்கீகரித்து மேற்கில் இருந்த அனைவருக்கும் எந்தவித நிபந்தனையுமில்லாமல் மதசுதந்திரத்தை வழங்கியது. பதினொரு வருடங்களுக்குப்பின் கொன்ஸ்டன்டைன் லைசீனியஸை ஏட்டிரியநோபிள் (Adrianople) போரில் தோற்கடித்து கிழக்கு, மேற்கு ஆகிய இருபகுதிகளிலும் ரோம சாம்ராஜ்ய அதிபதியாக பதவிப்பிரமாணம் செய்து கொண்டான். அதுமுதல் கிறிஸ்தவம் ரோமப்பேரரசு முழுவதிலும் முழுமையான சுதந்திரத்தை அனுபவித்தது.

தன்னுடைய அதிகாரங்களும், மதிப்பும் அதிகரிக்க அதிகரிக்க கொன்ஸ்டன்டைன் பெருமைகொள்ளத்தொடங்கினான். தன்னை அதிகமாக அலங்கரித்துக்கொள்வதிலும், விலைமதிப்பில்லாத அணிகளை அணிந்து பவனி வருவதையும் அவன் விரும்பினான். ஒருமுறை எருசெலேம் பிசப்புக்கு அத்தகைய அழகிய கண்ணைப்பறிக்கும் வஸ்திரத்தை அவன் பரிசாக அழித்தான். இந்தவகையில்தான் திருச்சபையில் பிசப்புக்கள் சிறப்பு அங்கி அணியும் வழக்கம் உருவாகியிருக்க முடியும்.

கொன்ஸ்டன்டைன் திருச்சபை பிசப்புக்களோடு நல்ல தொடர்பை வைத்திருந்து சமய சச்சரவுகளை தீர்த்து வைப்பதில் அக்கறை காட்டினான். இவ்வாறு அரசன் சபைக்காரியங்களில் தலையிட்டு முடிவு காண்பது பின்பு அரசு, சபையை ஆளும் நிலைக்குத் தள்ளியதை வரலாற்றில் வாசிக்கிறோம். அரசன் சபைக்குத்தந்த ஆதரவால் இக்காலத்தில் நல்ல பல பலன்களும் இருந்தன. பெண்கள் சமுதாயத்தில் மதிக்கப்பட்டனர். அடிமை வியாபாரம் நிறுத்தப்பட்டது. ஓய்வுநாளுக்கு நாட்டில் மதிப்புக்கொடுத்து மக்கள் நடந்து கொண்டனர். ஆராதனை ஒழுங்காக நடந்து வந்தது. அதேவேளை, அரசின் ஆதரவு சபைக்கு இருந்தபடியால் சபை மூப்பர்கள் அகங்காரத்துடன் நடந்து கொள்ளவும் பிற்காலத்தில் வழி வகுத்தது.

கொன்ஸ்டன்டைன் இத்தனை நல்ல காரியங்களைச் செய்தும் கிறிஸ்தவம் முழுமையாக ரோம சாம்ராஜ்யம் முழுவதும் பரவியதாகக் கூறிவிட முடியாது. செல்வந்தர்களாக இருந்தவர்கள் அரசனின் வழிகளைப்பின்பற்றவில்லை. அத்தோடு அரசன் ஏனைய மதங்களுக்கும் தனது ஆட்சியில் இடமளித்-

*திருந்தான். கொன்ஸ்டன்டைன் தனக்கென்று ஒரு சிறப்பான தலைநகரத்தை நிறுவி அதைக் கொன்ஸ்டான்டிநோபிள் என்று பெயரிட்டழைத்தான். 303-ல் அது கட்டி முடிக்கப்பட்டது. அந்நகரில் களியாட்டங்களுக்கும், விளையாட்டு-களுக்கும் இடமிருக்கவில்லை. கிறிஸ்தவப்போதனைகளை அனைவரும் மதித்து நடக்க அரச கட்டளை இருந்தது.*

*கொன்ஸ்டன்டைனுக்குப்பின் வந்தவர்கள் அவனைப்போல நடந்து கொள்ளவில்லை. அவனுடைய குணாதிசயங்களோ, திறமையோ அவர்களுக்கு இருக்கவில்லை. அவனுடைய பிள்ளைகள் அரசியலில் பல பிரச்சினைகளை சந்திக்க நேர்ந்தது. அத்தோடு அவர்கள் போலிப்போதனையான ஏரியனிசத்தை ஆதரித்தார்கள். கொன்ஸ்டன்டைனின் பிள்ளைகளால் துன்புறுத்தலுக்குள்-ளான அவனுடைய பேரன் ஜுலியன்* (Julian the Apostate 361-363) *கிறிஸ்தவத்தை நிராகரித்து மறுபடியும் போலிமதங்களைப் புதுப்பிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டான். பல தெய்வ வழிபாடு மறுபடியும் சாம்ராஜ்யத்-தில் சிறகடித்துப் பறக்கத் தொடங்கியது.*

*நான்காம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் டயோகிளேசியனின் கீழ் பெருந்-துன்பத்தையும், கொடுமைகளையும் கிறிஸ்தவ திருச்சபை அனுபவித்தது. ஆனால், நான்காம் நூற்றாண்டு முடிவதற்குள் போலிமதங்கள் ரோம ராஜ்யம் முழுவதையும் விட்டு அகன்றிருந்தன. இக்காலத்தில் ரோமில் இருந்த எல்லா சிலைவழிபாட்டு முறைககளும், புறமதக் கோவில்களும் அழிக்கப்பட்டிருந்தன என்று ஜெரோம் எழுதுகிறார். இருந்தபோதும், கிறிஸ்தவ திருச்சபை ஒருபுதுவித ஆபத்தை எதிர்நோக்கியது. குருமார்களையும், குருமடங்களையும், ஆசாரிய முறைகளையும் கிறிஸ்தவ திருச்சபை பின்பற்றும் ஆபத்து ஏற்பட்டது. சித்திரவதைகளையும், கொடுமைகளையும், துன்பங்களையும் அனுபவித்துவந்த கிறிஸ்தவம் அவற்றிலிருந்து விடுபட்டு அமைதியையும், சமாதானத்தையும், அரச ஆதரவையும் பெற்றுக்கொண்டிருந்தபோதும் அந்த சுதந்திரமே பல தீங்குகளையும் விளைவிக்கும் என்பதை திருச்சபை உணர்ந்திருக்கவில்லை.*

---

**அட்டைப்பட விளக்கம்:**



அட்டைப்படத்தில் பிரசங்க மேடையைப் பார்க்கிறீர்கள். பிரசங்கத்தின் முக்கியத்துவத்தைக் குறித்து இந்த இதழில் எழுதியிருக்கிறோம். இன்று பிரசங்கத்திற்கு எங்கும் மதிப்பில்லை, பிரசங்க மேடையைக்கூட பல சபைகளில் காணமுடியாதிருக்கின்றது. பல இடங்களில் பிரசங்கிகள் கைகளில் மைக்கைபிடித்துக்கொண்டு நீளமாக அமைந்த மேடைகளில் ஒரு பக்கம் இருந்து மறுபக்கம்வரையும் நடந்தும், குதித்தும் பேசுவதும், பாடுவதும் வழக்கத்தில் இருக்கிறது. அவர்களுக்கு முன் பிரசங்கக்குறிப்புகளும், வேதமும்கூட இருப்ப-தில்லை. பிரசங்கி தன்னுடைய பிரசங்கத்தைத் தயாரித்து கவனத்தோடும், வல்லமை-யோடும் பிரசங்கிக்க பிரசங்க மேடையும் பேருதவி செய்கிறது. ஜோர்ஜ் விட்பீல்ட் (படத்தில் இருப்பவர்) தெருப்பிரசங்கம் செய்த காலங்களில் தன்னோடு ஒரு பிரசங்க மேடையை எப்போதும் சுமந்து செல்வதையும் வழக்கமாகக் கொண்டிருந்தார். பிரசங்கிகளே! பிரசங்கத்தையும், பிரசங்க மேடையையும் அலட்சியம் செய்யாதீர்கள்.

# பாவ உணர்வு சொட்டும் கண்ணீர்த்துளிகள்

*கடந்த இதழில் கீழ்வரும் அட்டவணையில் உள்ள உண்மைகளை டாக்டர் பீட்டர் மாஸ்டர்ஸ் விளக்கியதைப் பார்த்தோம். இந்த இதழில் அவரது ஆக்கத்தின் இறுதிப்பகுதியைப் பார்ப்போம்.*

*(1)* **ஆண்டவரைத் தேடுகிறவனுக்கு பாவத்தைப்பற்றிய செயற்கையான எண்ணமே இருக்கிறது.**

**(அ) அவனுக்கு மனந்திரும்புதலைப்பற்றிய பொதுவான அறிவு மட்டுமே இருக்கிறது.**

**(ஆ) தேடுகிறவன் வெளிப்புறமான பாவத்தை மட்டுமே பார்க்கிறான்.**

**(இ) அவன் ஒரிரு பாவங்களையும், தவறுகளையுமே அறிக்கையிடு-கிறான்.**

**(ஈ) தான் செய்துள்ள நற்கிரியைகளைப்பற்றி பெருமையுடையவனாக இருக்கிறான்.**

**(உ) பாவத்தை அவன் வெறும் நோயாக எண்ணிக் கொண்டிருக்கலாம்.**

**(ஊ) பாவத்தை மறைக்க அவன் சாக்குப்போக்கு சொல்லலாம்.**

**(எ) கிறிஸ்துவை நிராகரிப்பதை மட்டுமே பாவமாக எண்ணிக்-கொண்டிருக்கலாம்.**

**(ஏ) யாருக்கும் தெரியாமலிருக்கும் பாவங்களிலிருந்து மனந்திரும்ப வேண்டியதில்லை என்ற தவறான எண்ணத்தைக் கொண்டிருக்கிறான்.**

## பொதுவான பிரச்சினை 2

## ஆண்டவரைத் தேடுகிறவன் தன் நிலைக்காக வெட்கப்படுகிறதில்லை

### (அ) மன்னிப்பைவிட ஏதாவதொரு நன்மையை மட்டுமே நாடுகிறவனாக இருக்கிறான்.

*கர்த்தரைத் தேடுகிறவனுடைய மனந்திரும்புதல் மெய்யானதாக இருக்க வேண்டுமானால் அவன் கர்த்தர் தரும் நன்மைகளையும், ஆசீர்வாதங்களையும் மட்டும் நாடிப்போகக்கூடாது. நாம் பிரசங்கத்தில் இரட்சிப்பின் பலாபலன்-களைப்பற்றி விவரிக்கத்தான் செய்கிறோம். ஆனால், பிரசங்கத்தில் மனந்திரும்பு-தலை வலியுறுத்தாமல் நாம் இரட்சிப்பின் பலன்களை மட்டும் ஆத்துமாக்-களுக்கு பட்டியலிட்டுக் கொடுத்தால், மனந்திரும்புதலின் வெறும் ஆரம்பப்படி-நிலை இருந்தால்கூடப் போதும், அதைக் கர்த்தர் ஏற்றுக்கொள்கிறார் என்ற*

(இந்த ஆக்கத்தின் ஆங்கில மூலத்தை எழுதிய டாக்டர் பீட்டர் மாஸ்டர்ஸ், இங்கிலாந்தில் Metropolitan Tabernacle எனும் சபையின் போதகராக இருந்து வருகிறார். இது அந்த சபை வெளியிடும் Sword and Trowel என்ற பத்திரிகையில் வெளிவந்தது. ஆசிரியரின் அனுமதி-யுடன் இதைத் தமிழில் தந்திருக்கிறோம். (இதன் முதல் பாகத்தைக் கடந்த இதழில் பார்க்கவும்.)

(2) ஆண்டவரைத் தேடுகிறவன் தன் நிலைக்காக வெட்கப்படுவதில்லை
(அ) மன்னிப்பைவிட ஏதாவதொரு நன்மையை மட்டுமே நாடுகிறவனாக இருக்கிறான்
(ஆ) நித்திய தண்டனையைக்குறித்து அவன் பயந்தாலும் அதற்காக வெட்கப்படுவதில்லை
(இ) வெட்கத்தைவிட வெறும் மன உறுத்தலை மட்டுமே கொண்டிருக்கிறான்

தவறான எண்ணத்தை நாம் ஏற்படுத்திவிடுவோம்..

இப்படி சில நன்மைகளுக்காக மட்டும் மனந்திரும்பிய ஒருவனுக்கு உதாரணமாக இஸ்ரவேலின் இராஜாவாகிய சவுலை எடுத்துக்காட்டலாம். சவுல் கர்த்தருக்கு எதிராக நடந்தான் என்று சாமுவேல் அவனை நோக்கி குற்றம் சாட்டியபோது சவுல், “நீர் என் பாவத்தை மன்னித்து நான் கர்த்தரைப் பணிந்து கொள்ளும்படிக்கு என்னோடு திரும்பிவாரும் என்றான். அவன் தொடர்ந்து “நான் பாவஞ் செய்தேன்; இப்போது என் ஜனத்தின் மூப்பருக்கு முன்பாகவும், இஸ்ரவேலுக்கு முன்பாகவும் நீர் என்னைக் கனம்பண்ணி நான் உம்முடைய தேவனாகிய கர்த்தரைப் பணிந்து கொள்ளும்படிக்கு என்னோடு கூட திரும்பிவாரும்” என்றான் (1 சாமுவேல் 15:25-30).

இந்த வார்த்தைகள், சவுல் பொதுமக்கள் முன்னிலையில் அவமானப்படுவதையும், தன்னுடைய இராஜ்யத்தை இழந்துபோவதையும் விரும்பவில்லை என்பதை வெளிப்படுத்துகின்றன. அவனுடைய மனந்திரும்புதல் மெய்யானதல்ல.

தேடுகிறவன் இரட்சிப்பின் பலன்களை மட்டுமே நாடுகிறானா? விசுவாசிகளான தன்னுடைய நண்பர்களுடனும், குடும்பத்தாருடனும் நட்போடு இருப்பதற்காக மனந்திரும்புகிறானா? விசுவாசியான ஒரு பெண்ணோடு நல்லுறவேற்படுத்திக்கொள்வதற்காக மனந்திரும்பப்பார்க்கிறானா? அல்லது தன்னுடைய வியாதியிலோ, விரக்தியிலோ இருந்து விடுபடவோ அல்லது வேறு எந்தக்காரணத்துக்காகவும் இதைச் செய்யப்பார்க்கிறானா? மனந்திரும்ப அவன் முயற்சி செய்வதற்கான உண்மையான காரணம் என்ன? கர்த்தரைத் தேடுகிறவன் இரட்சிப்பின் பலன்களை நாடுவது நியாயமானதாக இருந்தாலும், அவனுக்குப் பாவத்தைப் பற்றிய உணர்வு பிரதானமாக இருக்க வேண்டும். இரட்சிப்பின் பலன்களுக்காகவும், வாழ்க்கை வசதிகளுக்காகவும், சுகத்துக்காகவும், சந்தோஷத்துக்காகவும், பரலோக அனுபவத்துக்காகவும் மட்டும் ஒருவன் மனம் மாறப்பார்க்கக்கூடாது.

## (ஆ) தேடுகிறவன் நித்திய தண்டனையைக் குறித்துப் பயந்தாலும் அதற்காக வெட்கப்படுவதில்லை

மார்டின் லூதர் தன் பிள்ளைப்பருவம் முழுவதும் நித்திய தண்டனையைக் குறித்துப் பயந்தது போல மதநம்பிக்கையுள்ள குடும்பத்தில் வளர்ந்த ஒருவனுக்கு அத்தகைய பயம் இருப்பது இயற்கை. லூதர் சிறுவனாக இருந்தபோது பயங்கரமான இடிச்சத்தத்தைக்கேட்டுப் பயந்து கர்த்தர் தன்னைக் காப்பாற்றினால், தான் மதகுருவாக மாறிவிடுவதாக வாக்குறுதி கொடுத்தார். கர்த்தரைத் தேடுகிற ஒரு மனிதன் நித்திய தண்டனையைக்குறித்து பயப்பட்டபோதும் தன்னுடைய பாவத்துக்காக வெட்கப்படாதவனாக இருக்கலாம். அது

உண்மையாக இருக்குமானால் அவனுடைய மனந்திரும்புதல் வெறும் பயத்தால் எடுக்கப்பட்ட ஒரு தீர்மானம் மட்டுமே. ஆபத்திலிருந்து தப்புவதற்காக ஒருவனில் ஏற்படும் உணர்வைவிட மிக ஆழமானது மனந்திரும்புதல். மனந்திரும்புகிறவன் வருத்தத்தோடு தன்னைக் குற்றவாளியாகக் காண்பான். அவனுடைய மனந்திரும்புதல் தேவ கிருபையில் தங்கியிருக்கும்.

சங்கீதம் 130:1-4 வரையிலான வசனங்கள் மெய்யான மனந்திரும்புதலைப் படம்பிடித்துக் காட்டுகின்றன: "கர்த்தாவே ஆழங்களிலிருந்து உம்மை நோக்கிக் கூப்பிடுகிறேன். . . நீர் அக்கிரமங்களைக் கவனிப்பீரானால் யார் நிலைத்திருப்பான், ஆண்டவரே. உமக்குப் பயப்படும்படிக்கு உம்மிடத்தில் மன்னிப்பு உண்டு." (சங்கீதம் 130:1-4).

## (இ) தேடுகிறவன் வெட்கத்தைவிட வெறும் மன உறுத்தலை மட்டுமே கொண்டிருக்கிறான்

மன உறுத்தலும், மனவருத்தமும் போலித்தனமான மனந்திரும்புதலை உருவாக்கக்கூடியவை. நான் இளம் போதகனாக இருந்தபோது சிறைச்சாலைகளுக்குப்போய் மனிதர்களைச் சந்தித்திருக்கிறேன். சிறையிலிருந்த காலங்களில் அவர்களில் சிலர் மனமாற்றத்துக்குரிய அடையாளங்களைக் கொண்டிருந்தார்கள். ஆனால், சிறையில் இருந்து வெளிவந்ததும் தங்களுடைய செய்கைகளைப் பார்த்து சிரித்து நிந்தித்தார்கள். சவுலை மீண்டும் பாருங்கள். கடுங்கோபக்காரனான சவுல் சில வேளைகளில் இளகிய மனத்தோடு தான் செய்த அக்கிரமங்களுக்காக வருந்தியிருக்கிறான். ஒரு நிமிடம் தாவீதின் உயிரை வாங்கத் துடித்த சவுல் மறுநிமிடம் தன்னுடைய செய்கைக்காகவும் வருந்தி அழுதான். ஆனால், அவன் உணர்ச்சிவசப்பட்டதால் அழுதானே தவிர குற்ற உணர்வினால் மெய்யாக மனந்திரும்பி அழவில்லை.

ஒரு மனிதன் பெரும்பாவத்தைச் செய்து, முட்டாள்தனத்தோடு நடந்து, தன்னுடைய நற்பெயரையும் வாழ்க்கையில் பல நல்ல சந்தர்ப்பங்களையும் இழந்து, தன்குடும்பத்தையும் துன்பத்துக்குள்ளாக்கி அதற்காக மிகவும் ஆழமாக மனவருத்தப்பட்டான் என்று வைத்துக் கொள்வோம். ஆனால், அத்தகைய மனவருத்தம் மெய்யான ஆத்மீக மனந்திரும்புதலாக இல்லாமல் உலகப்பிரகாரமானதாக இருந்துவிடலாம். மெய்யான மனந்திரும்புதலுக்கு அடையாளமாக ஒருவன் அடையும் வெட்கம், அவனுடைய சுயஇரக்கத்தையும், அடிக்கடி மாறும் இயல்புடைய அவனது வருத்தங்களையெல்லாம்விட மேலானது.

ஒருவன் தன்னுடைய சுயநலத்தால் ஏற்பட்ட வருத்தத்தின் காரணமாக மட்டுமே மனந்திரும்புகிறான் என்று நாம் சந்தேகப்பட்டால் அத்தகைய மனந்திரும்புதல் மெய்யான மனமாற்றத்திற்கு தடையானது என்பதை நாம் அவனிடம் சொல்லிவிட வேண்டும். அதற்காக அந்த மனிதனை நாம் குறைகூறாமல், இதைப்பற்றி சிந்தித்துப் பார்க்கும்படி சொல்ல வேண்டும். அவனுடைய விஷயத்தில் அது உண்மையாக இருக்குமானால், அவன் தன்னுடைய பிரச்சினைகளைவிட குற்றவுணர்வைப் பற்றியே இனி அதிகம் சிந்திக்க ஆரம்பிப்பான். ஏனெனில், அப்போதுதான் அவன் மெய்யான மனந்திரும்புதலை அடைய முடியும். கர்த்தரைத் தேடுகிறவன் தன்னுள்ளத்தைத் தீர ஆராய்ந்து பார்க்கிறானா? என்பது முக்கியம். மெய்யான மனந்திரும்புதலை அடைகிறவர்கள் தங்களுடைய இருதயத்திலே குத்தப்பட்டவர்களாக இருக்கிறார்கள் (அப்போஸ்தலர் 2:37).

## பொதுவான பிரச்சினை 3

(3) மனந்திரும்புதல் கர்த்தரை அடிப்படையாகக் கொண்டிருக்கவில்லை
(அ) தேடுகிறவன் கர்த்தரிடம் வருத்தப்பட்டு வரவில்லை
(ஆ) தேடுகிறவன் கிறிஸ்துவின் துன்பங்களினால் அதிகம் பாதிப்படையவில்லை

### மனந்திரும்புதல் கர்த்தரை அடிப்படையாகக் கொண்டிருக்கவில்லை

### (அ) தேடுகிறவன் கர்த்தரிடம் வருத்தப்பட்டு வரவில்லை

கர்த்தரை நோக்கிய துக்கத்தை மெய்யான மனந்திரும்புதல் கொண்டிருப்பதால், ஒரு மனிதனின் சுயநலத்தை அடிப்படையாகக் கொண்ட வெறும் உணர்ச்சிமயான துக்கத்தை மெய்யான மனந்திரும்புதலில் இருந்து வேறுபடுத்திக் காட்ட முடியும். தேவரீர் ஒருவருக்கே விரோதமாக நான் பாவஞ் செய்தேன் என்ற தாவீதின் ஜெபம் இந்த வேறுபாட்டைக் காட்டுகிறது. கர்த்தர் தங்களைப் படைத்துக் கொடுத்திருக்கிற ஜீவனையும், தகுதிகளையும், தாலந்து- களையும் சுயநலத்திற்காகவே பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம் என்பதை மெய்யாக மனந்திரும்புகிறவர்கள் உணர்வார்கள். கர்த்தருக்கு எதிராகப்போய் எல்லாப் பாவங்களையும் செய்திருக்கிறோம் என்பதை அவர்கள் உணர்வார்கள். கர்த்தர் தங்களுக்கு எதிரான நீதியான குற்றச்சாட்டுக்களைக் கொண்டிருக்கிறார் என்றும், தங்களுடைய பாவத்தால் கர்த்தர் அவமதிக்கப்பட்டிருப்பதால், அவர் தங்களை நித்தியத்துக்கும் தண்டிக்க வேண்டும் என்பதையும் அவர்கள் உணர்வார்கள். வெறும் ஆத்மீகப் பாதுகாப்பை அடைய ஆசைப்படுவது மெய்யான மனந்திரும்புதலுக்கு அடையாளமாகாது. கர்த்தருக்கு எதிராகப் பாவஞ்செய்து, அவரைக் காயப்படுத்திவிட்டோம் என்பதை உணர்ந்து துக்கப்படுவதே மெய்யான மனந்திரும்புதல்.

### (ஆ) தேடுகிறவன் கிறிஸ்துவின் துன்பங்களினால் அதிகம் பாதிப்படையவில்லை

நம்முடைய இரட்சகரின் துன்பங்களுக்கு நாமும் காரணஸ்தர்களாக இருந்துவிட்டோமே என்ற துக்கத்தைக்கொண்டிருப்பதுதான் மெய்யான மனந்திரும்புதல். ஆகவே, ஆண்டவர் நமது பாவங்களுக்காகச் செலுத்திய கிரயத்திற்கு நாமும் ஓரளவிற்கு பொறுப்பாளிகளாக இருக்கிறோம் என்ற உணர்வு மெய்யாக மனந்திரும்புகிறவர்களில் இருக்க வேண்டும். மனந்திரும்புகிற பாவி, என்னுடைய பாவம் கல்வாரியின் சிலுவையில் இருந்தது என்பான்.

*நான் செய்த பாவங்களுக்காகவா அவர் மரத்தில் பெருமூச்சுவிட்டார்?*
*ஆச்சரியமான கருணை! இதுவரைக்காணாத கிருபை!*
*அளவிடமுடியாத அன்பு!*

கர்த்தரைத் தேடுகிறவனுடைய மனந்திரும்புதல் சுயநலநோக்கத்தைக் கொண்டிருந்து, இரட்சிப்பிற்காக கிறிஸ்து செலுத்திய கிரயத்தில் அவன் அக்கறை காட்டாமல் இருந்ந்துவிடலாம். இலவசமாகவும், வெகு இலகுவாகவும் நமக்குக் கிடைத்திருக்கும் இரட்சிப்பை நமது ஆண்டவர் விலை கொடுத்து வாங்க வேண்டியிருந்தது. இறக்கும்போது அவர்பட்ட துன்பங்களை மனிதர்களுடைய வார்த்தைகளினால் வர்ணித்துவிட முடியாது. நித்திய

தண்டனையை இரட்சகர் சிலுவையில் அனுபவிக்கக் காரணமாக இருந்துவிட்டேன் என்பதை உணர்ந்து மெய்யாக மனந்திரும்புகிறவன் எப்போதும் வருந்துகிறவனாக இருப்பான். கல்வாரியைப்பார்த்து ஒருவனுடைய உணர்ச்சிகள் அலைமோதுவதிலிருந்து பிறப்பதுதான் மெய்யான மனந்திரும்புதல்.

மந்திரியாகிய எத்தியோப்பியனைப் பார்த்து பிலிப்பு பின்வருமாறு விளக்கினான்: "அவர் ஓர் ஆட்டைப் போல அடிக்கப்படுவதற்குக் கொண்டுபோகப்பட்டார்; மயிர்கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டுக்குட்டியைப்போல அவர் தமது வாயைத்திறவாதிருந்தார்." இந்த வார்த்தைகளைக் கேட்டே எத்தியோப்பியன் மனந்திரும்பினான்.

தேடுகிறவன், தன்னுடைய பாவம் இரட்சகரை எப்படிப்பாதித்தது என்பதைக் குறித்து சிந்தித்து, அதற்காக அவன் அவருக்கு, எப்போதும் கடமைப்பாடுடையவனாக இருக்கிறான் என்பதை உணர வேண்டும் என்று நாம் தேடுகிறவனுக்கு தெளிவாக விளக்க வேண்டியது அவசியம்.

## பொதுவான பிரச்சினை 4

(4) அடங்காக்குணம் இன்னும் அவனில் ஆள்கின்றது
- (அ) தேடுகிறவன் சில பாவங்களைத் தொடர்ந்து செய்ய விரும்புகிறான்
- (ஆ) புதிய வாழ்க்கையில் பெருமளவுக்கு ஆர்வம் இல்லாமலிருக்கிறது
- (இ) கிறிஸ்துவின் பூரண ஆளுகையை இன்னும் ஏற்றுக்கொள்ளவில்லை

## அடங்காக்குணம் இன்னும் அவனில் ஆள்கின்றது

### (அ) தேடுகிறவன் சில பாவங்களைத் தொடர்ந்து செய்ய விரும்புகிறான்.

கர்த்தரைத் தேடுகிறவன் தொடர்ந்தும் சில பாவங்களையும், சுயநல நோக்கங்களையும் விட்டுவிட மனமில்லாமல் இருப்பதால் கர்த்தரின் கிருபை கிடைக்காமல் விரக்தி அடையலாம். கர்த்தரைத் தேடுகிறவர்கள் தங்களுடைய மனந்திரும்புதலில் இருக்க வேண்டிய முக்கியமான சில அம்சங்களை விட்டுவிடுவதால் அவர்களால் மெய்யாக மனந்திரும்புதலை அடைய முடியாமல் போய்விடுகிறது. பாவத்திலிருந்துவிடுபட வேண்டும் என்றும், பாவமன்னிப்பைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்றும் மெய்யாகவே ஒருவனுக்கு ஆர்வமிருக்கலாம். ஆனால், அவன் தன்னுடைய பழைய வாழ்க்கையின் சில அம்சங்களை விட்டுவிட மனமில்லாமல் இருப்பதால் அவனுடைய முயற்சிகளுக்குத் தடை ஏற்படுகின்றது. தேடுகிறவன், ஓரிரு பாவங்ளைத் தனது அங்கிக்குள் மறைத்து வைத்துக்கொண்டு தொடர்ந்தும் தேவனுடைய இராஜ்யத்தைத் தேடி அலைந்து கொண்டிருக்கலாம்.

இருமனதுள்ள ஒருவனுடைய இருதயத்தைப்போல வேறெதுவும் மனந்திரும்புதலுக்கான ஜெபத்தைப் பாதிப்பதில்லை. அத்தகைய மனிதன் தான் கர்த்தரிடம் எதையும் பெறலாமென்று நினையாதிருப்பானாக, என்கிறார் யாக்கோபு. அவர் தொடர்ந்து "இருமனமுள்ளவன் தான் உயர்த்தப்பட்டதைக்குறித்து மேன்மை பாராட்டக்கடவன்" என்கிறார் (யாக்கோபு 1:7, 8). கர்த்தருக்கு

*முன் உண்மையோடும், திறந்த உள்ளத்தோடும் வருவது அவசியம். தேடுகிறவன் தன்னுடைய உள்ளத்தை தீவிரமாய் ஆராய்ந்து தன்னுடைய அனைத்து சுயநல நோக்கங்களையும், பாவங்களையும் அடியோடு வெறுத்தொதுக்கி, கர்த்தரின் கண்களுக்கு முன், சகலதும் நிர்வாணமாயும், வெளியரங்கமுமாயிருக்கிறது, அவருக்கே நாம் கணக்கு ஒப்புவிக்க வேண்டும் என்பதை உணர வேண்டும் (எபிரேயர் 4:13).*

## (ஆ) புதிய வாழ்க்கையில் பெருமளவுக்கு ஆர்வம் இல்லாமலிருக்கிறது

*தேடுகிறவனுக்கு புதிய வாழ்க்கையில் உண்மையாகவே அக்கறை இருக்கிறதா, அல்லது அவன் இரகசியமாக தன்னுடைய இருதயத்தில் அத்தகைய மாற்றத்தைக்குறித்த மாறுபாடான எண்ணத்தைக்கொண்டிருக்கிறானா? என்று கேட்பது அவசியம். அவன் உண்மையிலேயே ஆத்மீக வாழ்க்கையையும், புதிய இருதயத்தையும் நாடுகிறானா? ஒருவன் மெய்யாக மனந்திரும்புகிறபோது, தான், குருடன், பாவி, குழப்பமான இருதயம் தனக்கிருக்கிறது, கர்த்தருக்கு தன்னைப்பற்றி எல்லாம் தெரிந்திருக்கிறது என்பதையெல்லாம் உணர்ந்தவனாய் கர்த்தர் தன்னைத் தொடுகின்ற அனுபவத்தை நாடி நிற்பான். அப்படி அவர் அவனைத் தொடுகின்றபோதே அவனுடைய வாழ்க்கையில் பழையன எல்லாம் மறைந்து அனைத்தும் புதிதாகின்றன.*

## (இ) கிறிஸ்துவின் பூரண ஆளுகையை இன்னும் ஏற்றுக்கொள்ளவில்லை

*இதுவரை நான் சொன்னவைகளோடு தொடர்புள்ள இன்னுமொரு உண்மை என்னவென்றால், தேடுகிறவன் தன்னைக் கிறிஸ்துவின் ஆளுகைக்கு உட்படுத்திக்கொள்ள முழுமனமில்லாமல் இருக்கலாம். மெய்யான மனந்திரும்புதல் ஒருவனில் கர்த்தருக்கெதிரான எல்லா எதிர்ப்புணர்ச்சிகளையும் மாய்த்து அவருக்கு கீழ்ப்படிகிறவனாக அவனை மாற்றுகிறது. ஏதேன் தோட்டத்தில் நடந்த நிகழ்ச்சிக்கு எதிர்ப்புறமான நிகழ்ச்சியாக அது இருக்கும். ஆகவே, ஆண்டவருடைய அதிகாரத்துக்கு, தேடுகிறவன் கட்டுப்பட மறுப்பானானால் அவனில் மெய்யான மனந்திரும்புதல் இல்லை என்றுதான் கூற வேண்டும்.*

*பாவத்தின் பிரதான அம்சம் கர்த்தருடைய அதிகாரத்தை மீறுவதாகும். ஆகவே, மனந்திரும்புதலின் பிரதான அம்சமாக அத்தகைய அதிகாரமீறுதலுக்கு முடிவுகட்டப்பட்டிருக்கும். நமது இரட்சகர் சொன்னார், "நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்" என்று. "அத்தோடு ஒருவன் என் பின்னே வர விரும்பினால் அவன் தன்னைத்தானே வெறுத்து, தன் சிலுவையை அனுதினமும் எடுத்துக்கொண்டு, என்னைப் பின்பற்றக்கடவன்" என்றும் கூறினார் (யோவான் 14:15; லூக்கா 9:23).*

*கிறிஸ்துவை விசுவாசிக்கும்படி தேடுகிறவனை வற்புறுத்துவதைவிட்டுவிட்டு, இந்த முறையில் மனந்திரும்புதலைக்குறித்து ஆராய்வது சரியா? என்று சிலர் கேட்கலாம். ஆனால், மெய்யான மனந்திரும்புதல் இல்லாமல் இரட்சிக்கும் விசுவாசத்திற்கு ஒருவனுடைய வாழ்க்கையில் நிச்சயம் இடமிருக்காது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். தன்னுடைய பாவங்கள் அடியோடு கழுவப்பட வேண்டும் என்று உண்மையோடு ஏங்காதவன் கல்வாரியைத் தழுவிக்கொள்ள முயல்வதில் எந்தப்பயனுமில்லை.*

# மலேசிய மண்ணில் . . .

மலேசியா தென்கிழக்காசியாவின் முக்கிய நாடுகளில் ஒன்று. உலகத்திலேயே மிக உயரமான பெட்ரோனாஸ் (Petronas) கட்டிடங்களுக்கும், மிக அழகிய டெலிகொம் டவருக்கும் (Telecom Tower) மலேசியா பெயர்போனது. இருள் மடிந்த இரவு நேரத்தில் மலேசியாவின் கோலாலம்பூர் நகர் முழுவதும் பளிச்சென்று ஒளிவீசுவது அந்நாட்டுக்குப்போய் வருபவர்களுக்கு எப்போதும் கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். அதுவும் பெட்ரோனாஸ் கட்டடங்கள் இரவு நேரங்களில் பல வர்ணங்களில் மாறிமாறித் தோற்றமளித்து அந்நாட்டின் எழுச்சியையும், வளர்ச்சியையும் பறைசாற்றுவதைப் பார்த்துக்கொண்டே இருக்கலாம்போல் தோன்றும். சில வருடங்களுக்கு முன்பு தென்கிழக்காசிய நாடுகளைத் தாக்கிய பொருளாதார வீழ்ச்சியில் இருந்து ஓரளவுக்கு விடுபட்டு மறுபடியும் தலைதூக்கி நிற்கும் மலேசியாவில் எங்கு பார்த்தாலும் புதுப்புது கட்டிடங்களும், தொழிலகங்களும், அப்பாட்மென்டுகளும் உருவாகி வருவதைப் கவனிக்காமல் இருக்க முடியாது. வளர்ந்து வரும் நாடான மலேசியா கணினித் தொழில்நுட்பத்துறையில் அதிக அக்கறைகாட்டி வருவதோடு, செம்பனை எண்ணெய் ஏற்றுமதியில் முன்னிற்கிறது. அந்நாட்டின் பிரதமாரான மகாதீர் நல்லதொரு நிர்வாகத்தை நாட்டுக்கு அளித்து அதன் வளர்ச்சிக்குக் காரணமாக இருந்து வருகிறார். பிரதமர் மகாதீர் கூடிய விரைவில் ஓய்வு பெறப்போவதாக அறிவித்துள்ளார்.

மலேசியா நாட்டில் 60% மலாய் இனத்தவர்களும், 32% சீனர்களும், 8% இந்தியர்களும் வாழ்கின்றனர். இந்நாட்டில் எல்லா இனத்தவர்களும் மலாய் மொழியைப் பாடசாலைகளில் கற்றுக்கொள்கின்றனர். இதனால் மலேசியத் தமிழ் மக்களால் அந்த மொழியை நன்றாகப் பேசவும், எழுதவும் முடிகின்றது. தமிழ் மக்கள் மத்தியில் வசதியும் செல்வாக்கும் உள்ள குறைந்த தொகையினர் ஆங்கிலப் புலமை உள்ளவர்களாக இருக்கின்றனர். ஆனால், பொதுவாகவே தமிழர் தமிழை வீட்டில் பேசினாலும் இன்றைய இளம் சமுதாயத்தால் தமிழில் சரளமாக வாசிக்கவும், எழுதவும் முடியவில்லை. தமிழைக் கற்றுக்கொள்ளும் வசதி இங்கு எல்லோருக்கும் கிடைப்பதில்லை. பேசுவதற்கும், தொழில் செய்வதற்கும் மலாய்மொழி இருப்பதால் தமிழைப்படிப்பதில் அக்கறை கொள்ளுபவர்கள் தொகை குறைந்து வருகின்றது. வருங்காலத்தில் மலேசியாவில் தமிழின் நிலை எப்படி இருக்குமோ என்ற ஏக்கமும் எழாமலில்லை!

மலேசியத்தமிழர்களில் பெரும்பாலானோர் தோட்டப்புறங்களிலேயே வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் நகர்ப்புறங்களில் வாழும் தமிழர்களைவிட வசதிகுறைந்தவர்களாக இருக்கின்றனர். பலர் தோட்டங்களில் இருந்து நகரங்களுக்குப்போய் வேலை செய்கிறார்கள். இதுதவிர நகர்ப்புறங்களைச்சுற்றி இருக்கும் கம்பம் என்று அழைக்கப்படும் கிராமங்களிலும் தமிழர்களைப் பார்க்கலாம். வசதியுள்ள படித்த தமிழர்கள் தொழிலதிபர்களாகவும், தோட்டச் சொந்தக்காரர்களாகளும், அரசியல்வாதிகளாகவும், அரசு ஊழியர்களாகவும் இருக்கின்றனர். ஆனால், இவர்கள் சிறுபான்மையினர். தமிழ்நாட்டில் இருந்து வேலைதேடி இங்குவந்து வாழ்கிற தழிழர் அநேகர். இலங்கையில் இருந்து குடிபெயர்ந்து வந்து மலேசியாவை வாழ்விடமாக மாற்றிக்கொண்ட தமிழர்களையும் இங்கு பார்க்கலாம். மலேசியாவில் உள்ள தமிழர்கள் பெரும்பாலும் இந்துக்கள். இவர்கள் மத்தியில் சுவிசேஷ ஊழியம் பல காலமாக நடந்து வருகின்றது. கோலாலம்பூர், ஈப்போ, பினாங்கு ஆகிய பகுதிகளில் தமிழர்கள் தொகை அதிகம்.

1800-ல் புரட்டஸ்தாந்து கிறிஸ்தவம் மலேசியாவில் அறிமுகப்படுத்தப்பட்டது. 1860-ல் சகோதரத்துவ சபைகளும், 1885-ல் மெத்தடிஸ்ட் சபைகளும் மலேசியாவில் தோன்றின. மலேசியாவில் குடியேற வந்த தமிழர்களாலும் தமிழ் சபைகள் வளர்ந்தன. மலேசியாவில் தமிழர்களை எல்லாக் கிறிஸ்தவ சமயப்பிரிவுகளிலும் பார்க்கலாம். 1970-களில் பெந்தகொஸ்தே குழுக்கள் ஏனைய நாடுகளைப்போலவே இங்கும் வளர்ந்து தொடர்ந்து ஆதிக்கம் செலுத்தி வருகின்றன. சீர்திருத்த கிறிஸ்தவ சபைகளைத்தவிர ஏனைய எல்லாக் கிறிஸ்தவ சமயப்பிரிவுகளும் இவர்களின் போதனைகளினால் பாதிக்கப்பட்டு பெந்தகொஸ்தே போதனைகளையும், ஆராதனை முறைகளையும் தங்கள் சபைகளில் அனுமதித்துள்ளனர். தமிழ்நாட்டு பெந்தகொஸ்தே சுவிசேஷகர்கள் அற்புத ஊழியங்கள் நடத்த மலேசியாவுக்கு வந்துபோவது வருடாவருடம் நடக்கும் நிகழ்ச்சி. கடந்த வருட இறுதியில்கூட தினகரன் குடும்பசமேதராய் வந்து அற்புத ஊழியத்தை மலேசியாவில் நடத்திவைத்துள்ளார். 1986-ல் தோன்றிய மலேசியாவின் தேசிய சுவிசேஷ கிறிஸ்தவ ஐக்கியம் (National Evangelical Christian Fellowship) ரோமன் கத்தோலிக்க மதத்தையும் உள்ளடக்கி இயங்கி வருகின்றது.

மலேசியத் தமிழ் கிறிஸ்தவர்கள் மத்தியில் இருக்கும் இறையியல் கல்லூரிகள் பெரும்பாலும் பெந்தகொஸ்தே போதனைகளையும், புதிய சுவிசேஷக் கோட்பாடுகளையும் அளிப்பனவாக இருக்கின்றன. வேதபூர்வமான இறையியல் கல்வியைப் பெற்றுக்கொள்ள மலேசியாவில் தமிழர்களுக்கு வழியில்லை. வேதபூர்வமான போதனைகளை அளிக்கும் நூல்களையும் மலேசியாவில் தமிழில் காண்பது அரிது. மொத்தத்தில் மலேசிய தமிழர் மத்தியில் காணப்படும் கிறிஸ்தவ ஊழியங்கள் ஆத்மீக வளர்ச்சி குன்றிக் காணப்படுகின்றன.

மலேசியத் தமிழ் கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை 1800-களில் இருந்து கேள்விப்பட்டிருந்தபோதும் சீர்திருத்தப் போதனைகளை பெரிதும் அறியாமலேயே இருந்து வந்திருக்கின்றனர். கடந்த இருபது ஆண்டுக்காலப்பகுதியில் சீனர்கள் மத்தியில் தோன்றி ஆங்கில மொழியில் ஆராதனை நடத்திவரும் சீர்திருத்த பாப்திஸ்து சபைகள் சிலவற்றில் ஒரு சில தமிழ் கிறிஸ்தவர்கள் இருக்கிறார்கள். இருந்தபோதும், மலேசியத் தமிழ் கிறிஸ்தவர்கள் சீர்திருத்த போதனைகளை இன்னும் பெரியளவுக்கு அறியாதவர்களாகவே தொடர்ந்து இருந்து வருகின்றனர். 1999-ல் தமிழர்கள் மத்தியில் சீர்திருத்த பாப்திஸ்து சபை ஒன்று உருவானது. மலேசிய முதல் பாப்திஸ்து சமயப்பிரிவிலிருந்து வெளிவந்து சீர்திருத்தப் போதனைகளைப்பின்பற்றி, 1689 விசுவாச அறிக்கையின் அடிப்படையில் இந்த சபை இன்று இயங்கி வருகின்றது. எனக்குத் தெரிந்து மலேசியாவில் தமிழர்கள் மத்தியில் இருக்கும் சீர்திருத்த சபை இது ஒன்றே. இது ஒரு சிறு ஆரம்பமாக இருந்தாலும் பெந்தகொஸ்தே போதனைகளால் சீரழிந்து காணப்படும் தமிழ் சபைகள் மத்தியில் இது ஒரு சுட்டிவிளக்காக சுடர் விடுவது மகிழ்ச்சி தருகின்றது.

மலேசிய நாட்டில், தமிழர் மத்தியில் சீர்திருத்தப் போதனைகளும், சீர்திருத்த இறையியல் கல்விக்கான வசதியும் இல்லாமலிருப்பது வருந்தவேண்டிய காரியம். தமிழ் மக்கள் வாழும் ஏனைய நாடுகளைப்போலவே இங்கும் தமிழர்களை பெந்தகொஸ்தே போதனைகள் தொடர்ந்து அடிமைப்படுத்தி சீரழித்து வருகின்றன. சத்தியத்தை விளக்கிப் போதிக்கக்கூடிய பிரசங்கிகளைத் தேடிக்கண்டு-பிடிக்க வேண்டியுள்ளது. சீர்திருத்தப் போதனைகள் இன்று சீனக் கிறிஸ்தவர்கள் மத்தியில் சிறிது சிறிதாகப் பரவுவதுபோல தமிழ் கிறிஸ்தவர்களும் அதனை அரவணைத்துக்கொள்ளும் நாள் வரவேண்டும். சத்தியத்தை சத்தியமாகப் போதிக்கும் தமிழ் சபைகள் எழவேண்டும். மலேசியத் தமிழ் கிறிஸ்தவர்கள் மத்தியில் இன்றிருக்கும் ஆத்மீக இருள் அகன்று சீர்திருத்தப் பகலவன் சுடர்விட்டுப் பிரகாசிக்கும் நாளுக்காக நாம் ஜெபிப்போம்.

# இந்தியாவிற்காக . . .

இந்தியாவிற்காக கிறிஸ்தவர்கள் ஜெபிக்க வேண்டிய நேரமிது. நம்முடைய பத்திரிகையிலே ஜெபக்குறிப்புகளையோ, ஜெபத்தேவைகளையோ நீங்கள் இதுவரை பார்த்திருக்க மாட்டீர்கள். வேத சத்தியங்களை விளக்கிச் சொல்வதை மட்டுமே நோக்கமாகக் கொண்டு நாம் இந்தப் பணியைச் செய்து வருகிறோம். ஆனால், இந்திய நாட்டில் இன்று நிகழ்ந்து வரும் காரியங்கள் அந்நாட்டில் கிறிஸ்தவர்களுடைய வருங்காலத்தைப் பற்றி நம்மை சிந்திக்க வைத்திருக்கிறது. முக்கியமாக தமிழகத்தில் கொண்டு வரப்பட்டிருக்கும் கட்டாய மதமாற்றத் தடைச்சட்டம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இந்நிலமையில் இந்திய நாட்டிற்காகவும், கிறிஸ்தவ சபைகளுக்காகவும், ஆத்துமாக்களுக்காகவும் வாசகர்கள் ஜெபிக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். ஜெபத்தால் ஆகாத காரியம் ஒன்றுமில்லை. நமது தேவன் ஜெபம் கேட்கிறவராக இருக்கிறார். அப்போஸ்தலர்கள் சுவிசேஷம் சொல்லுவதற்கு தடை ஏற்பட்டபோது திருச்சபை ஜெபத்தில் கூடிவந்து அப்போஸ்தலர்கள் மேலும் வல்லமையுடன் சுவிசேஷத்தை சொல்ல ஆசீர்வதிக்கும்படியாக ஜெபித்தார்கள். (அப்போஸ். 4). அவர்கள் கேட்டுக்கொண்டபடியே சுவிசேஷத்தை வல்லமையோடு பிரசங்கிக்கும்படி அப்போஸ்தலர்களைக் கர்த்தர் ஆசீர்வதித்தார். இந்தியாவில் மெய்த்திருச்சபைகளின் ஊழியங்கள் தொடர்ந்து தடையில்லாது நடைபெறவும், சுவிசேஷத்தைக் கேட்டு மக்கள் மனந்திரும்பவும் கர்த்தருக்கு முன் நாம் மன்றாடவேண்டும். இந்தியாவை ஆளும் ஆட்சியாளர்களுக்காகவும், எதிரணியில் இருப்பவர்களுக்காகவும், அரசு ஊழியர்களுக்காகவும் ஜெபியுங்கள். அதிகாரத்தில் இருப்பவர்கள் அனைத்து மக்களையும் நீதியுடன் ஆள ஜெபியுங்கள் (ரோமர் 13; 1 தீமோ. 2:1-4). இந்திய நாட்டில் கர்த்தரின் சித்தம் நிறைவேற ஜெபியுங்கள்.

## ஸ்ரீ லங்காவில் எமது வெளியீடுகள்

*1689* விசுவாச அறிக்கை

சிறுவர்களுக்கான வேத உபதேசம்

பரிசுத்த வேதாகமம் -
ஆர். பாலா & ஜோன் ரூத்தர்

இந்நூல்களையும் வேறு பல நூல்களையும் கீழ்வரும் முகவரியோடு தொடர்புகொண்டு இலங்கை வாசகர்கள் பெற்றுக் கொள்ளலாம்.

*Diakrisis Book Service*
*19 Rajasinghe Road*
*Colombo 6, Sri Lanka*
*Phone / Fax: 503519*

## உங்கள் முகவரி மாறுகிறபோது...

நியூசிலாந்தில் இருந்து பத்திரிகையைப் பெற்றுக் கொள்ளும் வாசகர்கள், உங்களுடைய முகவரி மாறுகிற போது எங்களுக்கு எழுதித்தெரிவிக்க மறக்காதீர்கள். முகவரியில் ஆள் இல்லை என்று திரும்பிவரும் பத்திரிகைகள் ஒருசிலவேயானாலும் வீண் பொருள் செலவு ஏற்படுகின்றது. அத்தோடு உங்களுக்கும் பத்திரிகை தொடர்ந்து கிடைக்காமல் போய்விடும். இந்திய வாசகர்கள் உங்கள் முகவரியோடு பின் நம்பரையும் தெளிவாக எழுதி அனுப்புங்கள்.

# சாதிகள் இல்லையடி பாப்பா!

பாரதியார் பாடிய பாடலில் சில வரிகள் இவை - "சாதிகள் இல்லையடி பாப்பா, குலத்தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்". கிறிஸ்துவை அறிந்திராத பிராமணனான பாரதிகூட சமுதாய சீரழிவுக்கு சாதிகள் எந்தளவுக்குக் காரணமாக இருக்கின்றன என்று அறிந்து வைத்திருந்தான். சாதிகள் சமுதாயத்திற்கு செய்யும் தீங்கை விளக்கிப் பாடிய, எழுதிய அனேக தமிழ் கவிஞர்கள், அறிஞர்கள் இருக்கிறார்கள். சாதிகள் தமிழ் சமுதாயத்தைப் பிடித்துள்ள ஒரு பெரும் எய்ட்ஸ் வியாதி. அதை எதிர்த்துப் பல போராட்டங்களை சமூக சீர்த்திருத்தவாதிகள் நடத்தியிருந்தபோதும் அது அழிக்க முடியாத ஒரு நோயாக சமுதாயத்தைத் தொடர்ந்து சீரழித்துக் கொண்டிருக்கிறது. சாதி, தமிழ் சமுதாயத்தை மட்டுமல்லாமல் இந்திய சமுதாயத்தையே அழித்துக் கொண்டிருக்கும் ஒரு வியாதி. அதற்குக் காரணம் மதம் என்ற பெயரில் இந்திய சமுதாயத்தை ஆண்டு கொண்டிருக்கும் ஆரிய பார்ப்பனியம்தான். (இன்று அதற்கு இந்து மதம் என்று பெயர்). எங்கெல்லாம் ஆரிய (இந்து) மதம் ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறதோ அங்கெல்லாம் சாதியைப் பார்க்கலாம். ஸ்ரீலங்காவில் தமிழ் மக்கள் மத்தியிலும், மலேசிய, சிங்கப்பூர் தமிழர்கள் மத்தியிலும், கடல் கடந்து பிற நாடுகளில் வாழ்ந்து கொண்டிருக்கும் இந்தியர்கள், தமிழர்கள் மத்தியிலும் சாதியின் ஆட்சியைப் பார்க்கலாம். ஒரு முறை நான் அமெரிக்க பத்திரிகையில் வந்த விளம்பரம் ஒன்றைப் படிக்க நேர்ந்தது. அது ஒரு அணு விஞ்ஞானியான அமெரிக்க இந்தியர் கொடுத்திருந்த விளம்பரம். திருமணத்திற்கு பெண் தேடிக்கொண்டிருக்கும் அந்த இந்தியர் தனக்கு எந்த சாதியில், எந்த நட்சத்திரத்தில் பிறந்த, எந்த தோஷமுமில்லாத பெண் தேவை என்று அந்தப் பத்திரிகையில் விளம்பரம் கொடுத்திருந்தார். அணு விஞ்ஞான அறிவாலோ, மேலைத்தேசத்தாலோகூட அந்த மனிதனின் சாதிப்பற்றை அகற்ற முடியவில்லை. சமுதாயத்தை ஆட்டி வைக்கும சாத்தானின் ஆவி சாதி.

மனித குலம் இந்த உலகத்தில் சாதிப்பிரிவுகளோடு பிறக்கவில்லை என்பதை கிறிஸ்தவர்களான நாமறிவோம். ஒரே குலம் ஒருவனே தேவன் என்பது கிறிஸ்தவத்தின் போதனை. ஆனால், சாதி எப்படிப்பிறந்தது? மனித குலத்தின் ஒரு பகுதியினர் தங்களுடைய ஆதிக்கத்திற்காக இதை சமுதாயத்தில் நுழைத்தார்கள் என்பது வரலாறு கூறும் விளக்கம். இந்தியாவின் வடபகுதியில் வாழ்ந்த ஆரியர்கள் மத்தியில் சாதிப்பிரிவுகள் இருந்தன. அவர்கள் பல தெய்வ வழிபாட்டைக் கொண்டிருந்தார்கள். ஆரம்பத்தில் சமுதாயத்தில் நான்கு சாதிமுறைகளை இவர்கள் வகுத்தார்கள். பிராமணன், சத்திரியன், வைசியன், சூத்திரன் என்பதே இந்த சாதிமுறைகள். இந்த நான்கில் முதலாவதாக இருக்கும் பிராமணர்களே சமுதாயத்தில் முதலிடத்தைப் பெற்று, பிரம்மாவின் முகத்தில் இருந்து பிறந்த சாதியாகக்கருதப்பட்டு சமுதாயத்தில் வைதீகக்காரியங்களைச் செய்யும் அதிகாரமுள்ளவர்களாக இருந்தனர். ஆரம்பத்தில் இது தொழில் முறையாக மட்டுமே இருந்தது. பின்பு அது ஏனைய சாதிகளைவிட உயர்ந்த சாதியாகக் கருதப்பட்டு மற்ற சாதியினரை விலக்கி வைத்து அவற்றின் மீது ஆதிக்கம் செலுத்தும் சாதியாக மாறியது. இதற்கு அடுத்த ஸ்தானத்திலேயே நாடாளும்

*அரசர்களான சத்திரியர்களும், வணிகர்களான வைசியர்களும், உழைத்துத் தொழில் செய்யும் சாதாரண மக்களான சூத்திரர்களும் இருந்தனர். இந்த நான்கும் புற்றீசல்கள்போல் வளர்ந்து ஆயிரக்கணக்கான சாதிகளாக உருவெடுத்து சமுதாய மக்களில் ஒருவரை இன்னொருவரிடம் இருந்து பிரித்து வைக்கும் பேய்களாக குடிகொண்டன. அதிலும் பிராமண சாதி மற்ற சாதிகளைவிட உயர்ந்த தெய்வீக சாதியாக உருவெடுத்ததோடு ஏனைய சாதியினர் கிட்டவும் நெருங்கமுடியாத புனிதமான சாதியாகக் கருதப்பட்டது. இதனால்தான் பிராமணர்களின் மனுநீதியில், வேறு சாதிகளின் நிழல்பட்டுவிட்டால்கூட பிராமணன் உடனடியாகத் 'தீட்டுக்கழிக்கும்' முறை காணப்படுகின்றது. பிராமணன் இவ்வாறு சமுதாயத்தை ஆளும், ஆண்டான் சாதியாகமாற, சாதிகளின் கடைசிப்படியில் இருந்த சூத்திரர்கள் இழிவானவர்களாகக் கருதப்பட்டு மற்ற சாதியினரால் தள்ளிவைக்கப்பட்டு தாழ்ந்த சாதியினராக (தலித்துக்கள்) கருதப்படும் நிலையும் சமுதாயத்தில் தோன்றியது. ஆரியர்கள் இதற்கெல்லாம் உருவம் கொடுத்து, இவற்றைக் கடவுள் ஏற்படுத்திய புனித முறையாக தங்களுடைய வேதங்களிலும், சாஸ்திரங்களிலும் வர்ணித்து ஆரியமத தர்மமாக (இந்து தர்மம் என்பார்கள் இந்துத்துவாக்கள்) இந்திய சமுதாயத்தில் அறிமுகப்படுத்தினர். இதுவே பின்பு தமிழ்நாட்டிற்கும், ஸ்ரீலங்காவிற்கும், மலேசியாவிற்கும், சிங்கப்பூருக்கும், வேறு எங்கெல்லாம் இந்தியர்களும், தமிழர்களும் போனார்களோ அங்கெல்லாம் ஏற்றுமதி செய்யப்பட்டது. இங்கெல்லாம் ஆரிய பிராமணர்கள் தங்களுடைய ஆரிய (இந்து) தர்மத்தை நிலைநாட்டி சமுதாயத்தின் உயிர்நாடியான ஆத்மீகத்துறையை ஆண்டுவருகிறார்கள். இதனால்தான் அமெரிக்காவுக்குப் போய் அணுவிஞ்ஞானியாக வளர்ச்சியடையும் ஒரு கிராமத்து இந்தியனால் பல்விளக்குவதற்குப் பயன்படுத்திய வேப்பங்குச்சியை தூக்கி எறிந்துவிட்டு டூத்பிரஷ்சைப் பயன்படுத்த முடிந்தாலும், சாதியைத்தூக்கி எறிய முடியாமலிருக்கிறது. அது அவனுடைய இருதயத்தை ஆளும் கொடியவியாதி.*

*ஆரிய (இந்து) தர்மமும், சாதிப்பிரிவும் ஒன்றொடொன்று இணைந்த பிரிக்க முடியாத சகோதரர்கள். சாதிப்பிரிவுகளில்லாத ஆரிய (இந்து) மதத்தைப் பார்க்க முடியாது. ஆரிய (இந்து) மதத்தின் அடையாளமில்லாத சாதிகளையும் பார்க்க முடியாது. இது ஆரிய பிராமணர்கள் தங்களுடைய ஆதிக்கத்திற்காக வகுத்து வைத்துள்ள விதிமுறை. இதனால்தான் சாதிகளை வெறுத்த புத்தன் ஆரிய தர்மத்தை விட்டு வெளியே வந்து இன்னுமொரு தர்மத்தைத் தேட முயன்றான். ஆரிய தர்மத்தில் இருந்து பிரிந்த சீக்கியர்களின் மதத்தில் சாதிப்பிரிவைப் பார்க்க முடியாது. இந்த சாதிக்கொடுமை தாங்க முடியாததால்தான் இந்தியாவில் தாழ்த்தப்பட்ட சாதியினர் (தலித்துக்கள்) தங்களுடைய சமுதாய விடுதலைக்காக பிற மதங்களை நாடிச் செல்லும் நிலமை ஏற்பட்டது. சாதிப்பிரிவுக்கு இடம்கொடுக்காத கிறிஸ்தவத்திலும் அவர்களுக்கு நாட்டம் ஏற்பட்டது.*

*சமீபத்தில் இன்டர்நெட்டில் தமிழ் முரசு பத்திரிகையில் காஞ்சி சங்கராச்சாரியார் ஜயேந்திர சரஷ்வதிகள் சொல்லியிருந்த கருத்தை வாசிக்க நேர்ந்தது. "அந்தணர்கள் புனிதமானவர்கள், அரசர்கள்கூட அவர்களுடைய கால்களைக் கழுவியிருக்கிறார்கள். ஆகவே, பசுவுக்கும், பிராமணனுக்கும் நாம் வணக்கம் செலுத்த வேண்டும்" என்பது அந்தக் கருத்து. அவர் தொடர்ந்து "அந்தணர்கள் கோபம் கொண்டால் உலகத்துக்கே நல்லதில்லை" என்றும் பேசியிருக்கிறார். நான் இதுவரை சொன்னது எத்தனை உண்மை என்பதை மதிப்புக்குரிய சங்கராச்சாரியாரின் பேச்சு நிரூபிக்கிறதல்லவா? ஆரிய (இந்து) தர்மம் வருணாச்ரம பார்ப்பனிய, சாதிப்பிரிவுகளின் மூலம் சமுதாயத்தை ஒடுக்கி*

*அடிமை நிலையில் வைத்திருக்கிறது. ஆத்மீகத்துறையை மட்டுமல்லாமல் அது சமூக பொருளாதாரத்துறைகளையும் தன் கட்டுக்குள் வைத்திருக்கிறது.*

*கிறிஸ்தவர்களான நாம் இதுபற்றி ஏன் இந்தளவுக்கு சிந்திக்க வேண்டும் என்று கேட்கிறீர்களா? சகோதரர்களே, ஆரிய (இந்து) மார்க்கத்தைப் பின்பற்றுகிறவர்கள் எத்தகைய அடிமைத்தனமான சிந்தனையை ஆன்மீகம் என்ற பெயரில் சுமந்து வாழ்கிறார்கள் என்பதை நாம் விளங்கிக்கொண்டால்தான் அவர்களுக்கு விடுதலை கொடுக்கக்கூடிய இயேசுவின் சுவிசேஷத்தை நாம் நல்ல முறையில் அவர்களுக்கு அனுதாபத்துடன் சொல்ல முடியும். பிராமணருக்கும், பிராமணரல்லாத எல்லா சாதியினருக்கும் இயேசுவின் கிருபை இன்று தேவையாயிருக்கின்றது. சாதிப்பிரிவுகளிலிருந்தும், ஆண்டான், அடிமை என்ற பிரிவினையிலிருந்தும், பல தெய்வ வழிபாட்டிலிருந்தும், மூட நம்பிக்கைகளிலிருந்தும் அவர்களுக்கு மீட்பு இன்று அவசியம் தேவைப்படுகிறது. ஒரு மனிதன் இன்னொரு மனிதனை நாயைவிடக் கேவலமாக நடத்தும் சிந்தனைப்போக்கை உருவாக்கி இருக்கும் சாதிவெறியில் இருந்து தமிழ் மக்கள் விடுதலை அடைய இயேசு கிறிஸ்து அவர்களுக்கு இன்று அவசியம் தேவை.*

*வருணாச்ரம சாதிக்கொடுமையைப்பற்றி நாம் எழுதுவதற்கு இன்னுமொரு காரணம் கிறிஸ்தவர்கள் என்று தம்மை அழைத்துக் கொள்கிறவர்கள் மத்தியிலும், சில கிறிஸ்தவ சபைப்பிரிவுகள் மத்தியிலும் சாதிச்சிந்தனைகள் தொடரும் கொடுமையை வன்மையாகக் கண்டிப்பதற்காகவும்தான். தமிழ்நாட்டின் சில பகுதிகளில் C. S. I சபைகள் சிலவற்றிலும், ஏனைய சபைப்பிரிவுகளிலும், சாதி அடிப்படையில் சபை ஊழியங்கள் நடந்து வருகின்றன. "என்னுடைய சபையில் நாடார்கள் அதிகம். அதனால்தான் சபையில் பணம் புரளுகிறது" என்று சொன்ன, நாடார்கள் மத்தியில் ஊழியம் செய்யும் ஒரு போதகரை எனக்குத் தெரியும். சாதி பார்த்து ஊழியம் செய்கிறவர்கள் உண்மைக் கிறிஸ்தவர்களாக இருக்க முடியாது என்பதை நான் அடித்துச்சொல்ல விரும்புகிறேன். அவர்கள் கிறிஸ்துவையும், வேதத்தையும் நிந்திப்பவர்கள். சாதி பார்த்து திருமணம் செய்யும் ஒருவன் தன்னைக் கிறிஸ்தவன் என்று சொல்லிக் கொள்ள வெட்கப்பட வேண்டும். தேவனுடைய திருச்சபையிலும், பரலோகத்திலும் சாதிக்கு இடமில்லை. சாதிக் கொடுமைகள் வேண்டாம் என்று பாரதி மட்டும் சொல்லவில்லை. கிறிஸ்தவ வேதம் அதை அடியோடு வெறுக்கிறது, அருவருப்போடு பார்க்கிறது. யூதர்கள் இணைந்து வாழ மறுத்த சமாரியருக்கு சுவிஷேசத்தை அறிவித்து, அவர்களுக்கு மத்தியில் இருந்த இனப்பாகுபாடாகிய மதில் சுவரை இடித்து, இரு இன விசுவாசிகளையும் ஒரே சபைக்குள் சேர்ந்து வாழச் செய்தவர் இயேசு. யூதரல்லாத விசுவாசிகளோடு உணவருந்தத் தயங்கிய பேதுருவை எல்லோருக்கும் முன்பாகக் கடுமையாகக்கண்டித்துத் திருத்தினான் பவுல் அப்போஸ்தலன். ஏனெனில் கிறிஸ்தவத்தில் அதற்கு இடமில்லை.*

*சகோதரனே! நீ உன்னைக் கிறிஸ்தவன் என்று சொல்லிக் கொள்ளலாம். ஆனால் சாதிப்பற்றையும், உயர்வு தாழ்வு பார்க்கும் கொடூரமான சிந்தனையையும் உன் உள்ளத்தில் இருந்து வேரோடு அகற்றி இருக்கிறாயா? அது உன்னில் சாகும்வரை உனக்கு பரலோக வாழ்க்கையின் அனுபவம் கிடைக்காது என்பதை மறக்காதே. "வெள்ளை நிறத்தொரு பூனை - எங்கள் வீட்டில் வளருது கண்டீர்; பிள்ளைகள் பெற்றதப்பூனை; அவை பேருக்கொரு நிறமாகும். எந்த நிறமிருந்தாலும் - அவை யாவும் ஒரே தரமன்றோ? இந்த நிறம் சிறிதென்றும் - இஃது ஏற்றமென்றும் சொல்லலாமோ?" என்று அங்கலாய்த்தான் மகாகவி பாரதி. அவனால் ஏக்கத்தோடு பாடமட்டுந்தான் முடிந்தது.*

*கேள்வி: 66 ஐந்தாவது கட்டளை என்ன?*

*பதில்: ஐந்தாவது கட்டளை, உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கிற தேசத்திலே உன் நாட்கள் நீடித்திருப்பதற்கு உன் தகப்பனையும் தாயையும் கனம் பண்ணுவாயாக என்பதாகும்.*

*(யாத்திராகமம் 20:12)*

*கேள்வி: 67 ஐந்தாம் கட்டளை எதைப் போதிக்கின்றது?*

*பதில்: ஒவ்வொருவருக்கும் மேலதிகாரிகளாகவும், அவர்களுக்குக் கீழும், சமமாகவும் எல்லா இடங்களிலும் நம்மோடு வெவ்வேறுவிதமான உறவுகளையும் கொண்டிருக்கும் அனைவரையும் மதித்து, அவர்களுக்கு செய்ய வேண்டிய கடமைகள் அனைத்தையும் நிறைவேற்ற வேண்டும் என்கிறது ஐந்தாம் கட்டளை.*

*(ரோமர் 12:10; ரோமர் 12:1; எபேசியர் 5:21-23; 6:1-2, 5; 6:9; 1 பேதுரு 2:13, 14, 17)*

*கேள்வி: 68 ஐந்தாம் கட்டளை எதைத்தடை செய்கிறது??*

*பதில்: எல்லா இடங்களிலும், நம்மோடு வெவ்வேறுவிதமான உறவுகளையும் கொண்டிருப்பவர்களுக்கு நாம் கொடுக்க வேண்டிய மரியாதையையும், செய்ய வேண்டிய கடமைகளையும் நாம் புறக்கணிப்பதையும், அவர்களுக்கு எதிராக செயல்படுவதையும் ஐந்தாம் கட்டளை தடை செய்கிறது.*

*(ரோமர் 13:7-8; மத்தேயு 15:4-6; எசேக்கியல் 34:2)*

*கேள்வி 69 ஐந்தாம் கட்டளை வலியுறுத்தும் காரணிகள் யாவை?*

*பதில்: இக்கட்டளையைப் பின்பற்றுபவர்கள் இவ்வுலகில் நீண்ட நாட்களுக்கு நல்வாழ்க்கை வாழ்வார்கள் என்ற வாக்குத் தத்தத்தை ஐந்தாம் கட்டளை அளிக்கிறது.*

*(உபாகமம் 5:16; எபேசியர் 6:2-3)*

**விளக்கக்குறிப்பு:** *நீதியான எல்லா அதிகாரங்களும் கடவுளால் வகுக்கப்-பட்டவையாக இருக்கின்றன. அந்த வகையில் மனைவிமேல் கணவனுக்கு அதிகாரம் இருக்கிறது. பிள்ளைகள் மேல் பெற்றோர்களுக்கு அதிகாரம் இருக்கின்றது. இந்த அதிகாரங்களை சமுதாயத்தில் ஏற்படுத்தியவர் கர்த்தரே.*

*ஆரம்பத்தில் உலகத்தில் கர்த்தர் ஆணையும், பெண்ணையும் உருவாக்கி சமுதாயத்தை அமைத்தார். அவர்களே இந்த உலகின் முதல் தெய்வீக அமைப்பாக, நிறுவனமாக இருந்தனர். அதற்குப்பின் இந்த உலகில் கர்த்தர் அரசாங்கத்தையும், திருச்சபையையும் ஏற்படுத்தினார். அரசாங்கம் இந்த உலகில் நீதியைப் பின்பற்றி மக்களைப் பாதுகாப்பதற்காக ஏற்படுத்தப்பட்டது. சுவிசேஷத்தைப் பிரசங்கித்து ஆத்துமாக்கள் கர்த்தரை விசுவாசித்து ஆத்மீக வாழ்க்கையை வேதபூர்வமாக வாழ வழிகாட்டி நடத்தும்படியாக திருச்சபையை கர்த்தர் அமைத்தார்.*

*உலகில் முதன் முதலாக அமைக்கப்பட்ட குடும்பமே அதற்குப்பின்வந்த இரு அமைப்புகளான அரசாங்கம், திருச்சபை ஆகியவற்றிற்கு முன்னோடியாக இருந்தது. அத்தோடு குடும்பத்தில் இருந்த அமைப்பும், ஒழுங்குமே ஏனைய*

*இரு அமைப்புகளுக்கும் வழிகாட்டியாக இருந்தன. பாவம் நம்முடைய முதல் பெற்றோர்களைப் பாதித்ததால் கர்த்தர் உலகில் அரசாங்கத்தையும், திருச்சபையையும் ஏற்படுத்தினார். ஆகவே, குடும்பமாகிய அதிகாரத்தைக் கொண்டிருந்த அமைப்பின் அடிப்படையிலேயே அரசாங்கமும், திருச்சபையும் அமைக்கப்பட்டதாகக் கூறலாம். உலகத்தில் எங்குமே நாம் அதிகாரத்தைக்கொண்டிராத ஒரு அமைப்பையும், அதிகாரத்தின் கீழ்வராத ஒரு கூட்டத்தையும் பார்க்க முடியாது. சகல அதிகாரங்களையும் கொண்ட கர்த்தர், அதிகாரத்துக்குக் கட்டுப்படும்படியாகவே சமுதாயத்தை உலகில் ஏற்படுத்தியிருக்கிறார். தன்னுடைய அதிகாரத்துக்கு சமுதாயம் கட்டுப்படும்படியாக உலகில் கர்த்தர் ஏற்படுத்தியுள்ள சகல அதிகாரங்களுக்கும் நாம் அடிபணிய வேண்டும். அரசாங்கத்துக்கு நாம் கட்டுப்பட வேண்டும் என்று (ரோமர் 13:1-7) வேதம் போதிக்கின்றது. திருச்சபையில் மூப்பர்களினதும், உதவிக்காரர்களினதும் அதிகாரத்துக்கும் நாம் கட்டுப்பட வேண்டும் என்பதையும் வேதத்தில் வாசிக்கிறோம் (பிலிப்பியர் 1:1; அப்போஸ்தலர் 20:28; எபிரேயர் 13:17). இப்படியாக கர்த்தர் ஏற்படுத்தியுள்ள சகல அதிகாரங்களுக்கும் நாம் கட்டுப்பட வேண்டும் என்பதையே இந்த ஐந்தாம் கட்டளை போதிக்கிறது.*

*அதேநேரம் கர்த்தரைத்தவிர உலகில் வேறு எவரும் அல்லது எந்த அமைப்பும் சர்வ அதிகாரத்தையும் கொண்டிருக்கவில்லை என்பதையும் நாம் விளங்கிக்கொள்ள வேண்டும். அதிகாரிகள் அனைவரும் கர்த்தரின் அதிகாரத்தின் கீழ் இருக்கிறார்கள். கர்த்தர் சர்வ அதிகாரத்தையும் கொண்டிருந்து அனைவரையும் ஆள்கிறார். ஆகவே, சமுதாயத்தில் அதிகாரத்தில் இருப்பவர்களின் அதிகாரம் மட்டுப்பட்டுத்தப்பட்டுள்ளது. அத்தோடு சமுதாயத்தில் அதிகாரத்தில் இருப்பவர்கள் கர்த்தர் அனுமதித்திருக்கும்விதத்தில் மட்டுமே தங்களுடைய அதிகாரத்தைப் பயன்படுத்த முடியும். உதாரணமாக, அரசாங்கம் தனி மனிதனுடைய குடும்ப விஷயத்தில் தலையிட முடியாது. குடும்பத்திற்கு தலைவனாக கணவன் இருக்கிறான். அவனே குடும்பத்தலைவனாக குடும்பத்தை வழிநடத்தி செல்ல வேண்டியவன். அரசு, குடும்ப விடயங்களில் தலையிடக்கூடாது. இதை இன்று அரசாங்கங்கள் பின்பற்றத்தவறி பிள்ளைகளின் கல்வியில் பெற்றோர்களுக்கு இருக்கும் அதிகாரத்தைப் பறிக்க முயல்கின்றன. பிள்ளைகளின் கல்வி பெற்றோர்களின் அதிகாரத்துக்குள் இருப்பதாக வேதம் போதிக்கின்றது (உபாகமம் 6:6-15; எபேசியர் 6:4). அதேபோல் திருச்சபையும், திருச்சபைத்தலைவர்களும் இன்று அரசியலில் ஈடுபட்டு அரசியல் பேச்சுக்களைப் பேசிவருவதையும் பார்க்கிறோம். ஆத்மீகக் காரியங்களில் ஆத்துமாக்களை வழிநடத்துவதே திருச்சபைத்தலைவர்களின் பணி. தனிப்பட்ட முறையில் மூப்பர்களும், விசுவாசிகளும் அரசியல் அபிப்பிராயங்களைக் கொண்டிருக்கலாம். அவர்கள் சபையில் அரசியல் நடத்தப்பார்க்கக்கூடாது. திருச்சபைத்தலைவர்கள் சபையை அரசியலில் ஈடுபடுத்துவார்களானால் அவர்கள் கர்த்தர் கொடுத்திருக்கும் அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்துகிறவர்களாவார்கள்.*

*அதேநேரம், சிலவேளைகளில் கிறிஸ்தவர்கள், கர்த்தர் ஏற்படுத்தியிருக்கும் அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்பவர்களை எதிர்த்து நடக்க வேண்டியிருக்கும். யூதஅதிகாரிகள் பேதுருவையையும், அவரோடிருந்த அப்போஸ்தலர்களையும் பார்த்து இயேசுவின் பெயரில் இனிப்பிரசங்கம் செய்யக்கூடாது என்று கட்டளையிட்டபோது, பேதுரு அவர்களைப்பார்த்து நாங்கள் மனிதர்களைவிட கர்த்தருக்கே கீழ்ப்படிய வேண்டும் என்று கூறியதாக வேதத்தில் வாசிக்கிறோம் (அப்போஸ்தலர் 5:29). கர்த்தர் அதிகாரத்தைக் கொடுத்து*

சமுதாயத்தில் நியமித்திருக்கும் பெற்றோரும், மூப்பர்களும், அரச அதிகாரிகளும் தங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற அதிகாரத்தை மீறி நடப்பதற்கு அனுமதியில்லை. அவர்கள் தங்களுடைய அதிகாரத்தை மீறி நடக்கின்றபோது இன்னொரு அமைப்பின் அதிகாரத்தில் தலையிடுகிறவர்களாக இருக்கிறார்கள். இது ஐந்தாம் கட்டளையை மீறி நடக்கும் செயலாகும். இதனால்தான் சீர்திருத்தவாதியான மார்டின் லூதர் (Martin Luther) ரோமன் கத்தோலிக்க மதத்தலைவரான பாப்பரசர் வேதபோதனைகளை மீறி நடந்தபோது அதை எதிர்த்தார். கத்தோலிக்க பாப்பரசர் வேதத்தை மீறி நடந்ததால் தனக்கிருக்கும் அதிகாரத்தை இழந்தவராகிவிட்டார் என்று மார்டின் லூதர் சொன்னார். இதேபோல்தான் ஸ்கொட்லாந்தில் வாழ்ந்த ஜோன் நொக்ஸும் அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்து தான் பிரசங்கிப்பதைத் தடைசெய்ய முயன்ற அரசை எதிர்த்தார். கர்த்தர் சமுதாயத்தின் அமைப்புகளுக்கு கொடுத்திருக்கும் அதிகாரங்கள் மட்டுப்படுத்தப்பட்டவை என்பதை நாம் உணர வேண்டும். ஆகவே, சமுதாயத்தின் அமைப்புகள் கர்த்தருடைய வார்த்தைக்கு இணங்கி நடந்து தங்களுடைய அதிகாரங்களைப் பயன்படுத்துகிறவரை அவற்றிற்கு நாம் கீழப்படிந்து நடப்பது அவசியம். அதன் மூலம் நாம் ஐந்தாம் கட்டளைக்குக் கீழ்ப்படிகிறோம். இன்று சில நாடுகளில் அரசுக்கு எதிராக எதிர்ப்பு என்ற பெயரில் சிலர் நடத்தும் ஆர்ப்பாட்டங்களும், அதிகாரத்துக்கு கட்டுப்பட மறுப்பதும் வேதபூர்வமானதாகத் தெரியவில்லை. நமக்குப் பிடிக்கவில்லை என்பதற்காக நாம் ஒரு அரசாங்கம் எடுக்கும் தீர்மானங்களை எதிர்க்கக்-கூடாது. அத்தீர்மானங்கள் நேரடியாக வேதபோதனைகளுக்கு எதிரான-வையாக இருந்தால் மட்டுமே நம்முடைய எதிர்ப்பைக் காட்ட வேண்டும். சில வேளைகளின் அரசாங்கம் எடுக்கும் தீர்மானங்கள் நேரடியாக வேத-போதனைகளுக்கு முரணானவையாக இல்லாமல் இருந்து, அதேவேளை நமக்கு சில இடைஞ்சல்களை ஏற்படுத்துபவையாக இருந்துவிடலாம். அத்தகைய தீர்மானங்களுக்கு நாம் கட்டுப்பட்டுத்தான் ஆக வேண்டும். ஏனெனில் அத்தீர்-மானங்கள் நமக்கு சில தொல்லைகளை உருவாக்கியபோதும் கர்த்தருடைய வேதத்திற்கு நேரடி எதிர்ப்பைத் தெரிவிப்பவனவாக இருக்கவில்லை. அரசாங்-கங்கள் கர்த்தரால் அமைக்கப்பட்டிருப்பதால் அவற்றின் சட்டங்களுக்கு கட்டுப்பட்டு நடப்பதுடன், அரச அதிகாரிகளுக்கு நாம் மதிப்புக் கொடுத்து நடந்து அவர்கள் செய்யும் வேலைகளுக்கு நாம் உதவியாக இருக்க வேண்டும்.

கடைசியாக இந்தக்கட்டளைக்கு நாம் கீழப்படிந்தால் நீண்ட நாட்களுக்கு, நன்றாக வாழலாம் என்ற வாக்குத்தத்தத்தைக் கர்த்தர் தந்திருக்கிறார். இதை நாம் சரியாகப் புரிந்து கொள்வது அவசியம். அதாவது பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு வேத அடிப்படையில் போதனைகளைக் கொடுக்காவிட்டால் அந்தப்பிள்ளைகள் வளர்ந்து நாட்டுக்குப் பிரயோசனமில்லாதவர்களாக வாழ்வார்கள். இதனால் சமுதாயத்துக்கும், அரசுக்கும் நன்மையில்லை. குடும்பமும், நாடும் நன்றாக வாழமுடியாது. குடும்பங்கள் சிறப்பானதாக இருந்தால், நாடு சிறப்பானதாக இருக்கும், அரசு சிறப்பானதாக இருக்கும், இதைத்தான் இந்த வாக்குத்தத்தம் விளக்குகிறது. இன்று சில நாடுகளில் இருக்கும் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்யும் அரசுகளுக்கும், கேடான அரச ஊழியர்களுக்கும், சமுதாய ஊழலுக்கும் தனிப்பட்டவர்களும் குடும்பங்களும்தான் காரணம் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. ஐந்தாம் கட்டளைக்குக் கீழ்ப்படியாததால் கர்த்தர் அந்நாடுகளுக்குத் தந்திருக்கும் தண்டனை அது.

# வளமான வாலிபர் கூட்டங்கள்

திருச்சபைகள் தவறாமல் இன்று வாலிபர்களுக்காக கூட்டங்கள் நடத்தப்பட்டு வருவது நன்மையான காரியம். அதுவும் தமிழ் கிறிஸ்தவர்கள் மத்தியில் அத்தகைய கூட்டங்கள் அவசியம். கலாச்சாரம் இளைஞர்கள் ஒன்றுகூட முடியாதபடி தடுத்துவைத்திருக்கின்ற நிலமையில் கிறிஸ்தவ இளைஞர்கள் ஒருவரையொருவர் அறிந்து கொள்ள இத்தகைய கூட்டங்கள் தேவை. ஆனால், இன்று சில இடங்களில் இத்தகைய கூட்டங்கள் தவறான விதத்தில் நடத்தப்பட்டு வருகின்றன. சபைப் போதகர்களின் மேற்பார்வையே இல்லாமல் வாலிபர்கள் தம் மனம்போனபடி நடந்து கொள்ளும்வகையில இந்தக்கூட்டங்கள் நடந்து வருகின்றன. வேறு சில இடங்களில் சபைத்தொடர்பில்லாத நிறுவனங்களைச் சேர்ந்தோர் இந்தக் கூட்டங்களை நடத்தி தம் நிறுவனங்களுக்கு ஆள் சேர்த்துக்கொள்ளும் பணியில் ஈடுபட்டிருக்கிறார்கள். இது திருச்சபையைச் சேர்ந்த வாலிபர்கள் வளர உதவி செய்யாது. இன்னும் சில இடங்களில் இந்தக்கூட்டங்களில் ஆவிக்குரிய காரியங்களைவிட உலகஇச்சைக்குரிய காரியங்களே அதிகம் இடம்பிடிக்கின்றன.

வாலிபர்கள் கூட்டமென்ற உடனேயே பலருக்கு, இசையும், பாட்டும், படமும், விருந்தும், கேளிக்கையும் நினைவில் நர்த்தனமாடும். இதற்குக் காரணம் அநேக கூட்டங்களில் இவற்றிற்கே முதலிடம் கொடுக்கப்படுவதுதான். ஏன், இப்படி? என்று கேட்டால், இவைகளில்லாவிட்டால் வாலிபர்களாவது கூட்டங்களுக்கு வருவதாவது, என்று காரணம் சொல்லுவார்கள். உண்மைதான், வாலிபர் கூட்டங்களில் தாத்தா, பாட்டன்மார்களுக்கு இருக்கக்கூடிய அயிட்டங்கள் இருக்கக் கூடாதுதான். ஆனால், கிறிஸ்தவ வாலிபர் கூட்டங்கள் இந்த உலகத்து வாலிபர்கள் கூடிவருகின்ற கூட்டங்களைவிட வேறுபட்ட முறையில் இருக்கவேண்டியது அவசியம். வாலிபர் கூட்டங்களை நடத்த வேண்டுமென்பதற்காக ஒருபோதும் நடத்தக்கூடாது.

இன்றைய இளைய தலைமுறையினர் நாளைய தலைவர்கள். அவர்கள் கூரான கத்தியைப்போன்றவர்கள். கத்தியை நல்லவிதமாக பயன்படுத்தினால் மட்டுமே கையை வெட்டாது. வாலிபர் கூட்டம்தானே என்று அலட்சியமாக இருந்து அது எப்படியோ போகட்டும் என்று விட்டுவிட்டால் அது போதகர்களுடைய கையை வெட்டாமல் விடாது. போதகர்கள் வாலிபர் கூட்டங்கள் நடத்தப்படும் முறையையும், அவற்றில் நடக்கும் காரியங்களையும் மேற்பார்வை செய்வது அவசியம். நல்ல ஆலோசனைகளைத் தந்து வாலிபர் கூட்டங்கள் ஆவிக்குரியகூட்டங்களாக நடக்கத் துணை செய்ய வேண்டியது அவர்களுடைய கடமை. முக்கியமாக வாலிபர்கள் சந்திக்கும் பிரச்சினைகளையும், அவர்கள் வாழ்க்கையில் எதிர்நோக்கக்கூடிய அனைத்தையும் ஆவிக்குரியவிதத்தில் ஆராய்ந்து உதவும் வேதபோதனைகளைத் தரும் கூட்டங்களாக அவை அமைய வேண்டும். வாலிபர் கூட்டம்தானே என்று அலட்சியப்படுத்தி, அலங்கோலமான தலைமுடியும், ஜீன்சும், கையில் கிட்டாரும், வாயில் அரைகுறை ஆங்கிலமும், எந்த வேதஞானமும் இல்லாத யாரோ ஒருவரை பேச்சாளராக இருக்க அனுமதிக்கக்கூடாது. இன்று அநேக வாலிபர் கூட்டங்களில் சத்தான ஆவிக்குரிய செய்திகளை வாலிபர்கள் கேட்கக்கூடியதாக இல்லை. இத்தவறுக்கு சபைப்போதகர்களே முழுப்பொறுப்பு. இந்த நிலமை மாறி வாலிபர்கள் ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர இந்தக்கூட்டங்கள் உதவ வேண்டும்.

# உங்கள் சிந்தனைக்கு!

இந்தப்பகுதியில் இன்று சுகமளிப்புக்கூட்டங்கள் நடத்தி வருபவர்களைப் பற்றி நாமெல்லோரும் சிந்தித்துப் பார்க்கும்படியாக எழுதத்துணிந்திருக்கிறேன். கூட்டத்துக்கு வாருங்கள், உங்களுடைய தீராத தலைவலி நீங்கும், அற்புதங்கள் நடக்கும் என்ற அறிவிப்போடு சுகமளிப்புக் கூட்டங்கள் பட்டிதொட்டியெல்லாம் நடந்து வருகிறன. வீட்டில் கஞ்சி இல்லாமல் காயும் வயிறுகளும், மூடநம்பிக்கை நிறைந்தவர்களும் ஏதாவது நடந்தாலும் நடக்கும் என்ற நினைப்பில் இந்தக் கூட்டங்களுக்குப் போய்வருகிறார்கள். கிறிஸ்துவின் பெயரைச் சொல்லி நடந்து வரும் இந்தக்கூட்டங்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள் என்று என்னைக் கேட்காதவர்கள் இல்லை. நண்பர்களே! ஆரம்பத்திலேயே என் பதிலை சொல்லிவிட்டு அதற்குக் காரணம் என்ன என்பதை உங்களுக்கு விளக்குகிறேன். இந்த சுகமளிப்புக்கூட்டங்கள் வைத்து ஆத்துமாக்களின் பிணிகளைத் தீர்க்கும்படி இயேசுவோ, வேதமோ ஒருபோதும் கட்டளையிடவில்லை. கிறிஸ்தவ வேதத்தில் அப்படியொரு போதனையைப் பார்க்க முடியாது. அப்படி ஆண்டவர் சொல்லியிருந்தால் நானே இப்படிக் கூட்டங்கள் போடத் தொடங்கியிருப்பேன். இதை வாசித்த உடனேயே பெந்தகோஸ்தே ஆத்துமாக்கள், இவன் ஆவியில்லாதவன் அதனால்தான் இப்படிப்பேசுகிறான் என்று என்னைத் திட்டுவார்கள் என்பதும் எனக்குத்தெரியும்.

சுகமளிப்பு கூட்டம் நடத்துபவர்கள் எல்லாம் வேதபோதனைகளுக்கு தவறான விளக்கத்தைக் கொடுத்து தங்களை நியாயப்படுத்திக் கொள்கிறார்கள். உதாரணத்திற்கு, இயேசு நோய்களைத் தீர்த்திருக்கிறார், இறந்தவர்களை உயிர்த்தெழச்செய்திருக்கிறார், அவருடைய அப்போஸ்தலர்களும் அப்படிச் செய்திருக்கிறார்கள் என்று நியாயம் பேசுவார்கள். போதாததற்கு, இயேசு, தான் செய்ததைவிட பெரிய காரியங்களை எங்களை வைத்து செய்யப்போவதாகக் கூறியிருக்கிறார் என்றெல்லாம் சொல்லுவார்கள். இதெல்லாம் கேட்பதற்கு நன்றாய்த்தான் இருக்கிறது. ஆனால், வேதத்திற்கு இந்த முறையில் விளக்கம் கொடுக்கக்கூடாதென்பது இவர்களுக்குத் தெரியவில்லை. நாம் விளக்கிச் சொன்னாலும் இவர்கள் நம்புவதாயில்லை.

ஒரு கார் எஞ்சினுக்குரிய மெனுவலை (Manual) வைத்துக்கொண்டு அந்த எஞ்சின் பழுதானால் அதனை ரிப்பேர் செய்துவிடலாம். அந்த மெனுவல் நாம் என்ன செய்ய வேண்டும் என்று சகலதையும் விளக்கும். ஆனால், வேதப் புத்தகம் கார் எஞ்சின் மெனுவல் போன்றதல்ல. அதை வாசித்துப்பார்த்து அதிலுள்ளவர்கள் இப்படிச் செய்திருப்பதால் நாமும் அப்படிச் செய்யலாம் என்று எதையும் செய்யப்பார்க்க முடியாது. வேதம் வரலாற்றையும், போதனைகளையும் உள்ளடக்கி தேவகோபத்திலிருந்து மீண்டு கர்த்தரை நாம் எப்படி அறிந்து கொள்வது என்பதை நமக்கு விளக்கும் நூலாக இருக்கிறது. அதுவே அதன் அடிப்படைப் போதனை. வித்தை காட்டுபவர்களாகவும், மாஜிக் செய்பவர்களாகவும், பிணி தீர்ப்பவர்களாகவும் நம்மை மாற்றுவதற்காக கர்த்தர் வேதத்தைக் தரவில்லை. ஆத்துமாக்கள் இந்த உலகத்தில் அற்புதங்கள் செய்பவர்களாக மாற வேண்டும் என்பதல்ல கர்த்தரின் திட்டம். அவர்கள் இரட்சிப்பின் வழிகளை வேதத்தின் மூலம் அறிந்து கொண்டு, மனந்திரும்பி தன்னை விசுவாசிக்கின்ற அற்புதம் நடப்பதற்காக மட்டுமே அவர் வேதத்தைக் கொடுத்-

திருக்கிறார். பாவியாகிய ஒரு மனிதன் கிறிஸ்துவின் மூலம் பாவ விடுதலையை அடைந்து அவரை விசுவாசிப்பதைவிட மிகப்பெரிய அற்புதம் இந்த உலகத்தில் இருக்க முடியாது. அந்த அற்புதத்தையே ஆத்துமாக்களில் வேதம் செய்கிறது.

அற்புதம் செய்தால் ஆத்துமாக்கள் இயேசுவை விசுவாசிக்க இலகுவாக இருக்குமே என்று நினைப்பவர்கள் அநேகர். சரீரசுகத்தைக் கொடுத்து ஒரு மனிதனை இயேசுவை விசுவாசிக்க வைக்கமுடியாது. அதனால்தான் இயேசு, வேதத்தை விசுவாசிக்காதவன், இறந்துபோன எவரும் உயிர்த்தெழுந்தாலும்கூட கர்த்தரை விசுவாசிக்க மாட்டான் என்று சொன்னார். அற்புதங்களைப்பார்த்து பாவிகள் இரட்சிப்பை அடைவார்கள் என்று மனக்கணக்கு போட்டுக் கொண்டிருப்பவர்களுக்கு இயேசுவின் வார்த்தைகளில் நம்பிக்கை இல்லை. வேறுசிலர், சுகமளிப்புக்கூட்டங்களில் அற்புதங்கள் நடப்பதைப்பார்த்திருக்கிறேனே என்று சொல்லுவார்கள். சகோதரனே! சாத்தானும் ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்துக்கொள்வானே என்று பவுல் 2 கொரிந்தியரில் கூறியிருப்பதை மறந்துவிட்டாயா? மோசேக்கு முன் பாரோனின் மந்திரவாதிகளும் மோசே செய்த அதே அற்புதங்களைச் செய்து காட்டவில்லையா? அப்படியானால், சுகமளிப்புக்கூட்டம் நடத்துகிறவர்கள் எல்லாம் பிசாசின் ஊழியக்காரர்களா? என்று நீங்கள் கேட்கலாம். சகோதரர்களே! நானும் உங்களை ஒரு கேள்வி கேட்கிறேன். பதில் சொல்லுங்கள். நாம் வேதத்தை நம்ப வேண்டுமா? கண்ணால் காண்பவற்றை நம்ப வேண்டுமா? கண்ணால் பார்க்கக்கூடியதெல்லாம் கர்த்தருடைய செயல்கள் என்று நம்பினால் பாரோனின் மந்திரவாதிகள் செய்தவையும் உண்மையானவை என்றல்லவா ஆகிவிடும். வேதம் மட்டுமே என்றைக்கும் பொய் சொல்லாது. ஆகவே, வேதத்தை வைத்து எதையும் ஆராய்வதே சிறப்பானது. வேதம் சொல்கிறது, இயேசுவைப்போலவோ, அப்போஸ்தலர்களைப்போலவோ இன்று ஒரு தனிமனிதனும் அற்புதங்கள் செய்ய முடியாதென்று. அப்படியானால், அற்புதங்கள் செய்கிறோம் என்று சொல்கிறவர்கள் பேச்சை நாம் நம்பாமல் இருப்பதே கர்த்தருக்கு விசுவாசமாக இருப்பதற்கு அறிகுறி. அதைவிட்டு, அற்புதம் செய்கிறோம் என்று சொல்லுகிற மனிதர்களை நம்பினால் நமது விசுவாசம் கெட்டுவிடும். இயேசுவை விசுவாசித்து வளரவேண்டிய நாம் சுகமளிப்பு கூட்டம் நடத்துகின்ற மனிதர்களை விசுவாசித்து வீண்போய்விடக்கூடாது.

நண்பர்களே! உங்கள் வாழ்க்கையில் தொல்லைகள் மிகுந்திருக்கின்றன என்பது எனக்குப் புரிகிறது. ஆனால், அதற்கு வடிகால் சுகமளிப்புக்கூட்டம் நடத்தும் மனிதர்களல்ல. தொல்லைகளுக்கு மத்தியில் நம்மை வழிகாட்டி தைரியப்படுத்தக்கூடியது கர்த்தரின் வேதம் மட்டுமே. வேதத்தை அன்றாடம் வாசித்து ஜெபத்தில் உங்கள் தொல்லைகள் அனைத்தையும் கர்த்தர் முன்வைத்து அவருடைய பதிலுக்காக காத்து நிற்பீர்களானால் அற்புதங்களின் தேவனாகிய கர்த்தர் உங்களைப் பெலப்படுத்துவார். உங்களுக்கு வேறு எதுவுமே தேவையில்லை. இன்று அற்புதங்கள் செய்கிறோம், சுகமளிக்கிறோம் என்றுகூறி அநேக ஆத்துமாக்களை ஏமாற்றிப் பணம் சேர்த்துக்கொண்டிருக்கும் ஒரு பெருங்கூட்டமே தமிழர்கள் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கிறது. பத்தோடு பதினொன்றாக நீங்களும் ஏமாறிக்கொண்டிருப்பவர்கள் கூட்டத்தில் சேர்ந்துவிடாதீர்கள். முடிந்தால் பிசாசு தெரிந்து கொள்ளப்பட்டிருப்பவர்களையும் வஞ்சிக்கப்பார்ப்பான், என்ற இயேசுவின் வார்த்தைகளை மீண்டும் நினைவுகூறுங்கள். அவர் வழியில் மட்டும் போங்கள். வேதத்தை மட்டும் போதிக்கும் நல்ல திருச்சபையில் சேர்ந்து கர்த்தரை ஆராதனை செய்யுங்கள்!

# எண்ணங்கள்!

உங்களுடைய பத்திரிகை வாசிக்கக்கிடைத்தது. இதை வெளியிடும் உங்களுக்கு எப்படி நன்றி சொல்வது என்றே தெரியவில்லை. என்னுடைய வாழ்க்கை முன்றேற்றத்திற்கும், அன்றாட தியானத்துக்கும் திருமறைத்தீபம் உதவியாக இருக்கிறது. தயவு செய்து எனக்கு ஒரு பிரதி அனுப்பி வையுங்கள். *எம். பாஸ்கரன், தமிழ் நாடு.*

உங்களுடைய திருமறைத்தீபம் ஜூன்-ஜூலை 2002 இதழ் கிடைக்கப்பெற்று வாசித்தேன். இதில் 11ம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி “வேதம் அனுமதிக்காதவற்றை நாம் ஆராதனையில் சேர்ப்பது கர்த்தருக்கு விரோதமான அந்நிய அக்கினியை அவர் முன் வைப்பதாகும்” என்ற கருத்து எனக்கு மிகவும் பிடித்திருந்தது. எங்கள் சபையில் சமயம் கிடைத்தபோதெல்லாம் இந்தக்கருத்தை (சற்று கண்டிப்புடன்) நான் தெரிவிப்பது வழக்கம். தயவு செய்து எனக்கு பத்திரிகையை அனுப்பி வையுங்கள்.
*- தங்கசாமி, தமிழ் நாடு.*

தாங்கள் வெளியிடும் திருமறைத்தீபம் இதழை மற்றவர்களிடத்தில் இருந்து இரவல் வாங்கி படித்து வருகிறேன். என் சபை மக்களுக்கும் பத்திரிகையில் வாசிக்கும் சத்தியங்களைப் போதித்து வழி நடத்தி வருகிறேன். அது எங்கள் சபைக்கு மிகவும் பிரயோஜனமாக இருந்து வருகிறது. திருமறைத்தீபத்தை எனக்கும் அனுப்புவீர்களானால் நான் இரவல் வாங்குவதை நிறுத்திக் கொள்ளலாம். - *பாஸ்டர் ஏ. எஸ். ஜேம்ஸ், தமிழ் நாடு.*

நான் நான்காம் வருட இறையியல் மாணவன். கல்லூரி வாசகசாலையில் இருந்து இதுவரை திருமறைத்தீபத்தைப் படித்து அநேக சத்தியங்களையும், வரலாற்று நிகழ்ச்சிகளையும் அறிந்து கொண்டேன். அது எனது ஊழியத்துக்கு மிகவும் பயனுள்ளதாக அமைந்து வருகின்றது. அதைத்தொடர்ந்து வாசிக்கவும், அதன் போதனைகளை எடுத்துக்கூறவும் விரும்புகிறேன். கல்லூரி ஒழுங்குமுறைகளால் பத்திரிகையை நகல் எடுக்கக்கூடிய வாய்ப்பில்லை. இந்த வருடத்துடன் படிப்பு முடியப்போவதால் தொடர்ந்து பத்திரிகையைப்பெற்று அதன் போதனைகளால் பயன்பெற தயவுகூர்ந்து எனக்கும் ஒரு பிரதி அனுப்புங்கள். முடியுமானால் இதுவரை வந்துள்ள பிரதிகளையும் முடிந்தவரை கொடுத்துதவுங்கள்.
*- அ. அருள்ராஜ். தமிழ் நாடு.*

நான் தற்செயலாக தங்களுடைய காலாண்டு இதழை படிக்க நல்ல வாய்ப்பு கிடைத்தது. அது ஒரு நல்ல பத்திரிகை. சத்தியத்தைத் தெளிவாகப் போதிக்கிற ஊழியம் செய்யும் ஊழியர்களுக்கு மிக உதவியாக இருக்கக்கூடிய பத்திரிகை. நான் அதைத் தொடர்ந்து பெற்றுக்கொள்ள விரும்புகிறேன். தயவுசெய்து என் முகவிக்கு அனுப்பி உதவும்படிக் கேட்டுக் கொள்கிறேன். - *பாஸ்டர் தோமஸ் விக்டர், தமிழ் நாடு*

தாங்கள் வெளியிடும் திருமறைத்தீபம் மிகவும் பயனுள்ளதாக இருப்பதால் தயவுடன் பத்திரிகையை எனது முகவரிக்கு அனுப்பி வையுங்கள். நீண்ட நாட்களாக பத்திரிகையைத் தொடர்ந்து வாசிக்க வேண்டும் என்று ஆர்வத்துடன் இருந்தேன். ஆனாலும் இதுவரை எனக்குக் கிடைக்கவில்லை. நேரடியாக எனக்கு இதை நீங்கள் அனுப்பிவைத்து உதவுங்கள். - *கே. ஆர். நிருபராசன், ஸ்ரீ லங்கா.*

சீர்திருத்த போதனைகளைத் தரும் பின்வரும் நூல்கள் முதன் முறையாக இப்போது தமிழில் வெளிவந்திருக்கின்றன.

## 1689 விசுவாச அறிக்கை

(இந்திய ரூபாய் 24.00)

## சிறுவர்களுக்கான வேத உபதேசம்

(இந்திய ரூபாய் 14.00)

---

செப்டெம்பர் 2002

-புதிய வெளியீடு-

## பரிசுத்த வேதாகமம்

எழுதியவர்கள்: ஆர். பாலா, ஜோன் ரூத்தர்

(இந்திய ரூபாய் 20.00)

---

இந்தியாவில் இருப்பவர்கள் மட்டும் இந்நூல்களை கீழே தரப்பட்டுள்ள இந்திய முகவரிக்கு காசோலையோ அல்லது மணியார்டரோ அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம். தபால் செலவு தனி. அதையும் சேர்த்து அனுப்பவும்.

*Reformed Baptist Publications*
*22 T. P. K Main Road*
*Pykara, Madurai 625004*
*Tamil Nadu. S. India*
*Phone: (452) 2371659*

மலர் 9 ஜனவரி - மார்ச் 2003 இதழ் 1

1. ஏன் பிரசங்கம்?

2. சிந்திக்க வேண்டிய நேரம் இது

3. பவுலின் வார்த்தைகள் பரிசுத்த ஆவியின் வார்த்தைகளா?

4. சீர்திருத்த பாப்திஸ்து

5. துன்பமும், ஆறுதலும் (திருச்சபை வரலாறு)

6. பாவ உணர்வு சொட்டும் கண்ணீர்த்துளிகள்

7. மலேசிய மண்ணில் . . .

8. இந்தியாவிற்காக . . .

9. சாதிகள் இல்லையடி பாப்பா!

10. கிறிஸ்தவ கோட்பாடுகள்

11. வளமான வாலிபர் கூட்டங்கள்

12. உங்கள் சிந்தனைக்கு!

13. எண்ணங்கள்!

Te Rau Print